
June 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!
VARSHA
Ready to Cook
Idli / Dosa Wet Mix
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
1Kg
100% Pure Vegetarian
Traditional taste that Lingers

# ஐ தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**June 2025**

சுவடி — 15
ஓலை — 4


**வணக்கம் பல**

ஏதோவொரு காரணமாகப் பல நாடுகளில் போர்ச் சூழல் இருந்து வருகிறது. இது மக்களுக்கு அன்றாடம் நேரிடையாகவும் மறைமுகமாகவும் பெரும் இன்னல்களையும் அழிவையும் தருகிறது. எதைப் பற்றிய அக்கறையும் இல்லாமல், தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற எண்ணம் மனிதனுக்கு ஏற்படும்போது, நம்மைச் சுற்றியிருக்கும் பலருக்கும் பாதகத்தை விளைவிப்பது கண் கூடு!! நாடு என்று வரும்போது, உயர்வது எவ்வளவு முக்கியமோ அதை விடவும் முக்கியம், உலகின் பிற நாடுகளுக்கு அவை அச்சுறுத்தலாக அமைந்துவிடக்கூடாது.

வல்லரசுகள் ஒருபுறம் தம்மை பாதுகாத்துக் கொள்ளும் நடவடிக்கையில் பெரும் ஆர்வமும் அக்கறையும் காட்டுவது வரவேற்கத்தக்கதே! ஆனால், அதுவே பிற நாடுகளை அச்சுறுத்தும் விதமாகவும் அமைகின்ற போக்கு சரியானதாகாது! தம்மைப் பாதுகாக்க எடுக்கின்ற முனைப்பை விடவும் பிற நாடுகளின் விவகாரங்களில் தாமாக முன்வந்து சமாதானம் எனும் போர்வையில் உள்ளே நுழைந்து பல சங்கடங்களையும் தந்ததைக் கடந்த வரலாறு காட்டுகிறது. அதுவே இப்போதும் தொடர்கதையாக நீள்கிறது. பூனைக்கு மணிக்கட்டும் வேலையை உலக நாடுகளால் செய்ய இயலாமல் இருப்பது வேதனைக்குரிய ஒன்று.

உலகப் பந்தில் ஒரு பகுதிதான் தங்கள் நாடு என்பதை உணர்ந்து, நுனிக்கிளையில் அமர்ந்து, அடி மரத்தை வெட்டும் வேலையை செய்வது அறிவுடைமை ஆகாது. ‘இதனை இதனால் இவன் முடிப்பான் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல் எனும் குறலின் பொருள் உணர்ந்து நடத்தல் நலம். வல்லரசு நாடுகள் துருவப் பகுதியை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியில் இருக்கின்றன. இளைத்தவனை வலுத்தவன் வீழ்த்தி விடுவான் என்பது தெரிந்தாலும், வலுத்தவனை இன்னொருவன் வீழ்த்தி விடுவான் என்பது உலக நியதி! எங்கும் அன்பும் அமைதியும் செழிக்க வேண்டும் என்றால் நாடுகளிடையே இருக்கின்ற பிரிவினை களைந்து, ஒவ்வொருவரும், தேசத்தின் ஒரு பங்கு என்பதை உணர்ந்து சிந்தனையை உயர்த்திக் கொண்டால், உலகில் அன்பும் அமைதியும் வளமையும் நீளும்!

‘தீதும் நன்றும் பிறர் தர வாரா’ என்ற தமிழர் சித்தாந்தத்தை, வல்லரசு நாடுகளும், சில சிறு நாடுகளும்கூட உள்வாங்க வேண்டும். வழமை போல, சுற்றுச்சூழல், சுகாதாரப் பேணல், மருத்துவம், கலை, இலக்கியம் எனப் பண்பட்ட பல ஆக்கங்களைச் சுமந்தபடி மலர்கிறது ‘அய் தமிழ்.’ வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்!..

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...


பஞ்சமா? பாதுகாப்பா?

ஆட்டம் காட்டும் ஆளுமை!

தமிழே தமிழே

சுரண்டல் விளையாட்டு

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

ஞாயிறு போற்றுதும்

மருத்துவ தமிழ்

வாழ்ந்திடுவோம் மகிழ்ந்தே!



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam



**Contact us:**
*editor@ithamil.com*



(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# பஞ்சமா?

## 'கோல்டன் டோம்'

அமெரிக்காவை பாதுகாக்க ரூ.15 லட்சம் கோடியில் 'கோல்டன் டோம்' ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

அமெரிக்காவை ஏவுகணை தாக்குதலில் இருந்து பாதுகாக்க "கோல்டன் டோம்" திட்டம் 175 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் சுமார் ரூ.15 லட்சம் கோடி) மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

175 பில்லியன் டாலர் செலவு ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. முதல் கட்டமாக இத்திட்டத்திற்கு 25 பில்லியன் டாலரை ஒதுக்கீடு செய்யும் மசோதா முன்மொழியப்பட்டுள்ளது. எனது பதவிக் காலம் முடிவதற்குள் இந்த கோல்டன் டோம் திட்டத்தை செயல்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என்பதே எனது இலக்கு.

கோல்டன் டோம் திட்டத்தில் சேர கனடாவும் ஆர்வம் காட்டியுள்ளது. இந்த முயற்சியில் அமெரிக்கா அதன் வடக்கு அண்டை நாடுகளை ஆதரித்து செயல்படும். தேர்தல்




இதுகுறித்து அவர் வெள்ளை மாளிகையில் கூறியதாவது: வெளிநாட்டு அச்சுறுத்தல்களில் இருந்து அமெரிக்காவை பாதுகாக்கும் நோக்கில் " கோல்டன் டோம்" திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இந்த புதிய ஏவுகணை பாதுகாப்பு திட்டத்துக்கு ஒட்டுமொத்தமாக சுமார்

பிரச்சாரத்தின்போது அமெரிக்க மக்களுக்கு அதிநவீன ஏவுகணை பாதுகாப்பு கேடயத்தை உருவாக்குவேன் என்று உறுதியளித்திருந்தேன். தற்போது அதை நான் செயல்படுத்தியுள்ளேன். இவ்வாறு ட்ரம்ப் தெரிவித்தார்.

கோல்டன் டோம் திட்டம், நாட்டுக்குள்



# பாதுகாப்பா?

பேர்ன்ட் டெபஸ்மேன் ஜேஆர்

எதிர்காலத்தை கருத்தில் கொண்டு உருவாக்கப்படும் "கோல்டன் டோம்" ஏவுகணை பாதுகாப்பு அமைப்புக்கான வடிவமைப்பை அமெரிக்கா தேர்வு செய்துள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார். மேலும், தமது பதவிக்காலம் முடியும் போது அந்த அமைப்பு செயல்பாட்டுக்கு வரும் என்றும் அவர் கூறினார்.

ஜனவரியில், டொனால்ட் டிரம்ப் அதிபராகப் பதவியேற்ற சில நாட்களுக்குப் பிறகு, அவர் ஒரு புதிய வான் பாதுகாப்பு அமைப்புக்கான தனது திட்டங்களை அறிவித்தார். பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் கப்பல் ஏவுகணைகள் போன்ற "அதி நவீன" வான்வழி அச்சுறுத்தல்களிலிருந்து அமெரிக்காவைப் பாதுகாக்க இந்த அமைப்பு





உருவாக்கப்படுகின்றது. ஆரம்ப கட்டமாக, இந்த திட்டத்துக்கு 25 பில்லியன் டாலர் (18.7 பில்லியன் யூரோ) புதிய பட்ஜெட் மசோதாவில் ஒதுக்கப்பட்டுள்ளது.ஆனால் எதிர்காலத்தில், இதற்கான மொத்தச் செலவு இதைவிட கணிசமாக அதிகரிக்கும் என்று அரசாங்கம் மதிப்பிட்டுள்ளது.

தற்போது உள்ள பாதுகாப்பு அமைப்புகள், அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய எதிரிகளிடம் உள்ள அதிநவீன ஆயுதங்களை எதிர்க்கும்

ஊடுருவும் ஏவுகணைகளைக் கண்டறியவும், கண்காணிக்கவும் மற்றும் இடைமறித்து அழிக்கவும் திறன் கொண்ட செயற்கைக்கோள் அடிப்படையிலான வலையமைப்பை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. ஏவுகணை கண்காணிப்பு மற்றும் பதிலடிக்காக அர்ப்பணிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை நிலைநிறுத்துவதை இந்த அமைப்பு உள்ளடக்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

அளவுக்கு மேம்பட்டதாக இல்லை என்று அதிகாரிகள் எச்சரிக்கின்றனர்.

விண்வெளிப் படையின் ஜெனரல் மைக்கேல் குட்லின் இந்த திட்டத்தை மேற்பார்வையிடுவார் என்றும் அதிபர் டிரம்ப் அறிவித்தார். ஜெனரல் குட்லின் தற்போது விண்வெளிப் படையில் விண்வெளி நடவடிக்கைகளுக்கான துணைத் தலைவராக உள்ளார்.




டிரம்ப் இரண்டாவது முறையாக பதவியேற்ற ஏழு நாட்களுக்குள், வான்வழித் தாக்குதல்களைத் தடுக்கவும், அவற்றை எதிர்கொள்ளவும் உதவும் ஒரு அமைப்புக்கான திட்டங்களை சமர்ப்பிக்குமாறு பாதுகாப்புத் துறைக்கு உத்தரவிட்டார். இது அமெரிக்கா எதிர்கொள்ளும் "மிகப் பெரிய பேரழிவை என வெள்ளை மாளிகை தெரிவித்தது. அதிபர் அலுவலகத்தில் பேசிய டிரம்ப், இந்த அமைப்பு நிலம், கடல் மற்றும் விண்வெளி முழுவதும் "அதி நவீன" தொழில்நுட்பங்களைக் கொண்டிருக்கும். இதில் விண்வெளி அடிப்படையிலான சென்சார்கள் மற்றும் தடுப்புக் கருவிகளும் அடங்கும் என்றார். மேலும் இந்த அமைப்பில் சேர கனடா விருப்பம் தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில்,அப்போதைய கனட பாதுகாப்பு அமைச்சர் பில் பிளேர் வாஷிங்டனுக்கு பயணம் செய்தபோது, இந்த 'டோம்' திட்டத்தில் பங்கேற்க கனடா ஆர்வமாக இருப்பதாக கூறினார். அது அர்த்தமுள்ளதாக இருப்பதாகவும், தேசிய நலனுக்காக இருக்கும் என்றும், பிராந்தியத்தில் என்ன நடந்து கொண்டு இருக்கிறது என்பதை கனடா அறிந்திருக்க வேண்டும் என்றும், ஆர்க்டிக் பகுதிகளில் வரவிருக்கும் அச்சுறுத்தல்களை குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்த அமைப்பு "உலகின் மறுபக்கத்திலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளையோ அல்லது விண்வெளியில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகளையோ இடைமறித்து தாக்கும் திறன் கொண்டதாக இருக்கும்" என்று டிரம்ப் குறிப்பிட்டார். இந்த அமைப்பு 2011 முதல் ராக்கெட்டுகள் மற்றும் ஏவுகணைகளை தடுக்கும் இஸ்ரேலின் இரும்பு டோம் பாதுகாப்பு அமைப்பால் கவரப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், கோல்டன் டோம் அதை விட பல மடங்கு பெரியது.

ஒலியின் வேகத்தை கடந்து இயங்கக்கூடிய ஹைப்பர்சோனிக் ஆயுதங்கள் மற்றும் விண்வெளியிலிருந்து ஏவுகணை குண்டுகளை வீசக்கூடிய சுற்றுப்பாதை குண்டுவீச்சு அமைப்புகள் (ஃபோப்ஸ் என அழைக்கப்படுவது) போன்ற பரவலான அச்சுறுத்தல்களை எதிர்க்கும் வகையில் இது வடிவமைக்கப்படுகிறது.

"அவை அனைத்தும் வான்வெளியில் இருந்து அகற்றப்படும்," என்று கூறிய டிரம்ப், அதன் "வெற்றி விகிதம் 100% க்கு மிக அருகில் உள்ளது." என்று தெரிவித்தார். ஏவுகணைகள் ஏவப்படுவதற்கு முன், அல்லது அவை வானில் பறக்கும் தருணத்தில் என பல்வேறு கட்டங்களில் அவற்றைத் தடுக்கும் திறனை அமெரிக்காவுக்கு அளிப்பதே, கோல்டன்




டோம் அமைப்பின் நோக்கம் என அமெரிக்க அதிகாரிகள் முன்பு கூறியிருந்தனர்.

இந்த அமைப்பின் பல்வேறு அம்சங்கள் அனைத்தும் ஒரே மைய கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் என்றும் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்திற்கு ஆரம்பகட்ட முதலீடாக 25 பில்லியன் டாலர் தேவைப்படும் என்றும், மொத்தமாக 175 பில்லியன் டாலர் வரை செலவாகும் என்றும் டிரம்ப் தெரிவித்தார். ஆரம்பகட்ட முதலீடான 25 பில்லியன் டாலர் என்பது, வரிகளுக்கான அவரது 'ஒன் பிக் பியூட்டிஃபுல் பில்' எனப்படும் மசோதாவின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அந்த மசோதா இன்னும் சட்டமாக நிறைவேற்றப்படவில்லை.


ஆனால், அமெரிக்க காங்கிரஸின் பட்ஜெட் அலுவலகம் தெரிவித்துள்ளபடி, அந்த அமைப்பில் விண்வெளி சார்ந்த பகுதிகளுக்கு மட்டும் 20 ஆண்டுகளில் அரசாங்கத்துக்கு 542 பில்லியன் டாலர் வரை செலவாகலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. ரஷ்யா மற்றும் சீனா உருவாக்கிய புதிய ஏவுகணை தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப தற்போது உள்ள பாதுகாப்பு அமைப்புகள் மேம்படவில்லை என்று பென்டகன்(அமெரிக்காவின் பாதுகாப்புத் துறை) அதிகாரிகள் நீண்ட காலமாக எச்சரித்து வருகின்றனர்.

"உண்மையில், தற்போது முழுமையான அமைப்பு எதுவும் இல்லை," என்று டிரம்ப் அதிபர் அலுவலகத்தில் கூறினார்.

"சில வகையான ஏவுகணைகள், சில பாதுகாப்பு அமைப்புகள் மட்டும் தான் உள்ளன. ஆனால் ஒருங்கிணைந்த முழுமையான அமைப்பு எதுவும் இல்லை... இதுபோன்ற திட்டம் இதுவரை எப்போதும் இருந்ததில்லை," என்று அவர் குறிப்பிட்டார். அமெரிக்க பாதுகாப்பு உளவுத்துறை சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், ஏவுகணை அச்சுறுத்தல்கள் எதிர்காலத்தில் "அளவிலும் , நுட்பத்திலும் அதிகரிக்கும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவும் ரஷ்யாவும், அமெரிக்க பாதுகாப்பு அமைப்புகளில் உள்ள "இடைவெளிகளை பயன்படுத்த" புதிய ஏவுகணை அமைப்புகளை தீவிரமாக வடிவமைத்து வருகின்றன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"அமெரிக்காவுக்கு மேல் ஒரு சிறிய அணுகுண்டு வெடித்தால் கூட அது பேரழிவான முடிவுகளைக் கொண்ட ஒரு மின்காந்த துடிப்பை உருவாக்கும். விமானங்கள் வானத்தில் இருந்து கீழே விழும். கையில் இருக்கும் மின்சாதனங்கள் தொடங்கி மருத்துவ உபகரணங்கள், நீரியல் அமைப்புகள் என அனைத்தும் பயனற்றதாகிப் போகும். அப்படி ஒன்று நிகழ்ந்தால் அமெரிக்கா 1,000 ஆண்டுகள் பின்னோக்கி செல்லும்." என்கிறார் வடக்கு கரோலினா மாகாணத்தின் மான்ட்ரீட் கல்லூரியில்




உள்ள எழுத்தாளரும் ஆயுத ஆராய்ச்சியாளருமான வில்லியம் ஃபோர்ட்ஸ்சென்.

"நாம் 100 ஆண்டுகள் பின்னோக்கி செல்ல மாட்டோம். நாம் அனைத்தையும் இழந்து விடுவோம், அதனை எவ்வாறு மறுகட்டுமானம் செய்வது என நமக்குத் தெரியாது. இது நாம் 1,000 ஆயிரம் ஆண்டுகள் பின்னோக்கிச் செல்வதற்கு சமமாகும். நாம் அனைத்தையும் ஆரம்பத்தில் இருந்து தொடங்க நேரிடும்" என்றார் அவர்.

இந்த அனுமானமான, அதே நேரம் சாத்தியமான அச்சுறுத்தலை எதிர்கொள்ள அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அடுத்த தலைமுறை ஏவுகணை பாதுகாப்பு கவசமான "கோல்டன் டோம்" என்பதை முன்னிறுத்தியுள்ளார்.

இத்தகைய கட்டமைப்பை உருவாக்குவது அவசியம் எனப் பல வல்லுநர்கள் ஒப்புக்கொள்கிற நிலையில், அதற்கான அதிக செலவினம் மற்றும் தளவாட சிக்கல்கள் ஆகியவை டிரம்பின் திட்டத்திற்குச் சவாலாக இருக்கும்.

"அமெரிக்காவுக்கான அயர்ன் டோம்" என முதலில் பெயரிடப்பட்டிருந்த இந்தத் திட்டம் தொடர்பான அரசாணை, அடுத்த தலைமுறை ஆயுதங்களின் அச்சுறுத்தல் என்பது அமெரிக்காவிற்கு மிகவும் தீவிரமான, சிக்கல் நிறைந்த, காலப்போக்கில் பேரழிவை உருவாக்கக் கூடியதாக மாறியுள்ளது என விவரித்துள்ளது.

வாஷிங்டனை தலைமையிடமாகக் கொண்ட மூலோபாய மற்றும் சர்வதேச கல்வி மையத்தைச் சேர்ந்த ஏவுகணை பாதுகாப்பு வல்லுநரான பாட்ரிக்ஜா பாசில்சிக், "ஏற்கெனவே உள்ள வான் பாதுகாப்பு அமைப்புகள் வட கொரியா போன்ற நாடுகள் பயன்படுத்தும் கண்டங்களுக்கு இடையேயான பாலிஸ்டிக் ஏவுகணைகளை (ஐசிபிஎம்) எதிர்கொள்ள தயாரிக்கப்பட்டவை. சக்தி வாய்ந்த நாடுகளான ரஷ்யாவும், சீனாவும் கடல் கடந்துள்ள எதிரிகளையும் தாக்கும் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதில் அதிக முதலீடு செய்து வருகின்றன.


அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் அடையாளம் கண்டுள்ள அச்சுறுத்தல்களில் ஹைபர்சோனிக் ஆயுதங்கள் ஒலியின் வேகத்தை விடவும் வேகமாக சென்று தாக்குதல் நடத்தும் திறன் படைத்தது. இவை அளவில் சிறிதாக இருந்தாலும் பெரும் சேதத்தை விளைவிக்கக் கூடியவை.

நம்முடைய எதிரிகள் நீண்ட தூரம் தாக்கும் திறன்களில் முதலீடு செய்து வருகின்றனர். அவை நாம் இத்தனை வருடங்களாக எதிர்கொண்டு வரும் நம்முடைய சாதாரண ஏவுகணைகள் போன்றவை அல்ல" என்றார்.

கோல்டன் டோம் எவ்வாறு இருக்கும்?

தற்போது ஆரம்ப கட்டத்தில் இருக்கும் கோல்டன் டோம் எவ்வாறு இருக்கும் என வெள்ளை மாளிகை மற்றும் பாதுகாப்பு துறை அதிகாரிகள் சில தகவல்களை வழங்கியுள்ளனர்.

கடந்த மே 20, டிரம்பைத் தொடர்ந்து பேசிய பாதுகாப்பு செயலாளர் பீட் ஹெக்செத் இந்த அமைப்பு "விண்வெளி சார்ந்த சென்சார்கள் மற்றும் இண்டர்செப்டர்கள் போன்றவற்றையும் உள்ளடக்கி நிலம், கடல் மற்றும் விண்வெளியைக் கடந்து" பல அடுக்குகள் கொண்டிருக்கும் என்று மட்டும் தெரிவித்தார். இந்த அமைப்பு பூமி மட்டுமல்லாது, விண்வெளியில் இருந்தும் கூட



ஏவப்படும் ஏவுகணைகளை தடுத்து நிறுத்தும் திறன் கொண்டிருக்கும் என்றார் டிரம்ப். இந்தத் திட்டத்தின் பல அம்சங்கள் புளோரிடா, இண்டியானா மற்றும் அலாஸ்கா எனத் தொலைதூர பிரதேசங்களில் அமைந்திருக்கும்.

கோல்டன் டோம் என்பது ஏற்கெனவே கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளைக் குறிவைத்து அமைக்கப்பட்டிருக்கும் கட்டமைப்பின் மீதே உருவாக்கப்படும் என நூற்றுக்கணக்கான கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் கப்பல்களில் ஏவப்படும் ஆயிரக்கணக்கான ஏவுகணைகளைச் சேர்த்து தங்களின் ஆயுதங்களை விரிவுபடுத்தியுள்ளன.

“தற்போதைய வான் பாதுகாப்பு அமைப்பு வட கொரியாவுக்காக உருவாக்கப்பட்டுள்ளது என நியூ அமெரிக்க பாதுகாப்பு மையத்தின் பாதுகாப்பு வல்லுநரான முனைவர் ஸ்டேசி பெட்டிஜான் தெரிவித்துள்ளார். “இவற்றால் ரஷ்யா அல்லது




விண்வெளிப் படை ஜெனரலும் இந்தத் திட்டத்தின் மேற்பார்வையாளருமான மைக்கேல் குட்லின், அமெரிக்க நாடாளுமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்திருந்தார். இந்த புதிய அமைப்பு கப்பல்களில் இருந்து ஏவப்படும் ஏவுகணைகள் மற்றும் இதர அச்சுறுத்தல்களை கண்டறிந்து தடுக்கும் பல அடுக்குகளைச் கொண்டிருக்கும். இதன்மூலம் ஏவுகணைகள் ஏவப்படுவதற்கு முன்பாக அல்லது ஏவப்பட்ட பிறகும் அதனை எந்த நிலையிலும் தடுத்து நிறுத்த முடியும்.

தற்போது அமெரிக்க ஏவுகணை பாதுகாப்பு மையம் அலாஸ்கா மற்றும் கலிபோர்னியாவில் உள்ள குறுகிய தூர ஏவுகணை தாக்குதல்களை தடுக்க வடிவமைக்கப்பட்ட 44 தரை சார்ந்த இண்டர்செப்டர்களை (ஏவுகணைகளை இடைமறித்து நிறுத்தும் அமைப்பு) சார்ந்தே உள்ளது. அமெரிக்க நிலப்பரப்பை ரஷ்யா அல்லது சீனா தாக்கினால் அதனைத் தடுப்பதற்கு தற்போது உள்ள அமைப்பு போதுமானதாக இருக்காது என வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். இரு நாடுகளும் சீனாவிடம் உள்ள ஆயுதங்களை இடைமறிக்க முடியாது” என்றார். நம்மை நோக்கி வருகின்ற ஏவுகணைகளுக்கு எதிராக குறைந்தபட்ச பாதுகாப்பை வழங்கக்கூடிய நூற்றுக்கணகான அல்லது ஆயிரக்கணக்கான விண்வெளி சார்ந்த தளங்கள் தேவைப்படும் என அமெரிக்க நாடாளுமன்ற ஆய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

டிரம்ப் கோல்டன் டோம் பற்றிய தன்னுடைய திட்டத்தை மார்ச் மாதம் நடைபெற்ற கூட்டு நாடாளுமன்ற கூட்டத்தில் வெளிப்படுத்தினார். அதைப்பற்றி குறிப்பிடுகிற போது, “இஸ்ரேல் அதை வைத்துள்ளது, மற்ற இடங்களிலும் அது உள்ளது, அமெரிக்காவும் அதை வைத்திருக்க வேண்டும்“ என்றார். 2011—ல் இருந்து ஏவுகணைகள் மற்றும் எறிகணைகளை இடைநிறுத்த இஸ்ரேல் பயன்படுத்தி வரும் அயர்ன் டோம் அமைப்பைத் தான் டிரம்ப் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் இஸ்ரேலின் அயர்ன் டோம் குறுகிய தூர அச்சுறுத்தல்களைத் தடுக்கவே வடிவமைக்கப்பட்டுள்ளது. டேவிட்ஸ் ஸ்லிங்




மற்றும் அரோ என்கிற இதர அமைப்புகள், இரான் மற்றும் ஏமனில் இருந்து ஹௌதிக்கள் செலுத்தும் பாலிஸ்டிக் ஏவுகணைகளைத் தடுக்கின்றன. அயர்ன் டோம் என்பது காஸா அல்லது தெற்கு லெபனானில் இருந்து வரும் எறிகணைகளை எதிர்கொள்ள உருவாக்கப்பட்டது என்கிறார் பாசில்சிக்.

கோல்டன் டோம் என்பது அதையும் கடந்து தொலைதூர ஏவுகணைகளையும் கண்டறியும் என்றார் அவர். அதனைச் சாத்தியமாக்க வெவ்வேறு திறன்களை ஒருங்கே சேர்க்க வேண்டிய தேவை உள்ளது. இவை அனைத்தையும் சேர்த்து கையாளும் கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு அமைப்பைப் பார்ப்பதற்கு நான் ஆவலாக இருக்கிறேன்" தெரிவித்த அவர், தற்போது அதுபோன்ற எதுவும் இல்லை என்றும் கூறினார். அந்த அமைப்பை உருவாக்குவது சிக்கலானது மற்றும் அதிக செலவு பிடிக்கக் கூடியதும் கூட.

கோல்டன் டோம் தன்னுடைய பதவிக் காலத்திற்குள் முடிக்கப்படும் என டிரம்ப் தெரிவித்தார். அதற்கு மொத்தமாக 175 பில்லியன் டாலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில் முதல்கட்ட முதலீடாக 25 பில்லியன் டாலர்கள் ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் டிரம்பின் மதிப்பீடு சிபிஓவின் மதிப்பீட்டுடன் தொடர்பில்லாமல் இருக்கிறது. அவர்களின் மதிப்பீட்டின்படி 20 ஆண்டுகளில் விண்வெளி சார்ந்த அமைப்புகளுக்கு மட்டுமே 542 பில்லியன் டாலர்கள் செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதன் மொத்த செலவு அமெரிக்க பாதுகாப்பு பட்ஜெட்டின் பெரும்பகுதியாகும் என வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

முனைவர் பெட்டிஜான் இதனைச் சாத்தியமற்றது என்கிறார். மேலும் அவர், "இது மிகவும் சிக்கலானது, இதில் பல அமைப்புகளை ஒருங்கிணைக்க வேண்டிய தேவை உள்ளது. இதன் ஒவ்வொரு கட்டமும் அதன் ஆபத்துகள், செலவுகள் மற்றும் கால அளவைக் கொண்டுள்ளன. மேலும் அவசரம் காட்டுவதால் கூடுதல் செலவாவதுடன் ஆபத்துகளையும் சேர்க்கும். நீங்கள் நன்றாக மதிப்பீடு செய்யப்படாத ஒன்றை உற்பத்தி செய்யப் போகிறீர்கள். அதில் தோல்விகள் ஏற்படும், நீங்கள் உற்பத்தி செய்யும் எதுவானாலும் அதில் பெரிய மாறுதல்கள் தேவைப்படும்" என்றார் அவர்.

கோல்டன் டோம் உருவாக்கம் என்பது புதிய ஆயுதப் போட்டிக்கு வழிவகுக்கும் என்கிற அச்சமும் எழுந்துள்ளது. அமெரிக்காவின் எதிரிகள் அதனை தகர்ப்பதற்கான வழிகளை கண்டுபிடிக்கும் முயற்சிகளை அதிகப்படுத்தி வருகின்றனர். இந்தத் திட்டம், விண்வெளியை ஒரு போர்க்களமாக மாற்றும் ஆபத்துகளை அதிகரித்துள்ளது என சீன வெளியுறவு செய்தித் தொடர்பாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார். ஆனால் அமெரிக்க பாதுகாப்பு கொள்கையை ஆய்வு செய்பவர்கள் இந்தக் கவலைகளை பெரிதாக்க வேண்டாம் என்கின்றனர். சாத்தியமான எதிரிகள் தங்களுடைய தாக்கும் திறன்களில் ஏற்கெனவே அதிகம் முதலீடு செய்து வருவதாக அவர்கள் வாதிடுகின்றனர்.


கோல்டன் டோம் என்பது நம்முடைய எதிரிகள் போடும் கணக்குகளை மாற்ற முயற்சிக்கிறது என்கிறார் பாசில்சிக். "உள்நாட்டு வான் மற்றும் ஏவுகணைப் பாதுகாப்பை மேம்படுத்துவது நம்மை எந்தக் காரணத்திற்காகவும் தாக்க நினைப்பவர்களின் நம்பிக்கையை குறைக்கும். பகுதியளவு முடிக்கப்பட்ட கோல்டன் டோம் கூட அச்சமூட்டும் காட்சிகள் நிகழாமல் தடுக்கும். "நான் பெருமூச்சு விடுவேன். நமக்கு அத்தகைய அமைப்பு தேவை. அதற்கு கோல்டன் டோம் தான் பதில்" என்றார்.

# கருத்துப் பட(ா)ம்

நன்றி: தினமலர்




## சொல்றாங்க... சொல்றாங்க...



"நெருப்புடன் விளையாடுகிறார் புதின்!"

**டிரம்ப்**

(ஆமாம்! உக்ரைனில் இரண்டு வருஷமா நெருப்பா எரியறார். அது இப்போதான் உங்க கண்ணுக்குத் தெரியுதா?)



"ஒத்திகை பார்க்காமல் படப்பிடிப்புக்குச் செல்ல மாட்டேன்"

**கமல்ஹாசன்**

(சரி, அதுக்கும் இப்போ எம்.பி.ஆகறதுக்கும் சம்பந்தம் இருக்குன்னு சொல்ல வர்றீங்களா?)


"யார் அந்த 'சார்?' முக்கியமான கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை"



**இ.பி.எஸ்.**

('சார்!...' கொடநாடு விவகாரமே இன்னும் தெரியலே 'சார்!...' இது அதுக்குள்ளே தெரிஞ்சுடுமா 'சார்...?')

"வித்தை காட்டும் குரங்குபோல உட்கார வைக்கப்பட்டோம். சமூக மாற்றம் சார்ந்த பேச்சுக்கு அவர்கள் செவிகொடுக்கவில்லை. அது தவறு எனப் பட்டது. இதற்காக இங்கு நாங்கள் வரவில்லை."



**மில்லா மேகி**

(அரே செல்லா... இப்படித்தான் எல்லா... ஜெயிச்சாங்களா? இது இல்லையே நல்லா... ஆனாலும் நீங்கா தில்லா... சொல்லிட்டீங்க மில்லா...)




# ஆட்டம்

### கனடாவின் புதிய பிரதமராகிறார் மார்க் கார்னி

கனடா நாடாளுமன்ற தேர்தலில் ஜஸ்டின் ட்ரூடோவின் லிபரல் கட்சி முன்னிலை பெற்று வருகிறது. அந்த கட்சியை சேர்ந்த இடைக்கால பிரதமராக இருக்கும் மார்க் கார்னி மீண்டும் பிரதமராகும் வாய்ப்பு பிரகாசமாகி உள்ளது. இந்நிலையில்தான் மார்க் கார்னி யார்? அவரது பின்னணி என்ன? என்பது பற்றி முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளது.




கனடாவின் பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ இருந்து வந்தார். இங்கு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒருமுறை நாடாளுமன்ற தேர்தல் என்பது நடக்கும். அதன்படி கடந்த 2015, 2019 2021 ஆகிய ஆண்டுகளில் நடந்த தேர்தல்களில் ஜஸ்டின் ட்ரூடோ லிபரல் கட்சி சார்பில் வெற்றி பெற்றார். அதன்பிறகு அவர் மீது அதிருப்தி ஏற்பட்டது.

ஜஸ்டின் ட்ரூடோவின் செல்வாக்கு சரிய தொடங்கியது. இந்தியா, அமெரிக்கா உடனான மோதல் என்பது ஜஸ்டின் ட்ரூடோவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது. இதையடுத்து வேறு வழியின்றி ஜஸ்டின் ட்ரூடோ தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இதையடுத்து இடைக்கால பிரதமராக லிபரல் கட்சியின் மார்க் கார்னி பொறுப்பேற்று செயல்பட்டு வந்தார்.

இந்நிலையில் தான் கனடா நாடாளுமன்ற தேர்தல் நேற்று நடந்தது. ஓட்டு எண்ணிக்கை இன்று நடந்து வருகிறது. கனடாவை பொறுத்தவரை லிபரல் மற்றும் கன்சர்வேட்டிவ் கட்சிகள் இடையே தான் போட்டி இருக்கிறது. கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் பிர்ரி பொய்லிரி என்பவரும், லிபரல் கட்சி சார்பில் மார்க் கார்னியும் பிரதமர் வேட்பாளராக போட்டியிட்டனர்.

#### லிபரல் கட்சி வெற்றி

கனடாவில் மொத்தம் 343 நாடாளுமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் தனித்து ஆட்சியை பிடிக்க வேண்டும் என்றால் ஒரு கட்சி 172 இடங்களில் வெற்றி பெற வேண்டும். ஓட்டு எண்ணிக்கையில் லிபரல் கட்சி தொடக்கம் முதலே முன்னிலை வகித்தது.

வாக்கு எண்ணிக்கை முடிவில் லிபரல் கட்சி 168 தொகுதிகளில் வென்றது. எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி 144 இடங்களை கைப்பற்றியது. பிளாக் கியுபசி கட்சி 23 தொகுதிகளிலும், ஜம்மித் சிங்கின் என்டிபி எனும் நியூ டெமாக்கிரட்டிக் கட்சி 7 இடங்களிலும், கிரீன் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றது. இருப்பினும் லிபரல் கட்சிக்கு




# காட்டும் ஆளுமை

சீன் கார்லன்


பெரும்பான்மை என்பது கிடைக்கவில்லை. பெரும்பான்மைக்கு 172 இடங்கள் தேவை என்ற நிலையில் அந்த கட்சி 168 இடங்களை மட்டும் கைப்பற்றியது. 4 இடங்கள் குறைவாக உள்ளது. இதனால் கனடாவின் இடைக்கால பிரதமராக உள்ள லிபரல் கட்சியின் மார்க் கார்னி மீண்டும் பிரதமராக பொறுப்பேற்பது உறுதியாகி உள்ளது. பெரும்பான்மை கிடைக்கும் பட்சத்தில் தனியாகவும், பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் பிற கட்சிகளின் ஆதரவிலும் ஆட்சியை பிடிக்க உள்ளார். இந்நிலையில தான் கனடாவின் புதிய பிரதமர் யார்? பின்னணி என்ன? என்பது பற்றிய முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதன்படி கனடாவின் புதிய பிரதமராக தேர்வாகும் மார்க் கார்னிக்கு இப்போது 60 வயது ஆகிறது. இவருக்கு 4 குழந்தைகள். இவர் கனடாவின் போர்ட் ஸ்மித்தில் உள்ள ஆர்க்டிக் பிரதேச பகுதியில் பிறந்தார். அதன்பிறகு எட்மான்டன் நகரில் வளர்ந்தார். சிறுவயதிலேயே ஹாக்கி போட்டியில் ஆர்வம் கொண்டிருந்தார். அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழகம் மற்றும் இங்கிலாந்தின் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தார். பொருளாதார மேதையாக உயர்ந்தார்.



பேங்க் ஆஃப் கனடா மற்றும் பேங்க் ஆஃப் இங்கிலாந்து ஆகிய வங்கிகளில் ஆளுநராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர். கடந்த 2008 ல் கனடா பொருளாதார நெருக்கடியில் சிக்கியது. அப்போது பேங்க் ஆஃப் கனடாவின் ஆளுநராக பொறுப்பெற்று பொருளாதார நெருக்கடியில் இருந்து கனடாவை மீட்டார். இவர் பொருளாதார கொள்கைகளை வகுப்பதிலும், முதலீடு திட்டங்களை வகுப்பதிலும் வல்லவர்.

கனடா தற்போது பொருளாதார நெருக்கடி மற்றும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பின் கூடுதல் வரி விதிப்பில் சிக்கி உள்ளது. இதற்கிடையே தான் அவர் இடைக்கால பிரதமராக தேர்வு செய்யப்பட்டார். தற்போது தேர்தலில் களமிறங்கி பிரதமராகவும் தேர்வாகி உள்ளார். இவருக்கு லிபரல் கட்சியில் அதிக ஆதரவு உள்ளது. பிரதமர் வேட்பாளர் யார்? என்பது தொடர்பாக கட்சிக்குள் ஓட்டெடுப்பு நடத்தப்பட்டபோது அவருக்கு 1 லட்சத்து 52




தலைவர்களும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

பிளஸ் பாயிண்ட்டான ட்ரூடோ ராஜினாமா

கனடாவை பொறுத்தவரை லிபரல் கட்சிக்கு எதிராக மக்கள் இருந்தனர். ஆனால் ஜஸ்டின் ட்ரூடோ முன்கூட்டியே தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இதனால் மக்கள் ஓரளவு சமாதானம் அடைந்தனர். அதோடு அடுத்த பிரதமர் வேட்பாளராக மார்க் கார்னி நிறுத்தப்பட்டதை கன்னட மக்கள் வரவேற்றனர். இதனால் மீண்டும் லிபரல் கட்சிக்கே வெற்றி கிடைத்துள்ளது. அதுமட்டுமின்றி கடந்த ஆண்டை விட லிபரல் கட்சிக்கு கூடுதல் இடம் கிடைத்துள்ளது.

ஆயிரம் பேர் ஓட்டளித்தனர். அதாவது 86 சதவீத ஓட்டுகளை பெற்று முன்னிலை பெற்ற மார்க் கார்னி இப்போது அந்த நாட்டின் பிரதமராக பொறுப்பேற்க உள்ளார்.

மேலும் இவர் டொனல்ட் டிரம்பின் எதிரியாக பார்க்கப்படுகிறார். அமெரிக்கா, கனடா அண்டை நாடுகளாக உள்ளன. டொனால்ட் டிரம்ப் அதிபரானதும் கனடாவுக்கு கூடுதல் வரிகளை விதித்தார். இதனை மார்க் கார்னி கடுமையாக விமர்சனம் செய்தார். மேலும் அமெரிக்காவின் 51வது மாகாணமாக கனடாவை இணைக்க டிரம்ப் விரும்பினார். அதற்கு உடன்பட மாட்டோம் என்று உறுதியாக கூறினார். அதுமட்டுமின்றி அமெரிக்கா, கனடா மக்களை வஞ்சிக்கிறது. டொனால்ட் டிரம்ப் நம்பிக்கை துரோகம் செய்துவிட்டார் என்று வெளிப்படையாக விமர்சனம் செய்தார். இப்படி டொனால்ட் டிரம்புக்கு எதிராக பேசி வரும் மார்க் கார்னி தற்போது பிரதமராகும் வாய்ப்பு பிரகாசமாகி உள்ளது.

இருப்பினும் அவர் பொருளாதார மேதை என்பதால் அமெரிக்காவை சமாளித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவார் என்ற எதிர்பார்ப்பு கனடா மக்களிடம் உள்ளது. இதனை அவர் கையாளுவதை வைத்து தான் அவரின் செல்வாக்கு என்பது கனடாவில் அதிகரிக்கும். இது உண்மையில் மார்க் கார்னிக்கு பெரும் சவாலாக பார்க்கப்படுகிறது. ஆனாலும் கூட இந்த சவாலை மார்க் கார்னி சமாளிப்பார் என்று கனடா மக்களும், அவரது லிபரல் கட்சி

கடந்த 2015 தேர்தலில் லிபரல் கட்சி 150 இடங்களிலும், கன்சர்வேட்டிவ் கட்சி 119 இடங்களிலும் வெற்றி பெற்றது. இந்த முறை இருக்கட்சிகளும் அதிக இடங்களை கைப்பற்றிய நிலையில் லிபரல் கட்சி மீண்டும் ஆட்சியை பிடிக்கிறது. மீண்டும் கன்சர்வேட்டிவ் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக செயல்பட உள்ளது. ஆனால், பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கத் தேவையான 172 இடங்களை அந்தக் கட்சி பெறுமா அல்லது வேறு கட்சியின் ஆதரவைப் பெற வேண்டுமா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

மார்க் கார்னி தமது வெற்றி உரையில், "நம் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில் அமெரிக்க அதிபர் டிரம்ப் நம்மை உடைக்க முயற்சிக்கிறார். அது ஒருபோதும் நடக்காது. அமெரிக்காவுடனான எங்கள் பழைய உறவு இப்போது முடிந்துவிட்டது. அமெரிக்கா செய்த துரோகத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியை நாங்கள் கடந்துவிட்டோம்" என்றார். இதன் பிறகு, அக்கட்சியின் பிரசாரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், கனடாவின் பிரதமராக ஒன்பது ஆண்டுகள் பதவி வகித்த ஜஸ்டின் ட்ரூடோ பதவி விலகியதை அடுத்து, மார்க் கார்னி லிபரல் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பிரதமரானார்.




ஜஸ்டின் ட்ரூடோவின் பதவிக் காலத்தில், இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவுகளில் மிகுந்த பதற்றம் நிலவியது, மேலும் இரு நாடுகளும் தங்கள் ராஜ்ஜீய உறவுகளை கணிசமாகக் குறைத்திருந்தன.

வெற்றிக்கு வழிவகுத்த டிரம்பின் கருத்துக்கள்

கனடா அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற வேண்டும் என்று டிரம்ப் பலமுறை கூறியுள்ளார். டொனால்ட் டிரம்பின் கொள்கைகளும் லிபரல் கட்சியின் வெற்றியில் ஒரு பங்கைக் கொண்டிருந்தன.

டிரம்ப் பலமுறை கனடாவைத் தூண்டிவிட்டு, அதை அமெரிக்காவின் 51வது மாநிலமாக மாற்றுவதாக குறிப்பிட்டார், இது கனட வாக்காளர்களை ஒன்றிணைத்தது என்று அவர் கருதுகிறார்.

கனடா அரசியலில் லிபரல் கட்சி கடந்த சில மாதங்களாக மிகுந்த அழுத்தத்தில் உள்ளது. சில மாதங்களுக்கு முன்பு வரை கிட்டத்தட்ட முடிவுக்கு வந்துவிட்டது என்று கருதப்பட்ட அக்கட்சி, இப்போது நான்காவது முறையாக ஆட்சி அமைப்பதற்கான சூழலில் உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மாதத் தொடக்கத்தில், தனது சொந்தக் கட்சியில் அழுத்தம் அதிகரித்து வந்ததால், ஜஸ்டின் ட்ரூடோ தேர்தலுக்கு சற்று முன்பு பிரதமர் பதவியில் இருந்து ராஜினாமா செய்தார்.

கனடாவின் பொறுப்பை கார்னி ஏற்றுக்கொண்டதிலிருந்து, அவருக்கு முன்பு பதவி வகித்த ட்ரூடோவுடன் ஒப்பிடும்போது இந்தியாவுடனான உறவுகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக ஆண்டனி ஜெர்க்கர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான உறவை 'மிக முக்கியமானது' என்று கனடாவின் முன்னாள் வங்கியாளரும், பிரதமராக தேர்வாகி உள்ள மார்க் கார்னி விவரித்தார். மேலும் அவர் மீண்டும் பிரதமரானால், இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்த முயற்சிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இந்தியாவைப் பற்றி கார்னியின் கருத்துக்கள் என்ன ?

தேர்தல் பிரசாரத்தின் போது கனடாவின் சேனல் ஒய் மீடியாவின் கேள்விக்கு பதிலளித்த கார்னி ,

"இந்தியாவுடனான உறவில் பதற்றம் இருப்பது தெளிவாகிறது, ஆனால் அது நம்மால் அல்ல. ஒருவருக்கொருவர் மரியாதையுடன் அதை மீண்டும் கட்டியெழுப்புவதே முன்னோக்கி செல்லும் வழி" என்றார் .

ஆட்சிக்கு வந்தால் இந்தியா—கனடா உறவுகளை மேம்படுத்த என்ன செய்வீர்கள் என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையிலான உறவு பல நிலைகளில் மிகவும் முக்கியமானது. தனிப்பட்ட உறவுகள், பொருளாதார மற்றும் மூலோபாய துறைகளிலும் கூட முக்கியமானது. இந்தியாவுடன் தனிப்பட்ட உறவுகளைக் கொண்ட பல்வேறு மக்கள் கனடாவில் உள்ளனர். உலகப் பொருளாதாரம் ஆட்டம் கண்டு, புதிய வடிவம் பெறும் இந்த நேரத்தில், இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகள் மிகப் பெரிய பங்கை வகிக்க முடியும் என்பதை எனது அனுபவத்திலிருந்து நான் கூறுகிறேன். வர்த்தகப் போர் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது என்றும் மார்க் கார்னி கூறினார்.




“வணிகப் போர் போன்ற எதிர்மறையாக நடந்த சம்பவங்கள், வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன என்று நான் நினைக்கிறேன். பிரதமராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டால், அந்த வாய்ப்புகளில் ஒன்றாக இதை எடுத்துக்கொண்டு செயல்பட விரும்புகிறேன்,” என மார்க் கார்னி தெரிவித்துள்ளார். இந்த அறிக்கை வாக்கெடுப்புக்கு சற்று முன்பு வெளியிடப்பட்டது. மேலும் இது கார்னியின் அரசாங்கம் இந்தியாவுடனான அதன் உறவுகளில் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது என்பதற்கான ஒரு முக்கிய அறிகுறியாகவும் உள்ளது.

இந்தியா குறித்த கார்னியின் பார்வை

ஆனால் கார்னி இது போன்ற கருத்தை தெரிவிப்பது முதல் முறை அல்ல. கடந்த மார்ச் மாதம், அவர் லிபரல் கட்சியின் தலைவராகும் போட்டியில் இருந்தபோது, ‘இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது’ பற்றிப் பேசியிருந்தார். மார்க் கார்னி பிரதமரானால், இந்தியாவுடனான வர்த்தக உறவுகளை மீட்டெடுப்பதாக, ஒத்த எண்ணம் கொண்ட நாடுகளுடன் கனடாவின் வர்த்தக உறவுகளைப் பன்முகப்படுத்துவது குறித்தும் அவர் பேசினார்.

“ஒத்த எண்ணம் கொண்ட நட்பு நாடுகளுடன் தனது வர்த்தக உறவை பன்முகப்படுத்த கனடாவுக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. இந்தியாவுடனான நமது உறவை மீண்டும் கட்டியெழுப்ப நமக்கு ஒரு வாய்ப்பு உள்ளது. அந்த வணிக உறவைச் சுற்றி பகிரப்பட்ட மதிப்பு உணர்வு இருக்க வேண்டும், நான் பிரதமரானால், அந்த வாய்ப்பை எதிர்நோக்கி உள்ளேன்,” என்று கார்னி கூறினார். மார்ச் மாதத்தில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தின் போது, ‘கனடாவுக்கு புதிய நண்பர்கள் மற்றும் கூட்டாளிகள் தேவை’ என்று அவர் கூறியிருந்தார். இது தொடர்பாக, அவர் இந்தியாவைக் குறிப்பிட்டிருந்தார். கனடாவில் உள்ள இந்திய மக்களுடன் தொடர்புகொள்வதில் மார்க் கார்னி நம்பிக்கை கொண்டுள்ளார்.

இந்த மாதம் ஏப்ரல் 6 ஆம் தேதி, அவர் டொராண்டோவில் உள்ள ஒரு இந்து கோவிலுக்குச் சென்று, ராம நவமி அன்று மக்களை வாழ்த்தினார். இந்த மாதம் ஏப்ரல் 14 ஆம் தேதி, பைசாக்கிக்கு வாழ்த்து தெரிவிக்க ஒட்டாவா சீக்கிய சங்க குருத்வாராவுக்குச் சென்ற கார்னி, அதன் படங்களை தனது எக்ஸ் கணக்கில் பகிர்ந்து கொண்டார்.

ஜஸ்டின் ட்ரூடோ பதவிக் காலத்தின் கடைசி கட்டத்தில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகளில் பதற்றம் நிலவியது. கனடாவில் காலிஸ்தான் ஆதரவுத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதே இரு நாடு உறவுகளில் ஏற்பட்ட கசப்புக்குக் காரணம். இந்த வழக்கில், நிஜ்ஜாரின் கொலையில் இந்திய உளவுத்துறையின் தொடர்புக்கு ‘நம்பகமான ஆதாரங்கள்’ இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சாட்டியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டை இந்தியா மறுத்திருந்தது. அன்றிலிருந்து, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மோசமான நிலைக்குச் சென்றன.

இரு நாடுகளும் பரஸ்பரம் தங்கள் தூதர்களை நாட்டை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொண்டன. தற்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மிக மோசமான கட்டத்தை கடந்து செல்கின்றன. ட்ரூடோ இந்தியா மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்தபோது, கனடாவில் உள்ள சீக்கிய சமூகத்தின் வாக்குகளைப் பெறுவதற்காக ட்ரூடோ இந்தியா மீது இவ்வளவு ஆக்ரோஷத்தைக் காட்டுகிறார் என்றும் கூறப்பட்டது. காலிஸ்தான் பிரிவினைவாதிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இந்திய அரசு




நீண்ட காலமாக கனடாவிடம் கேட்டு வருகிறது.

காலிஸ்தான் ஆதரவு வாக்கு வங்கி அரசியலை மனதில் கொண்டு, ட்ரூடோ அரசாங்கம் அதன் மீது மென்மையாக நடந்து கொள்கிறது என்று இந்தியா நம்புகிறது. வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் இதைக் கூறியுள்ளார். இந்தியா குறித்த ட்ரூடோவின் கொள்கைகளை விமர்சிப்பவர்கள், காவல்துறையினரின் விசாரணை முடிவடைவதற்கு முன்பே ட்ரூடோ இந்தியா மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்ததாகக் கூறினர். இதுவரை, ட்ரூடோவுடன் ஒப்பிடும்போது இந்தியாவைப் பற்றிய கார்னியின் கருத்துக்கள் மிகவும் நேர்மறையாக உள்ளன.

ஆனால் நிஜ்ஜார் போன்ற வழக்குகளில் மார்க் கார்னியின் அணுகுமுறை பற்றி அதிகம் தெரியவில்லை என்பதும் உண்மை. ஆனால், இந்தியாவுடனான உறவுகளை மீண்டும் சரி செய்வதற்கு ஆதரவாக மார்க் கார்னி உள்ளார் என்பது தெளிவாகிறது. இங்கிலாந்து வங்கியின் முன்னாள் ஆளுநராக இருந்தவர் மார்க் கார்னி. மத்திய வங்கியின் 300 ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றில், உயர் வங்கிப் பொறுப்பை வகித்த முதல் பிரிட்டன் அல்லாதவராகவும் கார்னி உள்ளார். 2008 நிதி நெருக்கடியின் போது கனடா வங்கியின் ஆளுநராக தனது நாட்டை அவர் முன்னர் வழிநடத்தினார். பெரும்பாலான பிரதமர் வேட்பாளர்களைப் போல் அல்லாமல், கார்னி இதற்கு முன்பு ஒருபோதும் அரசியல் பதவிகளை வகித்ததில்லை.

இருப்பினும், கடந்த மார்ச் மாதம் வெளியேறும் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை மாற்றுவதற்கான லிபரல் கட்சியின் தேர்தலில் அவர் எளிதாக வெற்றி பெற்றார். இப்போது அவர் வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு மீண்டும் பிரதமராக உள்ளார்.

உலகளாவிய பொருளாதார நெருக்கடிகளைக் கையாண்டதில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பற்றி பெருமையாகக் கூறியுள்ள கார்னி, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை எதிர்த்து நிற்கக்கூடிய தலைவராக கனடா மக்களால் பார்க்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உலகம் முழுவதும் பயணம் செய்து, நியூயார்க், லண்டன் மற்றும் டோக்கியோ போன்ற இடங்களில் அவர் பணிபுரிந்துள்ளார். மேலும் அவர் ஐரிஷ் மற்றும் கனேடிய குடியுரிமை இரண்டையும் பெற்றுள்ளார்.

2018 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் குடியுரிமையைப் பெற்ற கார்னி, சமீபத்தில் பிரதமருக்கு கனட குடியுரிமை மட்டுமே இருக்க வேண்டும் என்று கருதுவதால் தனது பிரிட்டிஷ் மற்றும் ஐரிஷ் குடியுரிமையை கைவிட விரும்புவதாகக் கூறினார். கார்னியின் தந்தை ஒரு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக இருந்தவர்.

உதவித்தொகை பெற்று ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்று படித்த கார்னி, 1995 ஆம் ஆண்டு, ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

“உள்நாட்டுப் போட்டியால், ஒரு நாட்டின் பொருளாதாரத்தை தேசிய அளவில் அதிக போட்டித்தன்மையுடன் மாற்ற முடியுமா?” என்பது தான் அவரது முனைவர் பட்ட ஆய்வறிக்கையின் தலைப்பு. அமெரிக்கா விதிக்கும் வரிகளை எதிர்கொண்டு, நாட்டுக்குள் வர்த்தகத்தை சீராக்கும் அவரது திறனைச் சோதிக்கும் முக்கியமான பிரச்னை இது.

# தமிழ்

## தொல்காப்பியர் காட்டும் பண்டைத் தமிழர் வாழ்க்கை நெறி

தொல்காப்பியம் என்னும் நூலை 'ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியன்' எனப் போற்றப்படுபவரும் தி.மு. (திருவள்ளுவருக்கு முன்) அறுநூற்றி எண்பது (680 — கி.மு.711) ஆண்டில் வாழ்ந்தவருமான தொல்காப்பியனார் இவ்வரிய இலக்கிய இலக்கண நூலைப் பாடியருளினார்.

இந்நூல் தொன்மை, செழுமை, வளம், செப்பம், வனப்பு, நாகரிகம், பெருநிலை போன்றவற்றுடன் தோன்றிக் காலத்தால் பழமை வாய்ந்த ஓர் உயிர் நூலாய் நம் மத்தியில் உலா வருகின்றது. இந்நூலை யாத்த தொல்காப்பியனார் தலைச் சங்க இறுதியிலும் இடைச் சங்கத் தொடக்கத்திலும் வாழ்ந்தவருமாவார். 'இடைச் சங்கத்தாருக்கும் கடைச் சங்கத்தாருக்கும் நூலாயிற்று தொல்காப்பியம்' என்பது நக்கீரனாரின் கூற்றாகும். 'தொல்காப்பியம் பண்டைத் தமிழர்களின் தொன்மையையும், நாகரிகச் சிறப்பையும் விளக்கும் பழம் பெருநூல்' என்று டாக்டர் மு. வரதராசனார் கூறியுள்ளார்.

தொல்காப்பியனார் ஒரு காப்பியக்குடியில் தோன்றியவரென்றும், அவர் இயற் பெயர் தொல்காப்பியர் எனவும் சான்றோர் கூறுவர். வேறு சிலர் இவரின் இயற்பெயர் 'திரணதூமாக்கினி' எனவும், 'சமதக்கினியாரின் புதல்வர்' எனவும் கூறுவர். குறுமுனி அகத்தியனாரின் பன்னிரு மாணாக்கர்களுள் முதல் மாணவன் தொல்காப்பியனார் எனவும் ஒரு கூற்றுண்டு. இன்னும், இவர் பரசுராமரின் உடன் பிறந்தவரென்றும் ஒரு கதையுமுண்டு.

தொல்காப்பியத்தை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும் அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒன்பது ஒன்பது இயல்களாக ஒருமித்து 27 இயல்கள் உள்ளன. எழுத்ததிகாரத்தில் 483 சூத்திரங்களும், சொல்லதிகாரத்தில் 463 சூத்திரங்களும், பொருளதிகாரத்தில் 656 சூத்திரங்களுமாக ஒருமித்து 1,602 சூத்திரங்கள் தொல்காப்பியத்தில் உள்ளன. ஆனால், இந்நூற் சூத்திரங்கள் 1,595 என இளம்பூரணரும், 1,611 என நச்சினார்க்கினியரும் வகுத்து உரையெழுதியுள்ளனர்.

இளம்பூரணர், பேராசிரியர், சேனாவரையர், கல்லாடர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையார்





# தமிழே

நாவலர் கா. விசயரத்தினம்

ஆகியோரும் இன்னும் பலரும் தொல்காப்பிய நூலுக்கு உரை எழுதியுள்ளனர். இவற்றுள் இளம்பூரணர் உரை ஒன்றே காலத்தால் முற்பட்டதும், முற்றாகக் கிடைப்பதும் ஆகும். இனி மேற்காட்டிய விடயம் தொடர்பில் தொல்காப்பியர் கூறும் செய்திகளையும் காண்போம். தமிழ்நாட்டு எல்லை வடக்கே திருவேங்கட மலையும், தெற்கே குமரியாறும், கிழக்கு மேற்குத் திசைகளில் கடலாகவும் அமைந்த எல்லைப் பரப்பே ஆசிரியர் தொல்காப்பியர் காலத்துத் தமிழ்நாடு என்றழைப்பர். ஆனால், தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரம் வழங்கிய பனம்பாரனார் கடல் எல்லைகளைக் குறிக்கவில்லை. அவர் பாயிரம் இவ்வாறு தொடங்குகின்றது.

'வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து .. ..' பனம்பாரனாரின் பாயிரத்தில் ஒரு சிறப்பு அம்சம் அமைந்திருப்பதை நாம் காணலாம். இங்கே ஆசிரியர் ஒரு விடயத்தை — அதாவது கிழக்கு, மேற்குத் திசைகளில் கடல் எல்லையாக அமைந்துள்ளதென்பதைச் சொல்லாமற் சொல்லிப் போகின்றார். வடக்கே நீண்ட தொடர் வேங்கட மலை. தெற்கே பாய்ந்தோடும் குமரியாறு. இது கடல் வரை சென்று சங்கமிக்கும். எனவே, கடல் எல்லையைக் கூறாமற் கூறியுள்ளார்.

இன்னும், வேங்கட மலைக்கும், குமரியாறுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு என்று குறிப்பிடுவது கிழக்கு, மேற்குத் திசைகளில் கடல் எல்லைவரை உள்ள நிலப்பரப்பே தமிழ் கூறும் நல்லுலகமாகும் என்பது தோன்றா நிற்கும். ஏழு திணைகள் நம் பண்டைத் தமிழர் இயற்கையோடு இணைந்து, பிணைந்து, ஒன்றறக் கலந்து, மகிழ்ந்து, இன்புற்று வாழ்ந்து வந்தனர். மேலும் நிலம் பற்றிக் கூறுகையில், திருமால் காக்கும் காடாகிய முல்லை இடமும், முருகவேள் காக்கும் மலையாகிய குறிஞ்சி இடமும், இந்திரன் காக்கும் வயலாகிய மருதம் இடமும், வருணன் காக்கும் பெரு மணலான நெய்தல் இடமும், முறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று முன்னோர்களால் மொழியப்பட்ட பெயர்கள் எனத் தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.



'மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'.
— *(பொருள். 05)*




தொல்காப்பியர் காலத்திற்குமுன் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகிய நால்வகை நிலங்கள் இருந்துள்ளமை தெளிவாகின்றது. ஆனால் காலப்போக்கில் முல்லையும், குறிஞ்சியும் முறைமுறை திரிந்து, நல்லியல்பு இழந்து, வெம்மையால் வளமை குன்றிப் போயுள்ள நிலத்தைப் 'பாலை' எனப் பெயரிட்டனர். இதன் பின்தான் நால்வகை நிலங்கள், ஐவகை நிலங்களாகவும், ஐந்திணைகளாகவும் பெயர் பெற்றன. பாலை பிறந்த கதையைச் சிலப்பதிகாரம் இவ்வாறு கூறுகின்றது.

'முல்லையும், குறிஞ்சியும், முறைமையின் திரிந்து
நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்துப்,
பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும். ' — (காடுகாண் காதை. 64 — 66)

முதற்பொருள்

முதற்பொருள் எனப்படுவது நிலமும், பொழுதும் ஆகிய இயற்கையென உலகவியலை அறிந்தோர் கூறுவரெனச் சூத்திரம் கூறும்.

முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே.'— (பொருள். 04)

நிலம் என்பது முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நிலங்களாக வகுக்கப்பட்டவையாம். பொழுது என்பது அந்த ஐவகை நிலம் சார்ந்தோருக்கு இன்ப உணர்வினைக் கொடுக்கின்ற பெரும்பொழுதும், சிறுபொழுதும் ஆகிய இரண்டுமாம்.

இன்னும், பெரும்பொழுதில் கூதிர், முன்பனி, வேனில், பின்பனி, வைகறை, கார் என்னும் ஆறு பருவங்கள் ஆகிய காலமும், சிறுபொழுதில் யாமம், நண்பகல், மாலை, எற்பாடு பொழுது, விடியல் ஆகிய பொழுதும் அடங்கும். இனிச் சூத்திரம் கூறும் பாங்கினையும் காண்போம்.

'காரும் மாலையும் முல்லை.'' — (பொருள். 06)

குறிஞ்சி, 'கூதிர் யாமம் என்மனார் புலவர்.' — (பொருள். 07)

'பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப.' — (பொருள். 08)

'வைகறை விடியன் மருதம்.' — (பொருள். 09)


எற்பாடு
நெய்தல் ஆதல் மெய்பெறத் தோன்றும். ' — (பொருள். 10)

'நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே.' — (பொருள். 11)

'பின்பனி தானும் உரித்தென மொழிப.' — (பொருள். 12)

நம் பண்டைத் தமிழர் நிலத்தை ஐவகைகளாக வகுத்து, அதற்குப் பெரும் பொழுதும், சிறு பொழுதும் அமைத்து, அவற்றுக்கு இதமான காலப்பகுதிகளும் கணித்து, அததற்கேற்ற இன்ப உணர்வுகளோடு ஒட்டி, உறவுகொண்டு பெரு வாழ்வு பெற்றனர் என்பது தௌ;ளத் தெளிவாகின்றது.

பண்டைத் தமிழர் வாழ்வியலை அகம், புறம் என வகுத்து இயற்கை வழி நின்று வாழ்ந்து காட்டியுள்ளனர். புறம் புறவாழ்வியலோடு இணைந்த ஆண்மை, வீரம் பற்றி எடுத்துக் கூறும். அகம் அகவாழ்வான இன்ப உணர்வுகளோடு இணைந்த இல்வாழ்வு பற்றி விபரிக்கும். மேலும் இதை ஒருதலைக் காமம் எனவும், அன்புடைக் காமம் எனவும், பொருந்தாக் காமம் எனவும் மூன்று பகுதிகளாக்கி அவற்றை முறையே கைக்கிளை எனவும், அன்பின் ஐந்திணை எனவும்,



பெருந்திணை எனவும், ஒருமித்து ஏழு திணைகளை ஆன்றோர் எடுத்துக் காட்டியுள்ளனர். இதைத் தொல்காப்பியர் சூத்திரத்தில் இவ்வண்ணம் அமைத்துள்ளர்.

'கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப.' —(பொருள். 01) அன்பின் ஐந்திணை

முல்லைத்திணை, குறிஞ்சித்திணை, பாலைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை ஆகியவற்றை அன்புடைக் காமம் என்றும் அன்பின் ஐந்திணை என்றும் கூறுவர். இதில் குறிஞ்சியில் புணர்தலும், முல்லையில் இருத்தலும், பாலையில் பிரிதலும், மருதத்தில் ஊடலும், நெய்தலில் இரங்கலும் போன்ற செய்திகளைத் தொல்காப்பியம் இவ்வாறு கூறும்.

'புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் அவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.' (பொருள் 16 )

ஐந்திணைகளுக்கும் நிலம் அமைந்துள்ளமை காண்க. இருத்தல் — தலைமகன் வரும்வரையும் ஆற்றியிருத்தல். இரங்கல் — ஆற்றாமை.

கைக்கிளை கைக்கிளை என்பது ஒரு தலைக் காமம். (கை — பக்கம், கிளை — உறவு) .இதை ஒவ்வாக் காமம் என்றும் கூறுவர். கைக்கிளை புணரா நிகழ்ச்சியாகும். கைக்கிளைக்கு நிலம் ஒதுக்கப்படவில்லை.

தாழ்வான ஒழுக்கங்களான காமவுணர்ச்சி தோன்றாத சிறிய பெண்ணிடத்துப் பாதுகாவல் இல்லாதபொழுது துன்பமுற்றுப் புகழ்தலும், பழித்தலும் ஆகிய இருசெயல்களாலும், தனக்கும், அவளுக்கும் சார்பானவற்றைச் சேர்த்து, அவள் சொற்கேளாமல் தானே சொல்லி இன்பமடைதல், பொருந்தித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பு ஆகுமென்று தொல்காப்பியர் சூத்திரம் அமைத்துள்ளார்.

'காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தான்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே.'— (பொருள். 53)

பெருந்திணை

பெருந்திணை என்பது ஒருவனும் ஒருத்தியும் ஒருவர்க்கொருவர் அன்பின்றிக் கூடி வாழும் முறையாகும். இதைப் பொருந்தாக் காமம் என்றும் கூறுவர். பெருந்திணை புணர்ந்த பின்னான நிகழ்ச்சியாகும். பெருந்திணைக்கும் நிலம் ஒதுக்கப்படவில்லை.

ஆண்மகனுக்கே உரிய மடலேறுதல், இளமை நீங்கி முதுமைக் காலத்தும் ஆசை மிகுதியால் தம்முள் கூடி இன்பம் துய்த்தல், தெளிவற்ற நிலையில் காமத்தின் கண் மிகுதிப்பட்டு நிற்றல், ஐந்திணையாகிய ஒத்த காமத்தின் மாறுபட்டு நிற்றல் ஆகிய நான்கும் பெருந்திணை எனத் தொல்காப்பியம் கூறும்.

'ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடும் தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே.' —(பொருள். 54)

பெருந்திணை தாழ்வான ஒழுக்கங்களைச் சார்ந்தது. ஷஇளமை தீர்திறம்| என்பது தலைவன் முதியவனாகித் தலைவி இளையவளாதலும், தலைவி முதியவளாகித் தலைவன் இளையவனாதலும், இவ்விருவரும் இளமைப் பருவம் நீங்கிய பின்பும் அறத்தின்மேல் மனம் நாடாது காமத்தின்மேல் மனம் நாடலும் என்னும் மூவகையாம். களவொழுக்கம் பூமிப் பந்தாகிய உலகம்



படைக்கப்பட்டதன் நோக்கம் அங்கு வாழும் அனைத்து உயிரினங்களின் இன்பம் கருதியேயாம். மனிதன் இன்பமுற்று வாழ்ந்தால் உலகமே இன்ப மயமாகி விடும். அவனின்றேல் உலகம் காடுதான். மனித வாழ்வுதான் உலகமாகின்றது.

இன்பம், பொருள், அறம் என்று கூறப்பட்ட அன்புடனிணைந்த ஐந்திணையில் (கைக்கிளை, பெருந்திணை நீங்கிய ஐந்திணையான குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல்) நிகழும் காமக் கூட்டமானது எட்டு வகை மணத்துள் அமைந்த யாழினையுடைய காந்திருவரது கூட்டத்தை ஒத்தது போலாகும் என்று களவொழுக்கத்தைப் பற்றித் தொல்காப்பியர் சூத்திரம் அமைத்துள்ளார்.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழத் துணைமையோர் இயல்பே'— (பொருள். 89)

மணம் எட்டாவன: (1) அசுரம், (2) இராக்கதம், (3) பைசாசம், (4) காந்திருவம், (5) பிரமம், (6) பிரசாபத்தியம். (7) ஆரிடம், (8) தெய்வம் ஆகியனவாம். இவற்றுள் அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகிய மூன்றும் கைக்கிளையைச் சாரும் என்று சூத்திரம் கூறும். 'முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே.'— (பொருள். 102)

இன்னும், மேற்காட்டிய எண்வகை மணத்துள் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம் ஆகிய நான்கும் பெருந்திணையைச் சாரும் என்று தொல்காப்பியம் கூறும்.பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே.' — (பொருள். 103)

எண்வகை மணத்துள் எஞ்சிய காந்திருவம் ஐந்திணைக்குரியதாம். ஐந்திணையோடு பொருந்தி வரும் யாழோர் கூட்டம், சிறப்புற்ற ஐவகை நிலத்தையும் பெற்றதனால், யாழோர் கூட்டம் ஐந்தெனப்படுமாம். நிலமும், காலமும் முதல் எனக் கூறப்பட்டுள்ளது. ஐவகைக் கூட்டமாவன:— களவு, கற்பு, உடன் போக்கு, இற்கிழத்தி, காமக்கிழத்தி/ காதற்பரத்தை என்பனவாம்.

'முதலாகு புணர்ந்த யாழோர் மேன
தவலரு சிறப்பின் ஐந்நிலம் பெறுமே.' — (பொருள். 104 )

இவ்வண்ணம் எண்வகை மணத்தையும் ஏழு திணைகளுக்கும் வகுக்கப்பட்டமை காண்க. களவொழுக்கக் காலவரை களவொழுக்கத்தில் ஈடுபட்டுள்ள பொழுது தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்திருக்கும் வழக்கம் இல்லை. களவுக் காதல் தெய்வீகமானது. அவ்வண்ணமே அன்றைய காதலர்கள் கருத்தொருமித்துச் செயற்பட்டனர். இருந்தும், தலைவன் தலைவியரிடையே தோன்றிய களவின் காலவரையை இரண்டு மாதம்தான் நிகழுமென்று இறையனார் களவியலில் வரையறை வகுக்கப்பட்டுள்ளது.

'களவினுள் தவிர்ச்சி வரைவின் நீட்டம்
திங்கள் இரண்டின் அகமென மொழிப.;— (நூற்பா. 32)

தலைவன் தலைவியரிடையே ஒரு தவறும் நடந்தேறிவிடக் கூடாதென்ற பேரவாக் கொண்ட பழந்தமிழறிஞர் இவ்வாறான வரையறையை வகுத்துள்ளமை போற்றற்குரியதாகும்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix • இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा



# சுரண்டல்

### பனி மூடிய ஆர்க்டிக்கில் என்ன உள்ளது?

ஆர்க்டிக்கைப் பற்றி யோசிக்கும் சீனா, ஆர்க்டிக்கில் தான் ஒரு முக்கிய சக்தியாவதில் உறுதியுடன் உள்ளது. இங்கு ரியல் எஸ்டேட் முதலீடு செய்து கட்டுமானத் திட்டங்களில் ஈடுபட்டு, நிரந்தரமான பிராந்திய இருப்பை நிறுவ சீனா போட்டியிடுகிறது. 2023—ஆம் ஆண்டு நார்வேயின் வடமுனையில் உள்ள சிறிய நகரத்திற்கு மேக்னஸ் மேலண்ட் மேயரான போது மூன்று சீனப் பிரதிநிதிகள் அவரை சந்தித்தனர். “சீனா வல்லரசு ஆக வேண்டும் என்பதால்தான் வந்தனர்” என்கிறார் அவர்.



சீனா தன்னை “ஆர்க்டிக்கிற்கு நெருக்கமான நாடு” என விவரித்துக் கொள்கிறது. ஆனால் அதன் வடக்கு திசையில் வெகு தூரத்தில் உள்ள பிராந்தியத்தின் தலைநகரான ஹார்பினும் இத்தாலியில் உள்ள வெனீஸும் ஒரே அட்சரேகையில் உள்ளன.உலகின் மிகவும் போட்டிக்குரிய இடமாக ஆர்க்டிக் வேகமாக மாறி வருகிறது. ரஷ்யா, ஐரோப்பா, இந்தியா மற்றும் அமெரிக்காவிடமிருந்து கடுமையான போட்டியை சந்திக்கிறது சீனா. ஆர்க்டிக்கிற்கான பந்தயம் தொடங்கியுள்ளது

சீனாவின் போலார் பட்டுப் பாதை

வேறு எந்த இடத்தையும்விட ஆர்க்டிக் நான்கு மடங்கு வேகமாக வெப்பமடைந்து வருவதாக காலநிலை விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இது சுற்றுச்சூழல் அமைப்புகள், வனவிலங்குகள் மற்றும் உள்ளூர் மக்களைப் பாதிக்கிறது. பூமியின் 4 சதவிகித நிலப்பரப்பில் பரவியுள்ள ஆர்க்டிக் பிராந்தியம் மிகவும் பெரியது. இந்த சுற்றுச்சூழல் மாற்றங்களின் பின்னணியில் ஆர்க்டிக்கில் புதிய வாய்ப்புகள் உருவாவதை உலக நாடுகள் பார்க்கின்றன.

ஆர்க்டிக்கில் உருகும் பனி அதன் முக்கியமான கனிமங்கள், எண்ணெய் மற்றும் வாயு உள்ளிட்ட இப்பிராந்தியத்தின் இயற்கை வளங்களை அணுகுவதை எளிதாக்குகிறது. இதுவரை பயன்படுத்தப்படாத 30 சதவிகித இயற்கை வாயுக்கள் ஆர்க்டிக்கில் காணப்படுகின்றன.இது புதிய கடல்சார் வர்த்தகப் பாதைகளுக்கான சாத்தியங்களை உருவாக்கி ஆசியா மற்றும் ஐரோப்பாவுக்கான பயண நேரத்தை பரவலாகக் குறைக்கிறது. ஏற்றுமதி வர்த்தகத்தில் நேரம் தான் பணம். ஆர்க்டிக்கில் கப்பல் போக்குவரத்துக்கு சீனா “போலார் பட்டுப் பாதை **(Polar Silk Road)**” என்கிற திட்டத்தை வடிவமைத்து வருகிறது.



# விளையாட்டு

## கத்யா அட்லர்

ஆர்க்டிக் வட்டத்திற்கு உள்ளே, நார்வேவின் பிரதான நிலப்பிரப்பின் வடமுனையில் அமைந்துள்ள இந்த முன்னாள் சுரங்க நகரம் பனி மலைகள் மற்றும் நீர்நிலைகள் சூழ அமைந்துள்ளது. மூடப்பட்ட கடைகள், உடைந்த ஜன்னல்கள் கொண்ட கைவிடப்பட்ட கிடங்குகள் இங்கு உள்ளன. இந்த நகரம் மறக்கப்பட்ட, கைவிடப்பட்ட உணர்வைத் தருகிறது.இப்படிப்பட்ட ஒரு நகரம், ஆசியாவிலிருந்து அதிக அளவிலான சரக்கு கப்பல்களை கையாளும் முதல் ஐரோப்பிய துறைமுகமாகிறது என்றால் துருவப்பகுதிகளில்




பனி எவ்வளவு வேகமாக உருகுகிறது என்பதை நீங்கள் கற்பனை செய்து கொள்ளலாம். இந்த நகரத்தின் துறைமுக இயக்குநர் டெர்ஜே ஜோர்கென்சன் ஒரு புதிய சர்வதேச துறைமுகத்தை கட்ட திட்டமிட்டுள்ளனர். இந்த இடத்தை வட ஐரோப்பாவின் சிங்கப்பூராக மாற்றுவதைப் பற்றி பேசும்போது அவரின் கண்கள் பிரகாசிக்கின்றன.

“நாங்கள் இங்கு வட அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியா ஆகிய மூன்று கண்டங்களும் சந்திக்கும் டிரான்ஸ்—ஷிப்மண்ட் துறைமுகம் ஒன்றை தான் கிர்கெனெஸில் கட்ட முயற்சிக்கிறோம். நாங்கள் வருகின்ற சரக்குகளை வேறு கப்பல்களுக்கு மாற்றுகிறோம் (மேலும் ஏற்றுமதி செய்வதற்கு). நாங்கள் எந்த பிரிட்டன் நிறுவனத்திற்கோ, சீன நிறுவனத்திற்கோ விற்க வேண்டியதில்லை. நார்வேவின் புதிய சட்டங்கள், அந்நாட்டின் பாதுகாப்பு நலன்களைப் பாதிக்கிறது என்றால் சொத்து அல்லது வணிகங்களை மாற்றுவதை தடை செய்கின்றன” என்றார்.

இந்தச் சட்டங்களின் கீழ் எத்தகைய கட்டுமானங்கள் வருகின்றன என்பது தொடர்பான அரசின் வழிகாட்டுதல்களுக்கு காத்திருப்பதாக அவர் தெரிவித்தார். சீனாவின் நோக்கங்கள் பற்றி மேயர் மேலண்ட் தெளிவாகவே உள்ளார். “எங்களுக்கு சீனாவுடனான உறவு வேண்டும். ஆனால் நாங்கள் சீனாவைச் சார்ந்திருக்க விரும்பவில்லை” என்று கூறினார். மேலும் அவர், “எதேச்சதிகார மற்றும் சர்வாதிகார அரசுகளை எவ்வளவு சார்ந்திருக்க வேண்டும் என்பதை




ஐரோப்பா தனக்குத் தானே கேட்டுக் கொள்ள வேண்டும்“ என்றார்.

ஆர்க்டிக்கில் இடத்தை பிடித்துவிடலாம் என்கிற சீனாவின் அணுகுமுறை ஐரோப்பாவில் நிராகரிக்கப்பட்டு வருகிறது. நார்வே மற்றும் சுவீடனில் துறைமுகங்கள் மற்றும் கிரீன்லாந்தில் விமான நிலையம் போன்றவற்றை வாங்க சீனா சமீபத்தில் எடுத்த முயற்சிகள் தடுக்கப்பட்டது இதற்கு ஒரு உதாரணம்.இது, துருவப்பகுதிகளில் இடம்பெறத் துடிக்கும், வளர்ந்து வரும் பெரிய வல்லரசான சீனாவை ஆர்க்டிக் பிராந்தியத்தின் மிகப்பெரிய சக்தியான ரஷ்யாவை நோக்கி தள்ளுகிறது.

ஆர்க்டிக் எல்லையில் பாதியை ரஷ்யா கட்டுப்படுத்துகிறது. இங்கு சீனாவின் முதலீடுகளை ரஷ்யா குவித்து வருகிறது.இரு நாடுகளும் ஆர்க்டிக்கில் ராணுவ ரீதியாகவும் ஒத்துழைத்து செயல்படுகின்றன. கடந்த அக்டோபர் மாதம் ரஷ்ய படைகளுடனான கூட்டு ரோந்து பணிகளின்போது சீன கடலோரக் காவல்படை முதல் முறையாக ஆர்க்டிக் பகுதிக்குள் நுழைந்தது. இம்மாதத்தின் தொடக்கத்தில் இரு நாடுகளும் கூட்டு ராணுவப் பயிற்சிகளை மேற்கொண்டன. ஜூலை மாதம் இரு நாடுகளில் இருந்து நீண்ட தூர போர் விமானங்கள், அமெரிக்காவின் அலாஸ்கா அருகே ஆர்க்டிக் பெருங்கடலில் ரோந்து சென்றன.

இது ஆர்க்டிக்கில் பயிற்சிகளை அதிகரித்துள்ள நேட்டோவைப் பார்த்து ரஷ்யாவும் சீனாவும் ‘எங்களாலும் இதைச் செய்ய முடியும்‘ என்று சொல்வதைப் போல அமைந்துள்ளது. ரஷ்யாவைத் தவிர ஆர்க்டிக் எல்லை நாடுகள் அனைத்தும் நேட்டோவில் உறுப்பினராக உள்ளனர். பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் யுக்ரேன் ஊடுருவலுக்குப் பிறகு தான் இணைந்தன. ஃப்ரிட்ஜோஃப் நான்சன் நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளரான ஆண்ட்ரியாஸ் ஆஸ்தேகன், ஆர்க்டிக்கை ரஷ்ய—சீன ஒத்துழைப்பிற்கான எளிய இலக்கு என விவரிக்கிறார்.

மேலும் அவர், “ரஷ்யாவிற்கு ஆர்க்டிக்கில் உள்ள திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு வளங்கள், எண்ணெய் வளங்கள் அல்லது வடக்கு கடல் பாதையை ஒரு கப்பல் போக்குவரத்து தடமாக மாற்ற விரும்புபவர்களின் முதலீடு தேவைப்படுகிறது. சீனா தான் அந்த சந்தை. இரு நாடுகளும் தங்களின் அரசியல், பொருளாதார மற்றும் ராணுவ ஒத்துழைப்பை விரிவாக்குவதற்கான வழிகளை ஆராய்ந்து வருகின்றன” என்றார்.ஆனால் ரஷ்யாவுடன் மிகவும் நெருக்கமாக சீனா விரும்பவில்லை. மேற்கத்திய நாடுகளின் பொருளாதார தடைகளைத் தவிர்த்து ஆர்க்டிக்கிற்கு உள்ளேயும் வெளியும் மேற்கத்திய நாடுகளுடன் வணிகம் செய்ய விரும்புகிறது சீனா. ரஷ்யாவுக்கும் இதில் சில தடைகள் உள்ளன.

ரஷ்யா—சீனா உறவை மிகைமதிப்பிடாமல் தவிர்க்க வேண்டும் என்கிறார் ஆஸ்தேகன். “ரஷ்யா அதன் ஆர்க்டிக் பகுதியில் மிக ஆழமாக சீனாவை அனுமதிப்பதில் கவனத்துடன் இருக்கிறது” என்றார் அவர். இங்குள்ள அதன் இயற்கை வளங்களை மிகுதியாக நம்பி இருக்கிறது ரஷ்யா. இங்கு அமெரிக்கா உள்ளிட்ட பிற ஆர்க்டிக் முதலீட்டாளர்களை ரஷ்யா குறிவைப்பதாக



தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவிற்கு ஆர்க்டிக் ஏன் முக்கியமாகிறது?

ரஷ்யா அதன் முக்கியமான ஆயுதங்களை சேமித்து வைக்க ஆர்க்டிக்கைச் சார்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக கோலா தீபகற்பத்தில் தான் அதன் அணுஆயுதங்களும் வடக்கு கடற்படையின் தலைமையிடமும் தளமும் அமைந்துள்ளன. நார்வேவில் கிர்கெனெஸ் நகர மக்கள் எப்போதும் ரஷ்யாவின் நிழலிலே வாழ்கின்றனர். ரஷ்ய எல்லை 10 நிமிடம் பயணிக்கும் தூரத்தில் தான் இருக்கிறது. கோலா தீபகற்கமும் அவர்களுக்கு நெருக்கத்தில் அமைந்துள்ளது.

பனிப்போர் காலங்களில், சோவியத் ஒன்றியம் மற்றும் மேற்குலக உளவாளிகளின் கூடாரமாக அறியப்பட்டது இந்த நகரம். ரஷ்யா ஆர்க்டிக்கை போர் பயிற்சி வழங்கவும் யுக்ரேனைத் தாக்க போர் விமானங்களை ஏவவும் பயன்படுத்துவதாக நார்வே நம்புகிறது. ரஷ்யாவுடன் நேரடிப் போரில் ஈடுபடவில்லையென்றாலும் அந்நாட்டுடன் 200 கிலோமீட்டர் எல்லையைப் பகிரும் நார்வே தாக்குதலுக்கு உள்ளாவதாக உணர்கிறது."இதை நாங்கள் உள்ளூரில் பார்க்கிறோம்" என்கிறார் கோல் ஜோர்ன் க்வில்லர். பஸ்விக் நதி ரஷ்யா மற்றும் நார்வேயை பிரிக்கிறது. இதற்கு முன் நார்வேயின் அடர் மஞ்சள் சோதனைச் சாவடியும் ரஷ்யாவின் சிவப்பு மற்றும் பச்சை சோதனைச் சாவடிகளும் அமைந்துள்ளன."யுக்ரேன் உடனான யுத்தம் தொடங்கியதில் இருந்து ஜிபிஎஸ் சிக்னல்களை முடக்குவது போன்ற சம்பவங்கள் அதிகமாக நிகழ்கின்றன. இதனால் வணிக விமானங்கள் தங்களின் நேவிகேசன் அமைப்புகளை மாற்ற வேண்டியதாயிற்று. நார்வேவிற்கு உளவாளிகள் அனுப்பப்படுவது தொடங்கி சிக்னல் உளவுவரை எல்லையோரத்தில் அனைத்து விதமான உளவு சம்பவங்களும் அதிகரித்துள்ளன" என்கிறார் கோல் க்வில்லர்.

நார்வேயும் அதன் நேட்டோ கூட்டாளிகளும் ஆர்க்டிக்கில் ரஷ்ய உளவு நீர்முழ்கிகள் மற்றும் இதர கப்பல்களின் நடமாட்டத்தை தொடர்ந்து கண்காணித்து வருகின்றன. அந்நாட்டின் பனிப்போர் கால கூட்டு ராணுவ மையத்திற்குச் செல்ல நமக்கு அனுமதி கிடைத்த பிறகு நார்வே இந்த அச்சுறுத்தலை எவ்வாறு கண்காணிக்கிறது என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. ஆர்க்டிக் வட்டத்தில் உள்ள போடோவில் உள்ள ஒரு மலைக்கு உள்ளே ஆழமான இடத்தில் இது அமைந்துள்ளது.

இங்கு பல சுரங்கப் பாதைகள் மற்றும் கண்காணிப்பு அறைகள் இருப்பதைப் பார்க்க முடிகிறது. இங்கு தான் ஆர்க்டிக் கடல் அருகே வருகிற சந்தேகத்திற்குரிய கப்பல்களைக் குறிவைத்து தரை, வான் மற்றும் கடலில் இருந்து நிகழ் நேர உளவுத் தகவல்களை நார்வே சேகரிக்கிறது. இவை அனைத்தும் நிகழ் நேரத்தில் நேட்டோ கூட்டாளிகளுடன் பகிரப்படுகிறது.


ஐரோப்பாவில் நுழையும் எந்த ரஷ்யக் கப்பலும் முதலில் நார்வே எல்லையைத் தாண்டி தான் வரவேண்டியுள்ளது. இந்த தலைமையிடத்தில் இருந்து தான் மேற்கு உலகிற்கு எதிரான ரஷ்ய போர்முறையின் ஒரு அங்கமான கடலுக்கு அடியில் உள்ள முக்கியமான கட்டமைப்புகளில் இருந்து உளவு மற்றும் சதிக்கான அறிகுறிகள் கண்காணிக்கப்படுகின்றன. இதன் இலக்குகள், கடலுக்குள் அடியில் உள்ள கண்டங்களை

இணைத்து தினமும் பல ட்ரில்லியன் டாலர்கள் மதிப்பிலான பொருளாதார பரிவர்த்தனைகளை அனுமதிக்கும் தொடர்பு கேபிள்கள், எண்ணெய் மற்றும் வாயு குழாய்களை உள்ளடக்கும்.

யுக்ரேன் யுத்தத்தைத் தொடர்ந்து ரஷ்யா மீது பொருளாதார தடைகள் விதிக்கப்பட்ட நிலையில் பிரிட்டன் உட்பட ஐரோப்பாவிற்கு இயற்கை எரிவாயுவை விநியோகம் செய்யும் முக்கிய நாடாக நார்வே உள்ளது. ஆர்க்டிக்கில் உள்ள அதன் ராணுவ திறன்களை ரஷ்யா நவீனப்படுத்தி வருகிறது. அங்கு முக்கியமான உளவு மற்றும் அணு ஆயுத நீர்மூழ்கிகளை ரஷ்யா வைத்துள்ளது. அவை கண்டறியப்படவில்லை தரப்பும் எண்ணவில்லை என நம்புகிறார் துணை அட்மிரல் ரூன் ஆண்டர்சன். ஆனால் யுக்ரேன் போல மற்ற இடங்களிலும் பதற்றங்கள் அதிகரித்து வருகிற நிலையில் ஆர்க்டிக்கிலும் அது பரவ சாத்தியங்கள் உள்ளன என்கிறார்.ரஷ்யாவுடன் எப்போதும் தொடர்பை வைத்துக் கொள்ள துணை அட்மிரலின் குழு ஒவ்வொரு புதன்கிழமை மதியமும் ரஷ்ய வடக்கு படையை அழைத்துப் பேசுகிறது.

ஸ்வால்பார்ட் நிலை என்ன?

நீங்கள் கிர்கெனெஸை விட்டு வட துருவம் நோக்கி சென்றால் பாதி தூரத்தில் நீங்கள் ஸ்வால்பார்ட்




என்றால் ஐரோப்பா முழுவதும் உள்ள தலைநகரங்களை குறிவைப்பதோடு மட்டுமல்லாது அமெரிக்காவையும் அச்சுறுத்தக்கூடும்.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஐரோப்பா அதன் பாதுகாப்பிற்கு அதிகம் செலவிட வேண்டும் எனக் கூறுகிறார். ஆனால் ஆர்க்டிக்கிற்குள் “பல தரப்பு நலன்கள் உள்ளன” என்கிறார் நார்வேயின் கூட்டு தலைமையிடத்தின் துணை அட்மிரலான ரூன் ஆண்டர்சன். “இது அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்பு பற்றியது. ரஷ்யாவின் அணு ஆயுத குவிப்பு, ரஷ்யா அங்கு நிறுவி வரும் கட்டமைப்புகள் ஐரோப்பாவைக் குறிவைத்து மட்டுமல்ல, அவை அமெரிக்காவையும் தான் குறிவைக்கின்றன” என்றார் அவர்.

ஆர்க்டிக்கில் மோதலைத் தொடங்க எந்த என்கிற நார்வேயின் தீவுக்கூட்டத்தைப் பார்க்கலாம். இது பனிப் பாறைகளின் இருப்பிடம், இங்கு மனிதர்களை விடவும் பனிக்கரடிகள் தான் அதிகமாக உள்ளன.ஆர்க்டிக் வளங்களுக்கான உலக நாடுகளின் போட்டியில் மத்தியில் ஸ்வால்பார்ட் அமைந்துள்ளது. இந்த தீவுக்கூட்டம் நார்வேவுக்குச் சொந்தமானது தான் என்றாலும் அனைத்து நாடுகளைச் சேர்ந்தவர்களும் இங்கு விசா இல்லாமல் வேலை செய்ய அனுமதிக்கும் ஒரு ஒப்பந்தம் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. இங்கு பணியில் உள்ளவர்கள் பெரும்பாலும் சுரங்கம், சுற்றுலா மற்றும் அறிவியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். இது இணக்கமானதாக தோன்றலாம், ஆனால் யுக்ரேனுடனான யுத்தத்திற்குப் பிறகு இங்குள்ள சில சமூகங்கள் தங்களின் தேசிய உணர்வுகளை வெளிப்படுத்துவதை கவனிக்கமுடிகிறது.

இது இங்குள்ள ரஷ்ய குடியேற்றத்தில்

இரண்டாம் உலகப் போரின் முடிவை நினைவு கூர்வதற்கான ராணுவப் பேரணி, ரஷ்ய கட்டமைப்புகள் மீது சோவியத் கொடிகளைப் பறக்கவிடுவது போன்றவற்றை உள்ளடக்கும். சீனா இங்குள்ள தனது ஸ்வால்பார்ட் ஆய்வு நிலையத்தை ராணுவ உளவு என்கிற இரட்டை நோக்கங்களுக்காகவும் பயன்படுத்துகிறது என்கிற சந்தேகமும் வலுத்துள்ளது. இதில் உண்மை என்னவென்று தெரியாத நிலையிலும் இங்குள்ள பூர்வகுடி சமூகங்களைச் சேர்ந்த மற்றவர்களும் ஐரோப்பிய நாடுகள் “காலநிலை நெருக்கடியை” சாக்காகப் பயன்படுத்தி பூர்வகுடி நிலங்களை ஊடுருவி அபகரிப்பதாக குற்றம்சாட்டுகின்றனர்.

“ஆர்க்டிக் என்பது எங்களுக்கு ஒரு தலைப்போ, விருப்பமோ, ஆய்வோ அல்ல. இது எங்களின் வாழ்கை, நிஜமான போராட்டங்கள், உணர்வுகள் மற்றும் மிகவும் நியாயமற்ற அநீதிகள். அரசாங்களும்




வெவ்வேறு நாடுகளின் ஆய்வு நிலையங்கள் மூலம் உளவு சேகரிப்பு நடக்கவில்லை என்று நினைப்பது வெகுளித்தனமானது. இங்கு நிச்சயம் உளவு சேகரிப்பு உள்ளது. இந்த உலகம் ஆர்க்டிக் அச்சத்தில் அகப்பட்டுள்ளது என நினைக்கிறேன்” என்கிறார் இப்பகுதியின் மேயர் டெர்ஜே அவுனேவிக்.

இந்தப் பகுதியில் உள்ள பூர்வகுடி சமூகங்களில் பாதிக்கும் மேலானோர் ரஷ்ய ஆர்க்டிக் பகுதியில் வசிக்கின்றனர். இவர்கள் இந்தப் பகுதியை வீடு என அழைக்கும் மக்களின் உரிமைகளை அங்கீகரிக்க அதிகாரத்தில் இருப்பவர்கள் தவறிவிட்டனர் என்றே உணர்கின்றனர். இன்குயிட் பூர்வகுடி சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிரீன்லாந்தைச் சேர்ந்த இளம் செயற்பாட்டாளரான மியூகி தோரானா, “டொனால்ட் டிரம்ப் தனது முதல் பதவிக் காலத்தில் தங்கள் நாட்டை வாங்கப்போவதாக அறிவித்தபோது நகைப்புடன் கடந்து விட்டோம். ஆனால் இம்முறை அது வித்தியாசமாக உள்ளது. தற்போதைய உலகளாவிய சூழலில், அதிகாரப் போட்டி மற்றும் வளங்களுக்கான போட்டியால் இது மேலும் தீவிரமாகியுள்ளது,” என்கிறார். இவரும் அரசியல்வாதிகளும் மக்களுக்காக வேலை செய்ய வேண்டும். ஆனால் நான் அதைப் பார்த்தே இல்லை. அவை பெரும்பாலும் அலங்கார வார்த்தைகளாகவே உள்ளன” என்றார் மியூகி தோரானா.

இங்கு சமீபத்தில் தான் ஆர்க்டிக் எல்லையில் அமைந்துள்ள எட்டு நாடுகள் — கனடா, ரஷ்யா, அமெரிக்கா, பின்லாந்து, சுவீடன், நார்வே, டென்மார்க் மற்றும் ஐஸ்லாந்து மற்றும் 6 ஆர்க்டிக் பூரவகுடி சமூகங்களின் பிரதிநிதிகள் மற்றும் சீனா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட அப்சர்வர் நாடுகள் தங்களின் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்து உலகின் இந்த அற்புதமாக பகுதியைப் பாதுகாத்து, நிர்வகிக்க இணைந்து பணியாற்றுவார்கள்.

ஆனால் இது அதிகார அரசியலின் காலம். நாடுகள் தொடர்ந்து தங்களின் சொந்த நலன்களுக்காகவே செயல்படுகின்றன. பல போட்டி நாடுகள் தற்போது ஆர்க்டிக்கில் உள்ள நிலையில் தப்புக் கணக்கு மற்றும் தவறாக பொருள் கொள்வதற்கான ஆபத்துகள் அதிகம் உள்ளன.



சரித்திரத் தொடர்

# சேரமான் கனவு

## பாகம் - 2 அத்தியாயம் 6

### 6 பவழத்தீவின் பரவசக் கணங்கள்!

**கொற்றவன்**

நீலவானின் நடுவே வெண்பஞ்சுப் பொதிக் கூட்டம் மிதப்பதுபோல, நீலக்கடலின் நடுவே வெள்ளை மணற்த்திட்டுக்களாய் இருந்தது அக்கடற்கரைத் தீவு!

அத்தீவின் கரையோரப் பகுதியில் கடல் ஆழம் அதிகமாக இருந்தததால், கரைக்கு வெகு அருகாமையிலேயே நின்றிந்தது கடலரசி கப்பல்.

அதற்குமுன்பு எத்தனையோ போர்க்கப்பல்களைப் பார்த்திருந்த அத்தீவின் மக்கள், இரண்டு நாட்களுக்கு முன்பு வந்து சேர்ந்திருந்தாலும், கடலரசியின் பிரம்மாண்டத்தைப் பற்றி அப்போதும் ஆளாளுக்கு ஏதேதோ கதைகள் பேசிக் கொண்டே இருந்தனர்.

அம்மக்கள் உடையும், மொழியும் விநோதமாய் இருந்தாலும், தமிழர்களிடம் இருந்து முற்றிலுமாய் மாறிப் போய்விடவில்லை என்பதைக் கடலரசியில் இருந்தும், உடன் வந்த யவனக் கலங்களில் இருந்தும் வந்திறங்கியவர்களால் அறிய முடிந்தது.

அத்தீவைச் சுற்றிலும் சற்றுத் தூரத்தில் தெரிந்த சிறுகுன்றுகளும், மரங்களும், அருகருகே மேலும் பல தீவுக் கூட்டங்கள் இருப்பதை உறுதி செய்தன. பவழப் பாறைகள் நிறைந்த அத்தீவு, அமைப்புக்கேற்றவாறே, பவழத்தீவு என அழைக்கப்படுவதாகவும், இத்தீவிலிருந்து பயணப்பட்டால் பத்து தினங்களில் சேரநாட்டின் முசிறித் துறைமுகத்தை அடைந்துவிடலாம் என்பதையும் உள்ளூர்வாசி ஒருவன் தமிழிலேயே தெரிவித்திருந்தான்.

பலதரப்பட்ட மொழிகள் பேசும் அத்தீவில் தமிழிலும் பேசுவது கடலரசியில் பயணம் செய்தவர்களுக்கு வியப்பளிக்கவில்லை!

காலைக் கதிரவன் கண்மலர்ந்து சில நாழிகைகளேயான அந்தப் பொழுதில்...

இயற்கை எழில் கொஞ்சும் இத்தீவில், தான் காண்பதும் கேட்பதும் மிகவும் விசித்திரமானதாக இருக்கிறதே என எண்ணியவாறே, தனியாளாய் கால்போனப் போக்கில் கடற்கரையோரம் நடந்துக் கொண்டிருந்தான் வளவத்திரையன்.

சேரநாட்டின் தென்மேற்குக் கடற்பரப்பில் ‘முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்’ விரவிக் கிடக்கின்றன என்பது வளவத்திரையன் கேட்டறிந்த ஒன்றுதான் என்றாலும், இதற்கு முன்பு அவன் இந்தத் தீவினைக் கண்டதில்லை!

இங்கே முதல் நாள் இரவு நடந்த சம்பவங்களைத் தொடர்ந்து, கடலரசியில் பயணம் மேற்கொண்ட கடந்த பத்துத் திங்கள்களில் நடந்த பல நிகழ்வுகள் அவன் மனதில் அலையலையாய் எழுந்து மோதி அலைக்கழித்தாலும், கால்கள் மட்டும் நிறுத்தாமல்



நடையைத் தொடர்ந்தாவாறே இருந்தன.

கடலோடும் அத்தீவின் பரதவர்கள் மீன்பிடி வலையை உலர்த்தியவாறும், பிடித்த மீன்களைப் பங்கிட்டுக் கொண்டவாறும், கட்டுமரங்களைக் கடலுக்குள் தள்ளியவாறும் இருந்தாலும், எதையும் பொருட்படுத்தாமல் நடந்தபடி இருந்தான் வளவத்திரையன்.

அலைமோதும் கரையிலும், அலைமீதான நுரையிலும் மோதிமோதி விளையாடின பலவிதமான வண்ணப் பறவைகள்.

தத்தித் தத்தி நடந்தபடி அலைகளில் தம் உடலை ஈரப்படுத்திக் கொண்ட நாரைகள் கரையோரத்தில் இருந்தபடி, அலைகளில் அடித்துச் செல்லப்படும் நண்டுகளையும் வேட்டையாடின.

அவற்றையெல்லாம் கண்டாலும், எதிலுமே மனம் ஒட்டாதவனாய் கடற்கரையோரம் நடப்பவனுக்குள், முதல் நாள் இரவு நடந்த, ஆச்சரியமாகவும், அதேநேரம் கவலைக்குரியதாகவும் இருந்த அந்த நிகழ்ச்சி, ஓடத் தொடங்கியது.

கப்பலின் மேல்தளத்தில் வில்லவனைக் காணச் சென்ற வளவத்திரையன், அங்கே வில்லவனுக்குப் பதிலாக, தியோதாரவும், தாலியாவும் அமர்ந்து உரையாடுவதைக் கண்டான்.

அக்கணத்தில்...

“வளவத் திரையருக்கு நீ மனைவியாவதற்கு நானும் வில்லவரும் பொறுப்பு! இது இந்தக் கடல் தாயின் மீது ஆணை!” என தியோதாரா கொடுத்த அந்த வாக்குறுதியைக் கேட்டுச் சிலையாக நின்றான்.

என்ன நடக்கிறது இங்கே? என் உள்ளத்தை அறியாத இந்தப் பெண்கள் ஏன் இவ்வாறு பேசுகிறார்கள்? ஏன் இந்த ஆணை? வில்லவருக்கு இதில் என்ன தொடர்பு? இந்தக் கேள்விகள் சுழலச் சிலையாக அந்த அறைக்கு வெளியே நின்றவனுக்கு, அவர்களின் உரையாடலை நன்றாகவே கேட்க முடிந்தது.

“இல்லை! அவர் மனம் என்னை நாடவுமில்லை. விழிகள் என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. அதற்காக அவரிடமிருந்து என்னால் விலகி நிற்கவும் இயலவில்லை!” அந்த வார்த்தைகளை தாலியா, வலியோடு கூறுகிறாள் என்பதை மறைவிடத்தில் இருந்தாலும், வளவத்திரையனால் உணர முடிந்தது.

“உன் உள்ளத்தின் வேதனை புரிகிறது தாலியா. கலங்காதே! நாங்கள் உன் பக்கம் இருக்கிறோம்.” என ஆதரவாய் தாலியாவின் தோள் தொட்டுக் கூறினாள் தியோதாரா.

“தியோ! நீயும் வில்லவரும் மட்டும் இதில்

அக்கறை காட்டினால் போதுமா? என்னவர் மனம் வைக்க வேண்டும். இருவர் மனமும் கலக்க வேண்டும். ஒருவேளை அவர் என்னைத் தனக்குத் தகுதியானவளாக நினைக்கவில்லையோ என்னவோ?" என்றவளின் கண்களில் நீர்த் திவலையிட்டது.

"தாலியா, ஏன் இப்படியெல்லாம் வீணாய்க்

"ஏன் அப்படி?"

"அவர் மறுத்து விட்டால்? அதை என்னால் தாங்கிக் கொள்ளவே இயலாது."

"மறுப்பார் என நினைக்கிறாயா?"

"ஆம்! அவர் மனம் வேறெங்கோ இருக்கிறது என்பது தெரிந்ததுதானே!"



கவலைப்படுகிறாய்? இனம் பார்த்து, குலம் பார்த்தா காதல் பிறக்கும்? ஒன்றை நினைவில் கொள். வளவத் திரையர் அரச குலத்தவர்தான். ஆனால் நீயுமே ஆண்டகுடியில் பிறந்தவள் என்பதை மறக்காதே! எனக்கென்னமோ, நீ அவரை உன் வழிக்குக் கொண்டுவர சரியாக முயற்சிக்கவில்லையோ எனத் தோன்றுகிறது!"

"ஓகோ! நீ வில்லவரை அப்படித்தான் உன் வழிக்குக் கொண்டு வந்தாயோ?"

"ச்சீ! எனக்கு அதெல்லாம் கை வரவில்லையடி! வில்லவரைப் பார்த்தாலே அச்சமும் நாணமும்தான் வருகிறது. ஆனால் நீ அப்படியல்லவே! வளவருடன் என்னமாய் வாயாடுகிறாய்? விளையாடுகிறாய்?"

"ஆனால், அந்தத் துணிச்சல் என் காதலைத் தெரிவிக்கப் பயன்படவில்லையே!"

"அது தெரிந்துதானே அவர் மீது நீ காதல் கொண்டாய்?"

"ஆம்! ஆனால்... அவர் என்னை வெறுத்துவிடுவாரோ என்ற பயமே பாதி உயிரைக் கொல்கிறது."

"அவர் வெறுக்காமல் பார்த்துக் கொள்வது உன் பொறுப்பு!"

"அப்படி ஏதும் நடந்துவிடக் கூடாது என்றுதானே அவரிடம் எதையும் கூறாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்."

"மலரின் மகரந்தம் வண்டை இழுக்கும். உன் நல்ல மனத்தின் மகத்துவம் அவரை இழுக்கும். அந்த நம்பிக்கை எனக்கிருக்கிறது. நீயும் நம்பிக்கை வை. சரி, வா! வில்லவரிடம் இதுபற்றிக்



கலந்தாலோசிப்போம்." என்றவாறு தியோதாரா எழுந்து நின்றாள்.

அவளைக் கரம் பற்றி இழுத்து அமர்த்தினாள் தாலியா.

அத்துடன், தன் உதட்டில் விரல் வைத்து சத்தம் செய்ய வேண்டாம் எனச் சைகையும் செய்தாள்.

அப்படி அவள் சைகை செய்தற்கு, அந்த அறையின் வாயிலில் ஏதோ அரவம் கேட்டாற்போல் இருந்ததே காரணம்!

அவர்கள் இருவரும் அந்த அறையில் இருந்து வெளிப்பாட்டால், தான் இங்கு நின்றிருப்பதைக் கவனிக்கக் கூடும் என உணர்ந்த வளவத்திரையன், சட்டென அங்கிருந்த பாய்மரக் கயிற்றைப் பற்றிக் கொண்டு, கப்பலின் பின் பக்கம் செல்லும் தளத்துக்குத் தாவிக் கயிற்றைப் பிடித்தவாறே தொங்கியபடி விர்ரென இறங்கினான்.

நல்லவேளையாக, கப்பலில் இருந்த பெரும்பான்மையானோர் தீவில், பழங்கள், பண்டங்கள் மற்றும் பயணத்துக்குத் தேவவையானவற்றைப் பெறுவதற்காகத் தீவில் உலவிக் கொண்டிருப்பதால், அவனது செய்கையை அங்கே யாரும் கவனித்திருக்கவில்லை.

கடற்கரையோரம் தன்னந்தனியனாய் நடக்கும் வளவத்திரையனுக்குள் அந்த முதல் நாள் இரவுக் காட்சி ஓடி மறைந்தது. ஆனால் கால்கள் மட்டும் நடையை நிறுத்தியபாடில்லை!

கரையோரம் மேட்டுப்பாங்கான இடத்தில் அமைந்திருந்த மர வீடுகளைக் கடந்தும் வெகுதூரமாய் நடந்த வளவத் திரையன், சுற்றிலும் பவளத் திட்டுக்களாய் பாறைகள் நிறைந்த பகுதிக்கு வந்தபோதுதான் கவனித்தான்.

முற்றிலுமாய், கடலரசியையும், தீவு வீடுகளையும் கடந்து ஆளரவம்ற பகுதியில் தனியாளாய் வந்து நிற்பதை உணர்ந்தான்.

அலைகளின் ஓசையைத் தவிர எவ்வித ஆர்ப்பாட்டமுமின்றி அமைதி சூழ்ந்திருந்த அந்த இடம், அவன் மனதுக்கு ஆறுதலைத் தருவதை உணர்ந்தவன், அங்கிருந்த பாறை ஒன்றில் அமர்ந்து அலைகளை வெறிக்கத் தொடங்கினான். அமர்ந்தவனின் இரு கால்களையும் அலைகள் வந்து வந்து தழுவிக் கொண்டு விளையாடின. கடலின்மேல் பட்டுத் தெறித்த சூரியனின் ஒளிக்கற்றைகள் வெள்ளித் தகடுகளாய் மின்னின.

தூரத்தில் நிற்கும் கடலரசியும் அதைச் சுற்றிலும் நிற்கும் மரக்கலங்களும் இன்னும் பத்து தினங்களில் முசிறித் துறைமுகத்தை அடைந்து விடும்.

தன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் கயல்விழியின் நிலையை நினைத்தபோதே வளவத்திரையனுக்குள் விவரிக்கவியலா எண்ணங்கள் ஓடி அலைக்கழித்தன.

கட்டுக்கடங்கா ஆவலில் ஓடி வந்து அவள் தன்னை அணைத்துக் கொள்வாளோ, அல்லது தான்தான் அவளை அணைக்க நேரிடுமோ என எண்ணி மகிழ்ந்தான்.

கடலலைகளில் கயல்விழின் மலர் வதனம் தோன்றி மறைந்தது.

அதேநேரம், திடீரென்று வளவத்திரையன் அந்தக் கடலலைகளில் வேறு ஒரு காட்சியைக் கண்டு மலைத்தான்.

அவன் அமர்ந்திருந்த அந்தப் பாறைக்குச் சற்றுத் தூரத்தில், அலைகளில் மூழ்கி மூழ்கி எழுந்து ஓர் அழகி ஆனந்தமாய் விளையாடுவதைக் கண்டான்.

கடல் அலைகளை விடவும் வேகமாய் அவன் உள்ளத்தில் உணர்ச்சி அலைகள் எழுந்தன. ஒருகணம் கண்களை நம்ப முடியாமல், மீண்டும் அவளைக் கூர்ந்து நோக்கினான்.

ஆம்! அவளேதான்! தாலியாதான்!



அவள் மல்லாந்தும், புரண்டும் கைகளைத் துடுப்புக்களாக்கி நீந்திய பாங்கும் கண்டு வியந்தான்.

இதென்ன விந்தை? இவள் எப்படி இங்கே வந்தாள்? யாருமற்ற பகுதியில் திடீரென எப்படி இங்கு வந்து நீரில் ஒரு நீலோற்பமாக முளைத்தாள்? ஒருவேளை இதுவும் தனது கற்பனைக் காட்சியோ எனவும் அவன் கண்கள் மருண்டன.

அவள் நீந்திக் குளிப்பதையும், விளையாடுவதையும் பார்த்துக் கொண்டிருந்த வளவத் திரையனுக்குள், யாருமில்லாத இந்தத் தனியிடத்துக்கு எப்படி இவள் வந்து சேர்ந்தாள்? என்ற கேள்வி மேலோங்கினாலும், நீர் விளையாட்டில் மூழ்கியிருந்த அவளது ஆர்வத்தையும், எழுந்து மிளிரும் அவளது பேரழகையும் தன்னையுமறியாமல் அவன் ரசித்தவண்ணமே இருந்தான்.

தாலியாவின் பொன்னுடலில் வெள்ளி அலைகள் மோதியதில் எழுந்த சிதறல்கள் அழகோவியங்களாய் விரிந்தன.

எவ்வளவு பெரிய கவலையும், குழப்பமும் இயற்கையின் இணையில்லா சக்திக்கு முன் தவிடுபொடியாகும் என்பதை அனுபவப் பாடமாகப் படித்தபடி இருந்த வளவத்திரையனுக்கு, அக்கணத்தில் அந்த அழகியின் நீர் விளையாட்டு, கவலையை மறந்து அவனைக் கிறங்கடிக்கும் விதமாக வேறுலகில் சஞ்சரிக்க வைத்துக் கொண்டிருந்தது.

வெகுநேரம் அலைகளில் புரண்டு விளையாடிய தாலியா, கரையை நோக்கி நீந்தி வந்து இடையளவு நீரில் நடக்கத் தொடங்கினாள்.

அந்த அழகுச் சிலையை இப்படியான கோலத்தில் அவன் கண்டதில்லை! புதிதான அவளது அக்கோலம், அவன் கண்களைக் கவர்ந்துக் கொண்டது.

மேலாடை ஈர உடலில் ஒட்டியதால் அந்தக் கட்டழகியின் வசீகரம், ஏகாந்தமாய் விரிந்தது. காலைக் கதிரவனின் கதிர்கள் வேறு, அவளது செம்பவழ மேனிக்கு மேலும் பேரழகைக் கொட்டி வனப்பூட்டியது.

அவளது ஒயிலான நடையழகும், குலுங்கும் முன்னழகும், வளைவுகளால் வசீகரிக்கும் இடையழகும், இவள் தாலியா உருவில் வரும் இத்தீவின் மோகினியோ எனவும் எண்ண வைத்தது.

கடலில் இருந்து எழுந்து வரும் கடற்கன்னியைப் போன்ற பிரமிப்பைத் தந்ததில், அவளையே வெறித்தபடி கிறங்கிய விழிகளை விலக்காமல், அமர்ந்திருந்த பாறையில் தானுமோர் பாறையாக மாறி அசைவற்றிருந்தான் வளவத்திரையன்.

சுற்றிலும் பார்வையை ஓடவிட்ட அந்தக் கட்டழகி, அப்பகுதியில் ஒருவருமே இல்லாததை உறுதி செய்து கொண்ட தோரணையுடன் கரையை நோக்கி நடந்து வந்தாள்.

இது கனவா நனவா என்பதையே உறுதி செய்து கொள்ளவியலா மோன நிலையில் அமர்ந்திருந்த வளவத்திரையன், அந்தப் பவழத் தீவில் நிகழ்கின்ற அந்தப் பரவசக் கணங்களின் அற்புதத்துக்கு தானுமோர் சாட்சியாகிப் போனான்.

(கனவு தொடரும்...)

# VARSHA™

Ready to Cook

Made with Quality Natural Products

**Idli / Dosa Wet Mix** • இட்லி / தோசை மாவு

ఇడ్లీ దోస పిండి • ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು

ഇഡ്ഡലി / ദോശ മാവ്




ઈડલી ડોસા નું ખીરું

इडली/ दोसा आटा

# கவிதை மனசு

## பொய்கள்

ஒரு மிட்டாயை
பகிர்வது போலெல்லாம்
நீங்களும் நானும்
இந்த வாழ்க்கையைப்
பகிர முடிவதில்லை

ஆனாலும் நாம்
அன்பின் பெயரால்
எவ்வளவு பேசிவிட்டோம்

ஒருவருக்கொருவர்
எவ்வளவு நடித்து விட்டோம்
இனி இந்த வாழ்வில்
நீயும் நானும் மட்டுமே
என்றுமே எத்தனை பேருக்கு
வாக்களித்து விட்டோம்

இனியாவது
நாம் கைவிட்டு நகர்ந்தவர்களுக்கு
நமது பொய்கள்
ஒரு விளையாட்டு பொம்மையாக
அவர்கள் கைகளில்
எப்போதும் இருக்கட்டும்
விரும்பிய போது
அதைத் தூக்கி வீசட்டும்

**ஆமிரா**

அப்பொழுதெல்லாம்
இரண்டு அடி அடித்து
திட்டித் தீர்த்த பின்
ஏதோ ஒரு டப்பாவிலிருந்து
ஏதோ கையில் கிடைத்த
சில சில்லரைகளை கொடுத்து
எதாவது வாங்கி சாப்பிடு என்று
சமாதானம் படுத்துவாள்.

இப்பொழுதெல்லாம்
நினைவுக்கு வருகிறது
யாரோ ஒருவர் கொண்டு
வந்து நீட்டிய
தேநீர் கோப்பைக்குள் மிதக்கும்
இனிப்பு சக்கரையாய் கரைகிறது

நிகழ் காலத்தின் நீட்சியில்
அமர்ந்திருக்கிறது
கூன் விழுந்தும் பாரெனப் பறந்த
அம்மாவின் பழைய உருவம்.

**ச.சக்தி**

# சூரியக்கிண்ணம்

உள்ளங்கைக்குள்ளே
சூரியனைப் பிடித்து
யாரும் பார்க்காமல்
வீடுவரை கொண்டு சேர்த்து
என் இருளின் அடர்த்திக்குத்
தீனியிடுகிறேன்.

இருள் சிறிதும் குறையவில்லை!
வெளிச்சத்தைக் குடித்துக் குடித்து
கொழுத்துத் திரிந்தது இருள்.

ஒளி இருளைப் போக்குமே,
அப்படியென்ன இந்த இருளுக்கு
அடங்காப் பசி?

பிறகொருநாள் புரிந்தது
கைகளில் வளைந்தோடும்
என் விதியின் விரிசலில்
சூரியக்கதிரின் கசிவு

அவ்வகையில் என் வீதியெல்லாம்
பிரகாசித்துக் கிடக்க
தினமொருமுறை என்னை நானே
என் இருளுக்கு இரையாக்கி
இறந்திருக்கிறேன்.

**ராஜேஷ்வர்**

# இயற்கை

இயற்கையென்ற தலைப்பில்
சிறுமியொருத்தி வரைந்த ஓவியத்துக்கு
ஆறுதல் பரிசு கூட தரவில்லையாம்.
அழுதபடியே சொன்னாள்.

வாங்கிப் பார்த்தேன்.
வெள்ளைத்தாளில் பெரிய அளவில்
இரண்டு முக்கோணங்களை
அருகருகே வரைந்திருந்தாள்.

ஒரு அரைவட்டத்தால்
முக்கோணங்களை இணைத்திருந்தாள்.
பிறைநிலவாம்.
மலைகளின் அடியில்
நெளிநெளியாக கிறுக்கியிருந்தவள்
ஆறு வரைந்தேன் என்றாள்.
ஆர்வமாக உற்றுப்பார்த்தேன்.

ஆற்றின் மேலே
ஆனந்தமாய் நீந்தும் மீன்கள்.
ஆற்றோரம் தென்னை மரங்கள் கூட.
ஓடமொன்றை காண்பித்தாள்.

மீன்களுக்கு அடிபடாமல் இருக்க
ஓடத்தின் பாதிமுனை
மலை மேல் இருந்தது.

ஓடம் எப்படி மலையேறும்?
இதைச்சொல்லி நிராகரித்தார்களாம்.
சிரித்தபடியே அவளிடம் தந்தேன்.

ஓடமும் ஒருநாள் வண்டி ஏறும்போது
மலையேறினால் என்ன தப்பு?

**விநாயக முருகன்**



# கேரளத்தில் இருந்து மற்றொரு தாரா!

## சம்ரிதிதாரா தமிழில் சாதிப்பாரா?

ஐகான் சினி கிரியேஷன்ஸ் தயாரிப்பில், ஏழுமலை இயக்கியுள்ள படம், 'மையல்'. பிரபு சாலமன் இயக்கிய 'மைனா' படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்த சேது, ஹீரோவாக நடிக்க, கேரளத்துப் பைங்கிளியான சம்ரிதி தாரா, தமிழில் நாயகியாக அறிமுகமாகியுள்ளார். இது கல்வராயன் மலைப் பகுதியில் நடக்கும் கதையைக் கொண்ட இந்தப் படம் பற்றி சம்ரிதி தாரா கூறும்போது, 'தமிழ் சினிமாவில் நடிக்க வேண்டும் என்பது என் பெரும் கனவு. அது 'மையல்' படம் மூலம் நடந்திருப்பது மகிழ்ச்சி. வலுவான கதையில் சிறப்பான கதாபாத்திரத்துடன், தமிழ் சினிமாவில் இப்படி அறிமுகமாவது அரிய வாய்ப்பு.' என்றார்.

# கலக்கும் 'லவ் மேரேஜ்' பாடல்!

## பாடலைக் கேட்டு பேஜாரானார்களோ?

விக்ரம் பிரபு நடிப்பில் அறிமுக இயக்குநர் சண்முக பிரியன் இயக்கியுள்ள புதிய படம் 'லவ் மேரேஜ்'. இதில், நாயகியாக சுஷ்மிதா பட் நடிக்கிறார். சிறப்புத் தோற்றத்தில் சத்யராஜ் நடித்திருக்கிறார். இப்படம் 30 வயதிற்கு மேல் தாமதமாக திருமணம் செய்துகொள்ளும் நாயகன் பற்றியும், திருமணத்தால் ஏற்படும் சிக்கல்களைப் பற்றியும் பேசுகிறது. ஷான் ரோல்டன் இசையமைத்துள்ள இப்படத்தில், சிவாங்கி கிருஷ்ணகுமார் பாடியுள்ள புதிய பாடலான 'பேஜாரானேன்' வெளியாகி இணையத்தைக் கலக்கி வருகிறது.

# தயாரிப்பாளர் கதாநாயகனாகும் ‘அங்கீகாரம்!’



## ‘அங்கீகாரம்’ தரட்டும் பெரும் அங்கீகாரம்!

கே.ஜெ.ஆர் ஸ்டுடியோஸ் சார்பில் சிவகார்த்திகேயன் நடித்த ஹீரோ, டாக்டர், அயலான் போன்ற படங்களைத் தயாரித்தவர் கே.ஜெ.ஆர் ராஜேஷ். இவர் கதாநாயகனாக அறிமுகமாகும் படத்துக்கு ‘அங்கீகாரம்’ என்று தலைப்பிட்டுள்ளனர். இதில், சிந்துாரி விஸ்வநாத் நாயகியாக நடிக்கிறார். படம் பற்றி இயக்குநர் ஜேபி தென்பாதியான் கூறும் போது, ‘தேசிய அளவில் சாதிக்க நினைக்கிற ஒரு அத்லெட் சந்திக்கும் சவால்களும் பிரச்சினைகளும்தான் திரைக்கதை. பல உண்மைச் சம்பவங்களை கொண்டு உருவாக்கி இருக்கிறேன். இறுதிக்கட்ட படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது” என்றார்.

# சிவகார்த்திகேயனின் பான் இந்தியா படம்!

## மதராஸி தரட்டும் வெற்றி முகராசி!

ஸ்ரீ லட்சுமி மூவீஸ் தயாரிப்பில், ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் சிவகார்த்திகேயன் நடித்து வரும் படத்துக்கு மதராஸி எனப் பெயரிடப்பட்டுள்ளது. சிவகார்த்திகேயனின் 23—வது படமான இப்படத்தின் டைட்டில் டீசர் சிவகார்த்திகேயன் பிறந்த நாளில் வெளியானது. ஆக்ஷன் திரைப்படமாக உருவாகியுள்ள இப்படம், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என ஐந்து மொழிகளில் பான் இந்தியா திரைப்படமாக செப். 5 ஆம் தேதி வெளியாகவுள்ளது.



# தல வலம்

## திருக்காழிச்சீராம விண்ணகரம்

(திரிவிக்ரம நாராயணர்–28 வது திவ்ய தேசம்.)

புவனகிரி செயபாலன்

சீர்காழி உப்பனாற்றின் வடகரைக்கும் கொள்ளிடம் ஆற்றின் தென்கரைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்துள்ளது.

'நான்முகன் நாள் மிகைத் தருக்கை இருக்கு வாய்மை

நலம் மிகு சீர் உரோமசனால் நவிற்றி நக்கன்
ஊன்முகம் ஆர் தலை ஓட்டு ஊண் ஒழித்த எந்தை
ஒளி மலர்ச் சேவடி அணைவீர் உழு சே ஓடச்
சூல் முகம் ஆர் வளை அளைவாய் உகுத்த முத்தைத்
தொல் குருகு சினை எனச் சூழ்ந்து இயங்க எங்கும்
தேன் முகம் ஆர் கமல வயல் சேல் பாய் காழிச்
சீராமவிண்ணகரே சேர்மின் நீரே.'
— திருமங்கையாழ்வார்

மூலவர் —திரிவிக்ரம நாராயணர், உலகளந்து நின்ற கோலம்.

உற்சவர் —தாடாளன், லோகநாதன், தவிட்டுப் பானை தாளாளன்.

தாயார் —லோகநாயகி, மட்டவிழ் குழலி, கிழக்கு நோக்கி நின்ற கோலம். தலவிருட்சம் —பலா

தீர்த்தம் —சங்கு, சக்கர தீர்த்தம்.

பூசை —ஆகம / வைகானசம்

தொன்மம் —1000 முதல் 2000 வருடங்களுக்கு இடைப்பட்டது.

தலத்தின் புராணப் பெயர்கள் பாடலிக வனம், காழிச் சீராம விண்ணகரம்.

விண்ணகரம்



விண்ணகரம் என்றால் ஆகாயத்துக்கு அப்பாலுள்ள வைகுண்டம் என்று பொருள். ஆறு விண்ணகரங்கள் உள்ளன என்று திருமங்கையாழ்வார் தன் பாசுரத்தில் பாடியுள்ளார்.



அவை முறையே 1. திருப்பரமேச்சுர விண்ணகரம் (காஞ்சிபுரத்தில்) 2. பரமேஸ்வர விண்ணகரம் (காஞ்சிபுரத்துக்கு அருகில்) 3. காழிச்சீராம விண்ணகரம் (சீர்காழி) 4. அரியமேய விண்ணகரம் (திருநாங்கூர்) 5. வைகுந்த விண்ணகரம் (திருநாங்கூர்) 6. திருநந்திபுர விண்ணகரம் (நாதன் கோயில் கும்பகோணத்திற்கு தெற்கே சுமார் மூன்று மைல் தொலைவில்) இவைகள் வைகுண்டத்துக்கு இணையானது என்று கூறுகிறார். காழிச்சீராம விண்ணகரம் பற்றி திருமங்கையாழ்வார் 10 பாசுரங்கள் பாடியுள்ளார்.

தல வரலாறு

படைப்புத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பிரம்மா, பல யுகங்கள் வாழும்படி சாகாவரம் பெற்று இருந்தார். இதனால் அவர் கர்வத்துடன் இருந்தார். இவரது கர்வம் குறித்து அறிந்திருந்த திருமால் (விஷ்ணு) இவரது கர்வத்தை அடக்க தகுந்த நேரத்திற்காகக் காத்திருந்தார்.

உரோமச முனிவருக்கு உடல் முழுதும் முடி உண்டு. தனது ஆயுட்காலத்தைப் பற்றி தெரிந்து கர்வம் கொண்ட பிரம்மா, உரோமச முனிவரைக் கேலி செய்யும் நோக்கில் அவரை நோக்கி ‘உன் ரோமம் என் ஆயுள் என்று சொல்லலாம்.’ என்று கேலியாகச் சொன்னதைக் கேட்ட உரோமச முனிவர், அந்த வார்த்தைகளை உண்மையாக்க முடிவு செய்தார்.

உரோமச முனிவருக்குத் திருமாலின் வாமன அவதாரத்தில், தனது காலைத் தூக்கி மூன்று உலகங்களையும் அளந்து காட்டிய திருவிக்கிரமன் கோலத்தைக் காண வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. தனது விருப்பத்தைத் திருமாலிடம் வெளிப்படுத்த, அவரை நோக்கித் தவம் இருந்தார். முனிவர் முன் தோன்றிய அவருக்கு திரிவிக்கிரமன் திருக்கோலத்தைக் காட்டி அருள் பாலித்தார்.

‘இந்தக் கோலத்தை தரிசித்ததால் நீ பெறுவதற்கரிய பல பேறுகளைப் பெற்று சிறப்பான நிலையை அடைவாய்! உன் சரிதத்தில் இருந்து ஒரு ரோமம் உதிர்ந்தால் பிரம்மன் ஆயுட்காலத்தில் ஓர் ஆண்டு குறையும்!’ என்று அருளினார். திருமாலின் இந்தச் செயலைக் கண்டு வெட்கித் தலை குனிந்த பிரம்மன், தன் கர்வம் அழியப் பெற்றார்.

திருஞானசம்பந்தர்

சைவ சமயக் குரவர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் அவதாரத்தலம் சீர்காழி.



இவர் சில காலம் சீர்காழியிலே தங்கி இருந்து சிவத்தொண்டு புரிந்து வந்தார். இத்தலம் வெள்ளத்தால் பாழ்பட்டபோது அவ்வூரில் உள்ள ஒரு மூதாட்டி, தன் வீட்டில் உள்ள தவிட்டுப் பானையில் உற்சவர் தாடாளனை மறைத்து வைத்து திருவாராதனம் செய்து வந்தார்.

வாதப்போட்டி

திருமங்கை ஆழ்வார் இவ்வூருக்கு வந்தபோது இவரது சீடர்களுக்கும் திருஞான சம்பந்தர் சீடர்களுக்கும் சிறு பிரச்சனை ஏற்பட்டது. அதன் காரணமாக இருவர்களுக்கு இடையே வாதப் போட்டி நடத்துவது என முடிவானது. அதற்கு மறுநாள் நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது அதற்காக திருமங்கையாழ்வார், அன்றிரவு சீர்காழியிலேயே தங்கினார்.

இரவு திருமங்கையாழ்வாரின் கனவில் தோன்றிய திருமால், தான் மூதாட்டியின் தவிட்டுப் பானையில் இருப்பதாகத் தெரிவித்தார். அதன்படி மூதாட்டியிடம் இருந்த உற்சவர் தாடாளனை பெற்றுக் கொண்டு வாதத்திற்குத் தயாரானார். போட்டி தொடங்கியது.

அப்போட்டியில்...

'ஒரு குறள் ஆய் இரு நிலம் மூவடி மண் வேண்டி

உலகு அனைத்தும் ஈர் அடியால் ஒடுக்கி ஒன்றும்

தருக எனா மாவலியைச் சிறையில் வைத்த

தாடாளன் தாள் அணைவீர் தக்க கீர்த்தி


அரு மறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்

அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்

தெருவில் மலி விழா வளமும் சிறக்கும் காழிச்

சீ ரா ம வி ண் ண க ரே சேர்மின் நீரே.'

என ஒன்று முதல் ஏழு வரை எண்






வரிசையில் பாடி, திருமாலின் பல அவதாரங்களை விளக்கினார்.

திருமங்கையாழ்வார் தன் பாசுரங்களில் பல சுருதி வரும் இடங்களில் பொதுவாகப் பட்டப்பெயர்களில் ஒன்று அல்லது இரண்டு மட்டும் இணைத்து பாடுவார். இவரை இங்கே 'நாலு கவிப்பெருமான்' என்று பாராட்டியதால், ஆலி நாடன், அருள்மாரி, அரட்டமுக்கு, அடையார் சீயம், கொங்குமலர் குழலியர்வேள், மங்கை வேந்தன், பரகாலன், கலியன் எனத் தான் பெற்ற எட்டு விருதுகளின் பெயர்களையும் ஒரே பாடலில் பாடியுள்ளார்.

திருமங்கை ஆழ்வாரின் பெருமையை உணர்ந்த சம்மந்தர் அவரைப் பாராட்டி, தான் வைத்திருந்த வேலைப் பரிசாகக் கொடுத்ததுடன் காலில் தண்டையையும் அணிவித்தார்.

திருமங்கையாழ்வார் பெருமாள் கோயிலை அனைவரும் வழிபடும்படி திறந்து வைத்தார். அதில் உற்சவர், தாயார், உரோமச முனிவரையும் சேர்த்து மங்களாசாசனம் செய்தார்.

தாடாளன்

தாள் என்றால் பூமி அல்லது உலகம். ஆளன் என்றால் அளந்தான் என்று பொருள். தன் திருவடியால் மூன்று உலகங்களையும் அளந்தவன் என்பதால், ஆண்டாள் இவருக்குத் தாடாளன் என்று பெயர் சூட்டி, உலகளந்த பெருமாள் குறித்து தனது திருப்பாவை நாச்சியார் திருமொழியில் பாடியுள்ளார்.

கோயில்

இரண்டு பிரகார மூன்று நிலை இராஜகோபுரம். விநாயகர், ஆண்டாள், ராமபிரான், பன்னிரு ஆழ்வார்கள், கிருஷ்ணன், கருடன் முதலிய சந்நிதிகள் உள்ளன. பிரகாரத்தில் ராமர் சன்னதியும் வெளிப்புறத்தில் ஆஞ்சநேயர் சன்னதியும் உள்ளது.

கருவறை

இடது காலைத் தலைக்கு மேல் தூக்கிய படியும், வலது கையைத் தானம் பெற்ற அமைப்பிலும், இடது கையில் ஒரு விரலை மட்டும் உயர்த்தியபடி திரிவிக்கிரமனாகப் பக்தர்களுக்கு சேவை சாற்றுகிறார். தவிட்டுப் பானை தாளாளன் என்று அழைக்கப்படும் உற்சவர், மூலவருக்கு அருகே உள்ளார். அருகில் உள்ள தொட்டிலில் குழந்தை வடிவில் சந்தான கோபால கிருஷ்ணனாக இருக்கிறார். இவருக்கு மேல் உள்ள விமானம் புஷ்கலாவர்த்த விமானம் என்று அழைக்கப்படுகிறது.

தாயார்

பொதுவாகப் பெருமாள் தன் மார்பில் திருமகளைத் தாங்கி இருப்பார். ஆனால் இங்கு தாயார் மார்பில் திருவிக்கிரமனைத் தாங்கியபடி அருள் பாலிக்கிறார். ஒரு காலைத் தூக்கியபடி திருமால் இத்தலத்தில் சேவை சாற்றுவதால், அவர் பாதம் வலித்து விடாமல் இருப்பதற்காக திருமகள் அவரைத் தாங்குவதாகக் கூறப்படுகிறது. உற்சவ அம்பாள், தாயாரை மறைத்தபடி இருப்பதால் உற்சவர் திருமுகத்தை மட்டுமே தரிசனம் செய்ய முடியும்.

தாயாரை மனம் உருகி சேவித்தால், பிரிந்த தம்பதியர் ஒன்று சேர்வர். பெண்கள் கணவர் மீது கூடுதல் அன்பு செலுத்துவர் என்றும் கூறப்படுகிறது.



வராக அவதாரம்

முன் மண்டபத்தில் வராக அவதாரம் எடுத்த பெருமாள் வலக்கையை தானம் பெற்ற கோலத்தில் வைத்து, இடது கையால் குடையைப் பிடித்தபடி சாளக்கிராம மாலை அணிந்து காட்சி தருகிறார். பெருமாளிடம் வேண்டிய செயல்கள் நிறைவேறியதற்காக இவரிடம் நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள்.

பரிகாரம்

அதிகார துஷ்பிரயோகத்தால் கஷ்டப்படுகிறவர்கள், அடிமையாக தொழிற்சாலைகளில் இருப்பவர்கள், இத்தலப் பெருமாளை நினைத்து காணிக்கை அனுப்பி வைத்தால், அவர்களுக்கு மறுபடியும் சுதந்திரமான வாழ்க்கை அமையும். போட்டியில் தோற்றுக் கொண்டிருப்பவர்கள், செய்து கொண்ட வியாபார ஒப்பந்தத்தை சரிவர செயல்பட முடியாமல் மாட்டிக் கொண்டிருப்பவர்கள், உறவினர்களது பகையிலிருந்து மீள வேண்டும் என்று துடிப்பவர்கள் போன்றோர் இங்கு வந்து புஷ்கரணியில் நீராடி பெருமாளை சேவித்தால், வேண்டியதை சீக்கிரமே அடையலாம் என்பது ஐதீகம்!

மழலைச் செல்வம் வேண்டி தாளாளனை வணங்கினால் குழந்தை பாக்கியத்தை அருள்வான் என்பது பக்தர்களின் நம்பிக்கை. வாஸ்து பூஜை செய்யும் முன்பு இங்குள்ள பெருமாளைச் சேவிப்பது பக்தர்களின் வழக்கம்.

திருவிழா

வைகுண்ட ஏகாதசி, சொர்க்கவாசல் திறப்பு, சிறப்பாக இங்கு நடக்கும். தை மாதத்தில் பத்து நாள் பிரம்மோற்சவம், வெள்ளிக்கிழமை தோறும் தாயாருக்கு ஊஞ்சல் சேவை நடைபெறுகிறது.

பூஜை

தினசரி ஆகம, வைகாசன பூஜை நடத்தப்படுவதுடன் இங்குள்ள தங்கக் கருடனுக்கு இரண்டு கால பூஜை செய்யப்படுகிறது.

கோயில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7:30 மணி முதல் 11:30 மணி வரையிலும், மாலை 5 மணி முதல் இரவு 8:30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும்.

சட்டைநாதர்

இக்கோவிலுக்கு அருகிலேயே திருஞானச் சம்பந்தருக்கு பார்வதி தேவி பாலூட்டிய சட்டைநாதர் கோயில் உள்ளது.

இருப்பிடம்

சிதம்பரத்திலிருந்து 20 கி.மீ. தொலைவிலும் மயிலாடுதுறையில் இருந்து 20 கி.மீ. தூரத்திலும் சீர்காழி உள்ளது. சீர்காழியின் மையப் பகுதியில் ஆலயம் அமைந்துள்ளது.

(தொடரும் வலம்.....)




# தமிழகத்தின் தலைசிறந்த ஆளுமைகள்




**ஆசிரியர்: என்.ஆர்.மணி**

**விலை : ரூ. 300**

**பக். : 256**

**வெளியீடு:**

**என்.ஆர்.மணி வெளியீடு,**
**சென்னை–80**

**Phone Number:**
**+91 94440 42336**

இருநூறு ஆண்டுகள் ஆங்கிலேயர்களிடம் நாடு அடிமைப்பட்ட நேரத்தில், தேச விடுதலைக்காகப் பாடுபட்டது விடுதலைப் போராட்ட வீரர்கள் மட்டுமல்ல; அவர்களுடைய குடும்பத்தாரும் தியாக மனப்பான்மையோடு இருந்துள்ளனர் என்பதை நூலாசிரியர், தேச விடுதலைக்காகப் பாடுபட்ட 108 பேரின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து நூலாக்கியுள்ளார்.

மகாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்களுக்கு முன்பே அந்நியரை எதிர்த்துப் போராடிய தமிழ் மன்னர்கள், படைத்தளபதிகள் குறித்தும், அரசியல் ரீதியான போராட்டங்கள், ஐ.என்.ஏ. படைப்பிரிவில் முக்கியப் பங்காற்றியோர், தலைசிறந்த ஆளுமைகள் குறித்தும் படிக்கப் படிக்க தேசத்தின் மீதான பற்றுதல் நமக்கு தூண்டும் வகையில், தியாகிகளின் வீரமும், போராட்டமும் இருந்துள்ளதை உணர முடிகிறது.

தேச விடுதலைக்காக, ஆயிரக்கணக்கானோர் போராடிய தியாகத்தை இந்த நூல் நினைவுகூருவதோடு, அவர்களது குடும்பத்தையும் முன்னிறுத்துகிறது. பிற்சேர்க்கையில் நூற்றுக்கும் மேற்பட்ட தியாகிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். இயந்திரமயமான சூழலில் இளைய தலைமுறையினர் அவசியம் வாசித்து, தேசத்தின் மீதும் மக்களுக்கு உதவ வேண்டிய மனப்பான்மையை ஊக்குவிக்கவும் இந்த நூல் ஒரு வழிகாட்டி எனலாம்.



சிறுகதை

# காமினி

**ஷைலஜா**

“எப்படிடா மச்சான் இப்படி ஒரு காரியம் செய்தே! சூப்பர்டா! நீ ஒரு ரோபோடிக் எஞ்சினீயர்னு தெரியும், அமெரிக்கால பஃபல்லொ பல்கலைக் கழகத்துல ரோபோ டெக்னாலஜி படிச்சேன்னும் தெரியும் ஆனா இந்தியா வந்த உடனேயே இப்படி ஒரு அட்டகாசமான ரோபோவை தயாரிப்பேன்னு நினைக்கவே இல்லைடா பரத்! எல்லாம் முன்னே எந்திரன் படம் பார்த்த பாதிப்பால தானே இப்படி ஒரு ரோபோ தயாரிச்சி வச்சிருக்கே?”

’வெறும் ரோபோ இல்லடா இது காதல் ரோபோ! ரோபோ டெக்னாலஜிக்குத்தேவையான கொஞ்சம் அறிவியல், கொஞ்சம் தொழில்நுட்பம் ,கொஞ்சம் கணிதம் ,கொஞ்சம் பொறி இயல் இவைகளை ஒண்ணாக் கலந்து வச்சிட்டுபல வருஷமா —அதாவது எந்திரன் படம் வர்ரதுக்கு முன்னாடியே ஆரம்பிச்சி படாதபாடுபட்டு நான் தயாரிச்சேன். இதான் எந்திரி.’

’எந்திரிக்கணுமா எதுக்கு?’

’இல்லைடா ..., எந்திரனுக்கு ஆப்போசிட் எந்திரி. பெண் ரோபோ அதான் எந்திரின்னு பேரு வச்சேன்..., உயிருள்ள ஜீவன் போல சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் ‘ஐசாய் 1’ என்ற ரோபோவை ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இது விஞ்ஞானக் கற்பனை அல்ல.. நிஜம் என்கிறார் இந்த ரோபாவை உருவாக்கிய விஞ்ஞானிகள் குழுவின் தலைவர் டீகோ கார்சியா. மனிதர்களுக்கு ஒரு துணையாகவும், பொழுதுபோக்கு அம்சமாகவும் இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டில் உயிருள்ள நபர் போல் உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வகையிலும், முடிவுகளை தாமாக சுதந்திரமாக எடுக்கும் வகையிலும் இந்த ரோபோ உருவாக்கப்பட்டுள்ளது. குடும்பத்தில் நிலவும் மகிழ்ச்சி, துக்க சூழ்நிலைக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு செயல்படும் திறன் படைத்த ரோபோக்களை ஸ்பெயின் நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கி வராங்கன்னு கேள்விப்பதும் அமெரிக்கால எனக்கு நண்பனான ஸ்பெயின் நாட்டு அபிகைல் இந்த விஷயத்துல உதவறேனான். லெகோகிட்ஸ் உதவியோட நான் உருவாக்கினது அப்படியே என் காதலியப்போலவே பேசும் காமினின்னா திரும்பிப்பார்க்கும் அவளைப்பற்றிய எல்லாரகசியமும் எனக்கும் இதுக்கும் இப்போ தெரியும்’

’ரொம்ப விளக்கிட்டியேடா! புரியுதுடா பரத்!! ஆர்ட்டிஃபிஷியல் இன்டெலிஜென்ஸ் இப்ப ரொம்ப விஞ்ஞான முன்னேற்றத்தில் எல்லார்கிட்டயும் இருக்கேன் நீ அதை ட்ரை பண்ணாம பழைய பாணியிலேயே இருக்கியாடாஞ்”



இது நிலையானது ட ஏ.ஐ சொதப்பி விடும் எனக்கு இதில் தான் பழக்கம்

சரி, இந்த ரோபோவை வச்சி உன்னோட காதல்ரோஜாவை நீ மீட்டுக்கப்போறே சரியா?'

'எக்சாட்லி சிவா. இதைவிட்டா வேற வழியே இல்லையேடா ..என் வருங்கால மாமனார் சொக்கநாதன் ரொம்ப கெடுபிடியா இருக்கிறாரே!'

'ஆமா! காமினி படிச்சது சென்னை காலேஜ்னாலும் பொறந்தது திருச்சிகிட்ட இருக்கிற குக்கிராமமாச்சே! இன்னமும் ஜாதி குலம்கோத்திரம்னு அவங்க வீடல் ஸ்ட்ரிக்டா இருக்காங்க.. படிப்புமுடிச்சதும் பொண்ணை ஊருக்கு கூட்டிப்போய்ட்டு காமிரா உள் காமினியாய் அடைச்சிட்டாங்க. கையில செல்லும் இல்ல வாயத்திறந்து பேச சொல்லும் இல்ல , அப்படி அடக்கிவச்சிருக்காரு சினிமா வில்லனாட்டம் இருக்கற அவ அப்பா சொக்கநாதன். இதையும் மீறி உங்க காதல் தேர்தல் கால பொய் விளம்பரம் மாதிரி எகிறிகுதிச்சி வளருதுன்னா அதுக்குக்காரணம் ராகினி! அவதான் வாராவாரம் உனக்காக சிநேகிதி காமினிக்கு காதல் தூது போகும் காதல்புறா! அவள் கொண்டுபோய் உன் காதல் கடிததை காமினிகிட்ட தரா. பதில்பெற்று வரா. எல்லா கதையும் எனக்குதெரியும்டா பரத்!'

'ராகினிக்கு இந்த ரோபோ காமினியோட நல்ல பழக்கமாகிடிச்சி உயிர்த்தோழிகளாகிட்டாங்க. இன்ஃபாக்ட் ராகினி உதவியோடதான் ரோபோவை கிராமத்துவீட்ல வச்சிட்டு என் காமினியைக்கடத்திட்டு வந்து ரெஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கப்போறேன். கிராமத்துல ராகினி இதுகூட ஒருவாரம் தங்கி, ரோபோவை சந்தேகம் வராதமாதிரி அங்கபழக்கிட்டு வந்துடுவா.. அப்புறமா ஒருநாள் ரோபோ' பரத் இல்லாத வாழ்க்கை எனக்குத்தேவை இல்லை நான் சாகப்போறேன்'னு கடிதம் எழுதிவச்சிட்டு இங்க என்கிட்டயே வந்திடும்!'

"ஹாலிவுட்பட ரேஞ்சுல கதை விறுவிறுப்பாத்தான் இருக்கு சொதப்பாம திட்டப்படி நடக்கணும்"

'சரி வா உன்னை ரோபோக்கு அறிமுகப்படுத்தறேன் இங்க நீ வந்து ரொம்பநாள் ஆச்சில்ல நான் எல்லாம் சொல்லி வச்சிருந்தாலும் ராகினியைத்தெரிஞ்ச அளவு ரோபோக்கு உன்னைத்தெரிஞ்சிருக்காது '

இப்படி பரத் சொல்லும்போதே

"எதுக்கு அறிமுகம் பரத் ? சிவா என்ன எனக்கு புதுசா? நடிகர் விவேக் மாதிரி துறுதுறுன்னு இருக்காரு பேச்சும் அதே!முதல்ல பார்த்ததே மனசுல பதிஞ்சிபோச்சே" என்று ரோபோ சிரித்தபடி கேட்கவும்,'பாத்தியா எல்லாம் இதுக்கு அத்துப்படி..காமினியாவே ஆகிடிச்சிபோல?' என்றான் சிவா.

'ஆமாஞ்முக்கா(ல்)மினி ! கிராமத்துக்குப்போனா முழுசாயிடும்! காமினியப்போலவே பாவாடைதாவணில்லாம் போட்டு முகத்துல மாஸ்க்எல்லாம்பொருத்திட்டேன்சிவா!எப்படிடா இருக்கு?'

'அசல் எந்திரன் படத்து சிட்டு ரஜினியேதான்! அங்க ஆண் இங்க பெண் அதான் வித்தியாசம்!'

நண்பர்கள் சிரித்துக்கொண்டார்கள் ரோபோவும் வெட்கப்பட்டு சிரித்தது.

அரங்கபுரம்.

திருச்சிஅருகே காவிரிக்கரையோரம் இருந்த அந்தகிராமத்திற்கு கோயிலைப்பார்க்கபோகிறவர்கள் போல பரத்தும் சிவாவும் காரில்பின்பக்கம் அமரவைத்த ரோபோவோடு போனார்கள்.ராகினி முதல்நாளே அரங்கபுரம் போய்விட்டிருந்தாள்

கோயில்ல யாரும் வர்ரதுக்கு முன்னாடி சீக்கிரமா போயிடலாம்'

காரில் ஏறியதும் பாட்டிலைத் திறந்து நீரை எடுத்துமுகத்தில் தெளித்தான் பரத்.

மெல்லக்கண் திறந்தவள்,' மூ ..மூச்சுவிட கஷ்டமாஇருக்கு" என்றாள் .



'டவுன்ல தில்லைநகர்ல நர்சிங்ஹோம் போங்க அவர்தான் எனக்கு ஆஸ்துமாக்கு எப்போவும் வைத்தியம் செய்ற டாக்டர். பேரு ஆத்மநாதன் '.என்றாள்.

'ஆஸ்துமாநாதன்னு பேர் வச்சிருக்கலாமோ?' சிவா சிரித்தபடிகேட்கவும் பரத் அதை ரசிக்கும் நிலையில் இல்லாமல் விழித்தான்.

ஆத்மாநர்சிங் ஹோம்.

காமினியைப்படுக்கையில் படுக்கவைத்து சோதித்த அந்தடாக்டர் , சினிமா டாக்டரைப்போல மூக்குக் கண்ணாடியைக்கழற்றியபடி," ஆல்ரெடி ஆஸ்துமா இருக்கிறபொண்ணு மூச்சுக்கு ரொம்ப சிரமப்பட்டிருக்கா நிலமை சீரியசாத்தான் இருக்கு.. கொஞ்சம் ட்ரீட்மெண்ட் கொடுத்தாகணும் நீங்க வெளில வெயிட்பண்ணுங்க" என்றார்.

இன்னும் சற்றுநேரத்தில் திட்டமிட்டபடி அவள் காமினியுடன் கோயிலுக்குவருவாள். நூற்றுக்கால்மண்டபத்தின் தூண்களைப்பார்க்கிற சாக்கில் அங்கே போகும்போது ரோபோவும் காமினியும் இடம் மாறிவிடும்

ராகினி காமினியோடு கோயிலுக்குள் நுழைந்தாள் .சுற்றுமுற்றும் பார்த்தபடி இருவரும் நூற்றூக்கால் மண்டபத்திற்குள் ஓசைப்படாமல் வந்தார்கள். அங்கே சிவா பரத் ரோபோ மூவரும் காத்திருந்தனர். அப்போது சட்டென

மண்டபத்திற்குள் இருந்த தூசியும் உதிர்ந்த பழைய காரை வாசமும் காமினிக்கு மூச்சடைக்க 'ஹா' என்று மயங்கிவிழுந்துவிட்டாள்.

'ஐயோ என்னடா இது?' சிவா அதிர்ச்சியுடன் பார்த்தான்.

'கைத்தாங்கலா கார்வரை கூட்டிப்போய்டுவோம்

மூக்கில் மாஸ்க்கைப்போட்டு ஏதோ ஒயர்களை கைகளில் செருகிவிட்டு அவர் நகர்ந்து போனார். அப்பாவிற்கு போன் செய்து விவரம் சொல்லிவிடுவாரோ என பயந்த காமினி தப்பிக்க தீர்மானித்தாள்.

டாக்டர் அகன்றதும் காமினி எழுந்து தன் முகத்தில் இருந்த மாஸ்கை அக்றிவிட்டு, வயர்களையெல்லாம் பிடுங்கி விட்டு அருகிலிருந்த கண்ணாடி ஜன்னலைத் திறந்து வெளியே குதித்தாள்.

அவள்குதிப்பதை அறைக்கதவைத் திறந்து அப்போதுதான் உள்ளே வந்த பரத் அதைப்பார்த்துவிட்டு அவனும் அதே வழியில் சென்று வெளியே குதிக்க சிவாவும் தொடர்ந்தான். நர்சிங்ஹோமின் வாசலுக்கு அவர்கள் வந்தபோது

'தெரியும் உன்னை இவன் சிவப்பு கார்ல கடத்திட்டுவந்ததா ஊர்க் கோயில் குருக்கள்



சொன்னாரு உடனே புயலாய் பொறப்பட்டேன் எவ்ளோ நாளா இந்தக்கதை நடக்குது ம்? ‘வில்லன் அப்பா எதிரில் வந்து கண்ணை உருட்டி உறுமினார்.

காமினி கைகளைப் பிசைந்தாள்

அருகில் நின்ற சிவாவும் பரத்தும்,’ இதென்னடா சேமிக்காமல் நாலுபக்கம் கதையை தட்டச்சிய நேரத்தில் கரண்ட் கட்ஆனமாதிரி?’ (எத்தனை நாளைக்கு வெண்ணை தாழிங்கறது ஹிஹி!) என்பதுபோல முழித்தார்கள்

’ஆஸ்பித்ரி வராம இருந்தா இந்நேரம்கார்ல சென்னைக்கே போய்ருக்கலாம் இப்போ ப்ளான் எல்லாம் ஏரோப்ளானாகிட்டது.’

யோசித்தவன் சட்டென பாண்ட் பாக்கெட்டில் கைவிட்டான், துப்பாக்கியை எடுத்தான்.

“ஸாரி.. எனக்கு வேற வழி தெரியலை” என்று காமினியின் நெற்றிப் பொட்டில் துப்பாக்கியை வைத்தான் சிவா. தீபாவளிக்கு அக்கா, சுவாதியின் மகன் அச்சுதன் கேட்டான் என்று வாங்கின பொம்மைத்துப்பாக்கி தான் நிஜம்போலவே தத்ரூபமாயிருக்கவும் சொக்கநாதன் சோகநாதனாகி கை குவித்தார்.

’ஐயோ மகளைக் கொன்னுடாதே ’அலறினார் வில்லன்.

’அப்போ வழிவிடுங்க ’ என்று அதட்டினான் சிவா.

காரில் ஏறினார்கள் மூவரும்

’காரை தில்லைநகர் ஏழாம்கிராசுக்கு கொண்டு போங்க சீக்கிரம்’ என்று பரபரத்தாள் காமினி.

’எதுக்கு ?’

’சொல்றேன் அப்புறம் விவரம். இப்போ போகணும் அங்க முதல்ல’ என்றாள் காமினி அவள் அம்மாவின் வயிற்றில் இருந்தபோது பழைய ஜ௸னூன் பார்த்த பாதிப்பில்.

ஜோதிடபூஷணம் பரந்தாமன் என்ற போர்டு கொண்ட வீட்டுவாசலில்காரை நிறுத்தச்சொன்னாள்.

கார்நின்றதும் வேகமாய் இறங்கினாள் சேலைமுந்தானைமுடிச்சை அவிழ்த்து

ஒரு பொட்டலத்தை அவரிடம் கொடுத்தாள்.‘வர வழில போலீஸ் ஜீப் வேற நின்னுட்டு இருந்தது பயந்திட்டே இதை எடுத்துவந்தேன்” என்றாள் அவரிடம்.

“காமினிஞ் வெல்டன்.. எப்படியோ போலீஸ் கண்ல மண்ணைத் தூவிட்டு இந்த டைமண்டைக் கொண்டு வந்துட்டியே” என்று பாராட்டினார் பரந்தாமன்.

’சார் போலீசு கண்ல மண்தூவறது கஷ்டம இல்ல எங்கப்பா கண்ல மண்ணைத்தூவிட்டு இந்த வைரத்தை அவர் பொக்கிஷ ரூம்லிருந்துஎடுத்ததைப் பாராட்டுங்க’



'என்னது வைரம் ?'முழித்தான் பரத்

'இது ஒரு துர் அதிர்ஷட வைரமாம்! இது இருக்கற இடத்துல பெரும் துக்கம் சூழுமாம் மனசுல நல்ல எண்ணத்தையே வரவிடாதாம்.ஒரு வீட்டையே இடிச்சிதள்ளிடுமாம் ஒருவருஷம் முன்னாடியே . ஜோஸ்யர்பரந்தாமன் எங்கவீட்டுக்கு வந்தப்போ எங்கப்பா கிட்ட சொன்னாரு இது மஹாளய அமாவாசைக்கு முன்னாடி வைரத்தை வீட்டிலிருந்து அப்புறப்படுத்தலேன்னா பெரிய கெடுதல் நடக்கும் அப்பா அதை நம்பலஅவர் கம்ப்யூட்டர் ஜோதிடர் சிதம்பரம் என்பவர் சொன்னதை நம்பி இதை பொக்கிஷ அறைல வச்சி பூஜை செய்ய ஆரம்பிச்ச நாள் முதல் வீட்ல பசுமாடு செத்துப்போச்சி பாட்டி தடுக்கி விழுந்தாங்க பணம் திருட்டுப் போச்சி ஆனாலும் அப்பாவை சிதம்பரம் தன் கைப்பிடில வச்சிருக்காரு. நான் பரந்தாமனின் ஜோதிடத்தை நம்பினேன் அதான் அப்பாக்குத்தெரியாம கோலிக்குண்டு சைஸ்ல இருக்கற இதைசிரமப்பட்டு எடுத்து வந்தேன்.'

'கல் ஜோசியமா ? ஆகா இனிமே ஜோதிடர் பரந்தாமனுக்கு யோகம் தான்' சிவா சிரித்தான்.

'கிண்டல்செய்யாதப்பா சில வைரம் அமோகமா அதிர்ஷ்டம் கொடுக்கும் ஆனா சில வைரம் வாழ்க்கையே அழிச்சிடும். எனக்கெதுக்கு இது, இப்பொ இந்த வைரத்தை உங்ககண்முன்னாடியே நான் அகண்டகாவேரிலவீசிடறேன்பாருங்க.. '

'ரொம்ப நன்றி அப்போ நாங்க வரோம் ' என மூவரும் கிளம்பினர்.

சொக்கநாதன் கடுப்புடன் வீட்டிற்கு வந்தபோது மனைவி வாயெல்லாம் சமீபத்தில் கட்டிக்கொண்ட பல்லோடு வரவேற்றாள்.

“ராகினி நம்ம பொண்ணை கூட்டி வந்துட்டாங்க காமினி மனசு மாறிட்டாங்க சமைக்கிறா பாட்டெல்லாம் பாடறா !” என்றாள்.

'அப்படியா?'

(ரோபோ) காமினியைப்பார்த்துக் கண் பனித்தார் சொக்கநாதன். ”அம்மாடி ! ஜோசியர் சிதம்பரம் சொல்ற வரனுக்கு உன்னைக்கட்டிதருவேன்மா நான் அதுவரை காத்திரு காமினி!” என்றார்

ஆயிற்று ஒருவாரம் ரோபோகாமினிக்கு வீட்டையும் மனிதர்களையும் பழக்கிவிட்டு ராகினி திரும்பிப்போயிருந்தாள்.

அன்று பத்திரிகை செய்தியாக குடும்ப ஜோதிடர் சிதம்பரம் தனது போலி ஜோதிடத்தொழில் காரணமாய் பலரை ஏமாற்றியதில் போலீசில் மாட்டிக்கொண்டதை படித்தார்.

'அடப்பாவிமனுஷா! பெரிய கம்ப்யூட்டர் ஜோதிடன்னு சொல்லி என்கிட்ட ஏதோ வைரத்தைக்கொடுத்து உசத்தியானதுன்னு பல லட்சம் ரூபாயை வாங்கிக்கிட்டே! வீட்ல பொக்கிஷமா பாதுக்காக சொன்னே!அந்த வைரம் வீட்ல இருக்கக்கூடாது கெடுதல் நடக்கும்னு ஆப்த நண்பன் ஜோதிடன் பரந்தாமன் சொன்னதை நான் கேட்கல.உன் பேச்சை நம்பி அந்த வைரத்தை வீட்லயே வச்சிருந்தேன் மகளையும் அவள் ஆசைப்பட்டவனுக்குக்கட்டித்தரக்கூடாதுன்னு நீ சொன்னதையும் கேட்டேன் நீயே இப்போ போலின்னு தெரிஞ்ச பிறகு எனக்கு அந்த அதிர்ஷ்டமில்லாத வைரம் வேண்டாம் கைவிட்டுப்போன மகளுக்கு அவள் விரும்பினவனையே கட்டிதந்துடப்போறேன் ' என்று பேப்பரை மூடிவிட்டு 'அம்மா காமினி காமினி' என்று மகளின் அறைக்கு ஓடினார்

லோ பேட்டரியின் காரணமாக ரோபோ காமினி அங்கே படுக்கையில் அசையாமல் கிடக்கவும் பதறிப்போனவர் ரோபோமகளை அள்ளி எடுத்து காரில் கிடத்தி ஆஸ்பித்திரி நோக்கி விரைந்தார்.

ஆத்மா நர்சிங் ஹோம்.

மறுபடி ஆஸ்துமா தொல்லை காரணமாய் அங்கே நிஜக்காமினி அட்மிட் ஆகி இருக்க அவளைப்பார்த்து திடுக்கிட்டார் சொக்கநாதன் ' காமினி காமினி' என இருமுறை அலறினார்.



அதற்குமேலும் அப்பாவை ஏமாற்ற மனமில்லாத காமினி நடந்ததைச்சொல்லிவிட்டாள்.

'ரெஜிஸ்டர் கல்யாணம்தானே ஆகி இருக்கு பரவால்லமா நான் ஊரைக்கூட்டி எட்டுப்பட்டிஜனங்களையும் வரவழைச்சி ஜோரா கண்ணாலம் செய்துடறேன்' என்றார்.

பேட்டரி சார்ஜ் ஆகி எழுந்து உட்கார்ந்த ரோபோ காமினி,”அப்போ நான்?” என்று கண்கலங்க,” அம்மாடி நீ எப்போதும் என்கூட கிராமத்துலயே இருக்கலாம்மா” என்ற சொக்கநாதனிடம் ,”ஸாரி மாமாஞ் ரோபோ காமினியை உங்களால் கவனிச்சிக்கமுடியாது. நான் சென்னைக்கு கூட்டிட்டுப்போய் என் ஆராய்ச்சி சாலைல வச்சிக்கணும்” என்றான்.

மாப்பிள்ளை! அப்போ நாங்களும் கிராமத்தைவிட்டு சென்னைக்கே வந்துடறோம். எங்களால சொந்தமகளைக்கூடப் பிரிஞ்சி இருக்கமுடியும் ஆனா.. ஆனா.. ரோபோங்கறீங்களே இவளைவிட்டுப் பிரியமுடியாதுப்பா”

என்று அழ ஆரம்பித்தவரை அருகில்போய் தேற்ற ஆரம்பித்தார்கள் காமினிகள்!

# அறிவோம் தமிழர்

## ‘டி.எம்.எஸ்’

‘டி.எம்.எஸ்’ என்று மக்களால் அன்போடு அழைக்கப்படும் டி.எம்.சௌந்திரராஜன் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட 11 மொழிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடல்களை அவர் தனது வாழ்நாளில் பாடியிருக்கிறார். டி.எம். சௌந்திரராஜனின் மற்றொரு தனி அடையாளமாகக் கூறப்படுவது, ஒவ்வொரு கதாநாயகர்களுக்கும் ஏற்ப தனது குரலை மாற்றி பாடுவார் என்பதுதான்.

அவரது குரலை தீவிரமாக கவனிக்கும் ரசிகர்கள், ஒரு பாடலில் அவர் எடுத்திருக்கும் குரல் மூலமாகவே, அது அவர் எம்.ஜி.ஆருக்கு பாடிய பாடலா அல்லது சிவாஜிக்குப் பாடிய பாடலா என்பதை எளிதாகக் கண்டுபிடித்துவிடுவார்கள் என்று கூறுகின்றனர் இசை ஆர்வலர்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜி, ரஜினி, கமல் தொடங்கி எழுபதுகளில் டி.ராஜேந்திரன் இயக்கத்தில் வெளியான ஒருதலை ராகம் திரைப்படத்தின் நாயகன் வரை, பல்வேறு தலைமுறையைச் சேர்ந்த நடிகர்களுக்கு பாடல்கள் பாடியிருக்கிறார் டி.எம். சௌந்திரராஜன். ஒவ்வொரு கதாநாயகர்களுக்கு பாடல் பாடும்போதும், அவர்களது குரலுக்கு ஏற்றவாறு தனது குரலை அவர் மாற்றியமைத்துக் கொண்டது, மற்ற பாடகர்களிடமிருந்து அவரை தனித்துவமாக விளங்கச் செய்தது.

இவர், மதுரையில் 1922ஆம் ஆண்டு, மார்ச் 24ஆம் தேதி பிறந்தார். அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாக இருந்த காரைக்குடி ராஜாமணி ஐங்காரிடம் இசை பயிற்சி பெற்ற டி.எம்.எஸ், மேடைக் கச்சேரிகளில் பாடி வந்தார்.

கச்சேரிகளில் தனது தனித்துவமான குரல் வளத்தால் மக்களைக் கவர்ந்து வந்த டி.எம். சௌந்தரராஜனுக்கு, 1950ஆம் ஆண்டு சினிமாவில் பாடுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது.

`ராதே என்னை விட்டுப் போகாதடி` என்று கிருஷ்ணவிஜயம் திரைப்படத்தில் இடம்பெற்றிருந்த பாடல், டி.எம்.சௌந்திரராஜனின் முதல் திரையுலகப் பாடலாக அமைந்தது. அதைத் தொடர்ந்து மந்திர குமாரி, தேவகி, சர்வாதிகாரி போன்ற பல படங்களில் தொடர்ச்சியாக அவருக்கு வாய்ப்புகள் கிடைக்கின்றன. டி.எம். எஸ் அவர்களின் குரல் வளத்துடன், அவரது உச்சரிப்பும்



# பெருமை

## பொ.ஜெயச்சந்திரன்

மக்களிடையே பிரபலமடைந்தது. பாடல் பாடுவதோடு சில படங்களில் கதாநாயகனாகவும் தோன்றினார் டி.எம்.சௌந்திரராஜன். 1960களில் வெளியான பட்டினத்தார், அருணகிரி நாதர் போன்ற படங்களில் அவர் நடித்திருந்தார். இதில் மிக குறிப்பாக அருணகிரி நாதர் திரைப்படத்தில் இவர் பாடிய, ‘முத்தைத்தரு பக்தித் திருநகை’ பாடல் இன்றைய தலைமுறையினர் வரை சிறந்த பாடலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

பாசமலர் திரைப்படத்தின் ’மலர்ந்தும் மலராத பாடல்’, பாலும் பழமும் படத்தின் ‘நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும்’, திருவிளையாடல் படத்தின் ‘பாட்டும் நானே பாவமும் நானே’, படகோட்டி படத்தின் ‘கொடுத்ததெல்லாம் கொடுத்தான் அவன் யாருக்காக கொடுத்தான்’ என அவர் முத்திரை பதித்த பாடல்களின் பட்டியல் நீள்கிறது.

11 மொழிகளில் பத்தாயிரத்திற்கும் அதிகமான பாடலை பாடியிருக்கும் டி.எம்.எஸ்., ஆயிரத்திற்கும் மேலான பக்தி பாடல்களுக்கு சுயமாக இசையமைத்துப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தகக்து. இவர் பாடிய பக்தி பாடல்கள் இன்று வரை தமிழ்நாட்டின் அனைத்து கோயில்களிலும் திருவிழாக்களிலும் ஒலித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக தமிழ் கடவுளாக அறியப்படும் முருகனுக்கு இவர் பாடிய பாடல்கள் மிகப் பிரபலமானவை.

டி.எம்.எஸ் இசை பயணம்:

டி.எம்.சௌந்திர ராஜனின் இசைப் பயணத்தில் கவிஞர் கண்ணதாசனின் பங்கும் மிகப்பெரிய அளவில் இருந்தது. டி.எம்.எஸ்ஸின் பாடல்களுக்கு, கண்ணதாசனின் பாடல் வரிகள் பலமாக



அமைந்தன. அவரது பாடல்கள் வெற்றி பெறுவதற்கு அது மற்றுமொரு காரணமாக இருந்தது. 'கௌரவம்' படத்தின் பாடல் காட்சி ஒன்றில் நடிப்பதற்காக படப்பிடிப்புக்கு தளத்துக்கு வந்தார் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். எம்.எஸ் விஸ்வநாதன் இசையமைத்த அந்த பாடலின் ஒலிப்பேழையை ஓடவிட்டார் உதவி இயக்குநர். காட்சிக்கான உடைகளை



அணிந்தபடி சிவாஜி பாடலை கேட்கத்துவங்கினார். ஒருதடவையல்ல... இருதடவையல்ல; கிட்டதட்ட 11 முறைக்கும் மேலாக பாடலை ஓடவிட்டு சிந்தனையில் ஆழ்ந்தபடி பாடலை கேட்டு முடித்த சிவாஜி படத்தின் இயக்குநர் வியட்நாம் வீடு சுந்தரத்தை அழைத்து "சுந்தரா கொஞ்சம் டயம் கொடு...அப்புறம் சூட் பண்ணிக்கலாம்..."

எந்த பாடலையும் அதிகபட்சம் ஓரிருமுறை கேட்டுவிட்டு நடிக்கத் தயாராகும் சிவாஜியின் இந்த மாற்றத்தை கண்டு குழம்பிய சுந்தரம் "என்னண்ணே ஏதாவது பிரச்னையா...சூட்டிங்கை இன்னொரு நாள் வெச்சிடலாமா...? என்றார் பதறியபடி. "இல்லை சுந்தரா, அண்ணன் எனக்கு பெரிய சவாலை கொடுத்திருக்கிறார். இந்தப் பாடலை, தேர்ந்த நடிகனுக்குரிய உணர்ச்சிப் பிரவாகத்தோடு பாடியிருக்கிறார். பல்லவியில் ஒரு விதமான பாவம், ஆக்ரோஷம் அடுத்த சரணத்தில்..இன்னொரு விதமான..தொனி. மற்ற சரணத்தில் இன்னொரு பரிமாணம்ஞ்என பிச்சு உதறியிருக்கிறார்.

ஒரே வரியையே இரண்டு இடங்களில் இரண்டு விதமான தொனிகளில் பாடி அற்புதம் செய்திருக்கிறார். ஒரு நடிகனின் வேலையை அவர் செய்திருக்கும்போது ஒரு நடிகனாக நான் இன்னும் அதிகம் மெனக்கெட்டால்தான் நான் அவர் சவாலை எதிர்கொள்ளமுடியும்... காட்சியும் எடுபடும். அதனால் எனக்கு கொஞ்சம் ஒய்வு கொடு பிறகு நடித்துக்கொடுக்கிறேன்" என ஓய்வறைக்குள் புகுந்துகொண்டார் சிவாஜி.

உச்சி முதல் உள்ளங்கால்வரை நடிப்பை வெளிப்படுத்தும் நடிகர் திலகத்துக்கு, தம் குரலிலேயே சவால் கொடுத்த அந்த பாடகர் டி.எம். சௌந்தரராஜன் என்கிற டி.எம்.எஸ்.! கவுரவம் படத்தில் இடம்பெற்ற "நீயும் நானுமா... கண்ணா நீயும் நானுமா..." என்ற அந்த பாடலில் சிவாஜிக்கு சவால் தந்த டி.எம்.எஸ்க்கு தபால் தலைவெளியிட்டு கவுரவம் செய்திருக்கிறது மத்திய அரசு.

இந்திய அளவில் இசைத்துறையில் சாதனை படைத்த 10 ஆளுமைகளுக்கு தபால் தலை வெளியிட்டு கவுரவித்திருக்கிறது மத்திய அரசு. இந்த பட்டியலில் இடம்பெற்ற ஒரே தென்னிந்திய கலைஞர் டி.எம்.எஸ் மட்டுமே.

தமிழ்சினிமாவின் சாகாவரம் பெற்ற குரலுக்கு சொந்தக்காரரான டி.எம். சவுந்தரராஜன், மதுரையில் 1923— ம் ஆண்டு மார்ச் மாதம் 24—ம் தேதி பிறந்தார். பிரபல வித்வான் காரைக்குடி ராஜாமணி ஐயங்காரிடம் முறையாக இசைப் பயிற்சி பெற்றார். இசை ஞானம் அடைந்தபின் தன் அறிவை பெருக்கிக்கொள்ள சிறியதும் பெரியதுமான கச்சேரிகளில் பாட ஆரம்பித்தார். தன் திறமையை மெருகேற்றிக்கொள்ள மதுரை சுற்றுப்புறங்களில் கோயில் பஜனைகளில் கூட சங்கடங்கள் இன்றி பாடுவார். டி.எம்.எஸ் திரையுலகில் நுழைய காரணம் அவரது குரல்வளம்.

ஆம் அவரது குரல் அன்றைய சூப்பர் ஸ்டார் தியாகராஜ பாகவதரின் குரலை ஒத்திருக்கும். "டேய் உன் குரலுக்கு பாகவதர் போல் நீ எங்கேயோ போகப்போறெ" என அவருக்கு எதிர்காலத்தை பற்றிய நம்பிக்கையை நண்பர்கள் ஏற்படுத்திவைத்தனர். கச்சேரிகளில் அவர் பாடுகிறபோது சற்று கண்ணை மூடிக்கேட்டால்



பாடல்தான் சினிமாவில் அவர் குரல் ஒலித்த முதல்பாடல். தொடர்ந்து மாடர்ன் தியேட்டர்ஸின் மந்திரி குமாரி, தேவகி, சர்வாதிகாரி போன்ற படங்களில் பாடினார். மலைக்கள்ளனில் எம்.ஜி.ஆருக்கு பாடிய எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே" பாடல் பட்டிதொட்டியெல்லாம் டி.எம். எஸ் என்ற மந்திரக்குரலோனை கொண்டு சேர்த்தது. தொடர்ந்து திரையுலகில் டி.எம்.எஸ்ஸின் சகாப்தம் துவங்கியது.

எம்.ஜி.ஆர் சிவாஜி என்ற இருபெரும் ஆளுமைகளின் திரையுலக வரலாற்றில் டி.எம்.எஸ் தவிர்க்கவியலாதவர். எம்.ஜி.ஆர் பாட்டு சிவாஜி பாட்டு என இவர்களை அடையாளப்படுத்தும் அனைத்து பாடல்களும் டி.எம்.எஸ் பாடியவை. தம் குரல் வளம், இசைஞானம் இவற்றுக்கிடையில் எல்லை தாண்டாத மற்ற பாடகர்களிடமிருந்து டி.எம்.எஸ் முற்றிலும் மாறுபட்டார்.

திரையுலகின் அன்றைய இருபெரும் ஆளுமைகளுக்கும் இருவேறுவிதமாக பாடும் திறமை பெற்றிருந்த இவரது பாடல்களை கண்ணை மூடியபடிக் கேட்டால் பாடலை உச்சரிக்கும் கதாநாயகன் யார் என கண்டறிந்துகொள்வர் அந்நாளைய ரசிகர்கள். இது வேறு எந்த பாடகருக்கும் கிடைக்காத பேறு. ஆனால் இது டி.எம். எஸ் எளிதில் சாதித்தது அல்ல...அதன்பின் இருந்த அவரது உழைப்பு அளப்பரியது.

தியாகராஜ பாகதவர்தான் நினைவுக்கு வருவார். தெய்வாதீனமாக அமைந்த இந்த குரல்வளம்தான் அவருக்கு சினிமா உலக கதவு திறக்க காரணமானது. புகழின் உச்சியில் இருந்த சமயம் தியாகராஜ பாகவதர் திருச்சியில் கச்சேரி செய்ய வந்திருந்தார்.

அதே கச்சேரியில் அவருக்கு முன்பு பாடிய சிறுவன் ஒருவனது குரல் அவரை ஈர்த்தது. ஆச்சர்யத்துடன் சிறுவனை அழைத்து பாடச் சொன்னார் பாகவதர். பாகவதரின் புகழ்பெற்ற பாடல் ஒன்றை அட்சரம் பிசகாமல் பாடிக் காண்பித்தான் சிறுவன்.

“சென்னைக்கு வா தம்பி நல்ல எதிர்காலம் இருக்கு” என வாஞ்சையாய் தலையை தொட்டு ஆசிர்வதித்தார் தியாகராஜபாகவதர். திரையுலக கனவில் மிதக்க ஆரம்பித்த சிறுவன் டி.எம். சௌந்தரராஜன் சினிமா வாய்ப்பு தேடி சென்னை வந்தார்.

சுந்தரராவ் நட்கர்னி இயக்கத்தில் வெளியான கிருஷ்ண விஜயம் (1950) திரைப்படத்தில் “ராதே நீ என்னை விட்டுப் போகாதேடி” என்ற

உரத்த குரலும் அழுத்தமான பேச்சு வன்மையும் கொண்ட சிவாஜி பாடல்களுக்கு அடிவயிற்றிலிருந்து குரலை எழுப்புவார். எம்.ஜி.ஆரின் சன்னமான குரலுக்கு கண்டமும் நாசியும் இணையும் இடத்திலிருந்து பாடுவார்... ஜெய்சங்கர், ரவிச்சந்திரன்,முத்துராமன் சிவகுமார், நாகேஷ் என இன்னபிற நாயகர்களுக்கு கண்டத்திலிருந்து சில ஃபார்முலாவில் பாடி அசரடிக்கும் திறமைசாலியாக உலாவந்தவர் டி.எம்.எஸ்.

பாடல்களை பாடுகிறபோது இசையமைப்பாளர் சொல்லிக்கொடுத்ததுபோல் நில்லாமல் பாடலை மெருகேற்ற பெரும் சிரத்தை எடுத்துக்கொள்வார் டி.எம்.எஸ். அதற்காக பாடலின் இசை அம்சங்களை தவிர்த்து பாடல்காட்சியின் சூழலையும் இயக்குநரிடம் கேட்டு தெரிந்துகொண்டு பாடுவது அவரது குணம். ‘உயர்ந்த மனிதன்’ படத்தில் இடம்பெறும் ‘அந்த நாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே’ பாடல் நடுத்தர வயதைக் கடந்த



கதாநாயகன் தன் பால்ய நினைவுகளை சுமந்தபடி தன் வாழ்க்கையை பின்னோக்கி பார்த்து பாடுவதாக காட்சி. படத்தின் கதாநாயகன் சிவாஜி மூச்சிரைக்கப்பாடுவதாக இயக்குநர் காட்சியை சித்தரித்திருந்தார். அதைக்கேட்டுக்கொண்ட டி.எம்.எஸ் ரிக்கார்டிங் நடந்த அறையில் பாடலை பாடியபடி தேவைப்பட்ட நேரத்தில் பின்னாளில் சிறிது தூரம் ஓடிவந்து திரும்ப மைக் முன் வந்து பாடுவார். காட்சிக்கு தக்கபடி டி.எம்.எஸ் குரல் தத்ரூபமாக பாடல் காட்சிக்கு பொருந்தி பாராட்டுகளை பெற்றுத்தந்தது. அந்த அர்ப்பணிப்புக்கு பெயர்தான் டி.எம்.எஸ்.

வீரம், காதல், சோகம், துள்ளல், தத்துவம், நையாண்டி மற்றும் கிராமிய மணம் கமழும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திரைப்படப் பாடல்களையும்,மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பக்திப் பாடல்களையும் பாடியுள்ளார். முருகனுக்காக அவர் பாடி இசையமைத்த பாடல்கள் சாகாவரம்பெற்றவை. மேதைகள் குழந்தைத்தன்மை கொண்டவர்கள் என்பதற்கு டி.எம்.எஸ் —ம் விதிவிலக்கல்ல. திரையுலகில் யார்மீதும் அவர் பொறாமை கொண்டவரல்ல அவர். மாறாக திறமைசாலிகளை அவர் அடையாளங்கண்டு வளர்த்திருக்கிறார்.

50 களின் பிற்பகுதியில் திருச்சி வானொலி நிலையத்துக்கு பாடல் பாடச் சென்றபோது அங்கு பணிபுரிந்துவந்த கவிஞர் ஒருவரின் திறமையை பாராட்டி 'சென்னைக்கு வாய்யா உனக்கு எதிர்காலம் இருக்கு' என வாஞ்சையோடு வாழ்த்திவிட்டுச் சென்றார்.

அவர்தான் பின்னாளில் காவியக்கவிஞர் என பெயர்பெற்ற வாலி. பாடகரான டி.எம்.எஸ் தேர்ந்த சமையற்கலைஞர் என்பது பலரும் அறியாதது. தன் குரலின் இனிமைக்காக பல சமையற்குறிப்புகளை அறிந்துவைத்ததோடு ஓய்வு நேரத்தில் தானே சமைத்து குடும்பத்தினருக்கு பரிமாறுவார்.

"டி.எம்.எஸ், எம்.ஜி.ஆர், சிவாஜி, நான் உட்பட அரசியலில் பங்கெடுத்த நடிகர்களின் திரையுலக வாழ்க்கைக்கு மட்டும் அல்ல; அரசியல் வாழ்க்கையிலும் டி.எம்.எஸ்க்கு முக்கிய பங்கு உண்டு. ஆம்...தேர்தல் பிரசாரங்களுக்கு நாங்கள் செல்லும் இடங்களில் எத்தனை மணிநேரங்கள் நாங்கள் தாமதமாக சென்றாலும் மக்களை காத்திருக்கச்செய்தது, எங்களுக்காக அவர் குரல் கொடுத்து பாடிய பாடல்கள்தான். இப்படி எங்கள் அரசியல்வாழ்விலும் அவர் பங்கு முக்கியமானது" என வெளிப்படையாக சொன்னார் நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன். இது நிதர்சனமும் கூட.

கதாநாயகர்களுக்காக குரல் கொடுத்த டி.எம்.எஸ் 1962—ம் ஆண்டு 'பட்டினத்தார்' என்ற படத்தில் தானே க(தை)தாநாயகனாக நடித்தார்.

அருணகிரிநாதர் என்ற திரைப்படத்திலும் கதாநாயகனாக நடித்த டி.எம்.எஸ். அதில் முருகனை புகழ்ந்து "முத்தைத் திருபத்தித் திருநகை" எனும் பாடலை பாடியிருந்தார். தான் பாடும் பாடலின் பொருளை அறிந்தபின்னரே பாடும் வழக்கமுடைய டி.எம்.எஸ் இந்த பாடலை பாடும் முன் கிருபானந்தவாரியாரிடம் நேரில் சென்று அதற்கான பொருளைக் கேட்டறிந்த பின்னரே பாடினார். புகழ்பெற்ற அந்த பாடலைக் கேட்ட அவரது பையன்களில் ஒருவர், "அப்பா, உனக்கு சிவாஜி குரல் கொடுத்தாரா" என கேட்க விழுந்து விழுந்து சிரித்தாராம் டி.எம்.எஸ்.

"வடநாட்டுக்கு ஒரு முகமது ரஃபி என்றால் தென்னாட்டுக்கு டி.எம்.சவுந்தரராஜன் என ஒரு முறை டி.எம்.எஸ் குறித்து சிலாகித்த வாலி, கர்நாடக பாடகர்களே கூட சமயங்களில் சுருதி



விலக்கக்கூடும். டி.எம்.எஸ் எப்போதும் அதை செய்யமாட்டார். அத்தனை இசைஞானம். லட்ச ரூபாய் கொடுப்பதாக சொன்னாலும் டி.எம்.எஸ் சுருதி விலகி பாடமாட்டார். அதுதான் டி.எம். எஸ்” என இன்னும் ஒரு படிமேலாக டி.எம்.எஸ் பற்றி எம்.எஸ்.வி குறிப்பிட்டார் ஒருசமயம்.

உண்மைதான், இசைக்காக எதையும் விட்டுக்கொடுக்கத் தயங்காதவர் டி.எம்.எஸ். தான் இசையமைத்த ஒரு படத்தில் தன் இருமகன்கள் இசையுலகில் தலையெடுத்த நேரத்திலும் பாடலின் சுவைக்காக அவர்களை தவிர்த்து மற்றொரு புகழ்பெற்ற பாடகர் திருச்சி லோகநாதனின் மகனான டி.எல்.மகராஜனை பாடவைத்தார். பாடகருக்கு புகழ் கிடைக்கும் பாடல் என்று தெரிந்தும் இசைக்கே முக்கியத்துவம் அளித்து வேறொருவரை பாடவைத்த அவரது பண்பு ஆச்சர்யமானது.

தமிழை அட்சர சுத்தமாக அழகாக உச்சரித்து தமிழுக்கு பெருமை சேர்ந்த டி.எம்.எஸ், தமிழை தாய்மொழியாக கொண்டவரல்ல என்பது ஆச்சர்யமான தகவல்.

2010ல் கோவையில் நடந்த உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில் “செம்மொழியான தமிழ்மொழியாம்” என பாடியதுதான் இசையுலகில் டி. எம். சௌந்தரராஜன் இறுதியாக பாடிய பாடல். 3 தலைமுறையினரை தன் இனிய குரலால் மகிழ்வித்த ‘மதுரை மாங்குயில்’ டி.எம். எஸ்ஸின் புகழ் தமிழர்கள் காதுகள் இல்லாது பிறக்கும் காலம் வரை நீடித்து நிலைக்கும்

2002ஆம் ஆண்டு தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத் தலைவராக டி.எம்.எஸ். நியமிக்கப்பட்டார். 24 வயதில் திரையுலகில் பாடத்துவங்கிய இவர், தன்னுடைய 88வது வயது வரை பாடி வந்தார்.

ஏ.ஆர். ரகுமான் இசையில் உருவான ’செம்மொழியான தமிழ் மொழியாம்’ என்ற பாடலில், மற்ற இளம் பாடகர்களுடன் இணைந்து டி.எம்.எஸ் பாடியிருந்தார். அதுவே அவர் பாடிய கடைசி பாடல் என கூறப்படுகிறது.

கிட்டதட்ட 65 ஆண்டுகள் அவர் திரையுலகில் தன்னுடைய இசை பயணத்தைத் தொடர்ந்து வந்தார். தன்னுடைய தனித்துவமான இசைப் பயணத்தில், இவர் செய்த சாதனைக்காக பேரவைச் செம்மல், கலைமாமணி, பத்மஸ்ரீ உள்ளிட்ட ஏராளமான விருதுகள் இவருக்குக் கிடைத்துள்ளன.

இது தவிர கலா ரத்னம், கான ரத்னம், அருள் இசை சித்தர், நவரச பவ நளின கான வர்ஷினி, ஞானாமிர்த வர்ஷினி, சாதனை சக்கரவர்த்தி, பாரதிய இசை மேகம், கான குரலோன் போன்ற பட்டங்களும் அவருக்கு ரசிகர்களால் சூட்டப்பட்டது.

2013ஆம் ஆண்டு, தன்னுடைய 91வது வயதில் சென்னையில் இருக்கும் அவரது வீட்டில், வயது மூப்பு காரணமாக காலமானார் டி.எம். சௌந்தரராஜன். தன்னுடைய இறுதி காலம் வரை சென்னை மந்தவெளி பகுதியில்தான் அவர் வசித்து வந்தார்.



# சிவகாமியின்


## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

## பிக்ஷுவின் வருகை 49

சுக்கில பட்சத்துப் பிரதமையில் சிவகாமி வாதாபி நகரின் நாற்சந்தியில் நடனம் ஆட ஆரம்பித்தாள். சுக்கில பட்சம் முடிந்து கிருஷ்ணபட்சம் வந்தது. கிருஷ்ண பட்சம் முடிவடைந்து மீண்டும் சுக்கில பட்சம் வந்தது. சிவகாமியின் வீதி நடனம் இன்னும் நடந்து கொண்டே இருந்தது.

தளபதி விரூபாக்ஷன் நடன அரங்கத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டிருந்தான். வாதாபி நகரின் முக்கிய நாற்சந்திகளை ஒவ்வொன்றாக அவன் தேர்ந்தெடுத்து அங்கங்கே கொண்டு போய்த் தமிழகத்து ஸ்திரீ புருஷர்களை நிறுத்தினான். சிவகாமியும் அங்கங்கே போய் நடனமாடினாள். அந்தக் காட்சியைப் பார்ப்பதற்குத் தினந்தோறும் மக்கள் பெருந்திரளாகக் கூடினார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும் சிறுவர் சிறுமியர்களும் திரண்டு வந்தார்கள்.

அரசாங்க அதிகாரிகள் ரதம் ஏறி வந்தார்கள். அந்தப்புரத்து ராணிகளும் சேடிகளும் பல்லக்கில் ஏறி வந்தார்கள். புலிகேசிச் சக்கரவர்த்தி காஞ்சியிலிருந்து சிறைப் பிடித்துக் கொண்டு வந்த நாட்டியப் பெண், வாதாபி நகரின் வீதிகளில் நடனமாடுகிறாள் என்னும் செய்தி எங்கெங்கோ பரவலாயிற்று.




அதன் பயனாக அக்கம் பக்கத்து ஊர்களிலேயிருந்தும் ஜனங்கள் மேற்படி காட்சியைப் பார்க்க வந்தார்கள். தூர தூரங்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் வர ஆரம்பித்தார்கள். தேசமெங்கும் நானா திசைகளிலும் இதைப் பற்றியே பேச்சாயிருந்தது.

சிவகாமியின் விஷயத்தில் வாதாபி ஜனங்களின் மனோபாவம் முதலில் ஒருவிதமாயிருந்தது. போகப் போக அவர்களுடைய மனோபாவம் வேறு விதமாக மாறிக் கொண்டிருந்தது.

முதலில் அந்த அற்புத நடனத்தைப் பார்த்துவிட்டு வாதாபி மக்கள் பிரமித்துப் போனார்கள். "இப்படியும் ஒரு அற்புதக் கலை உண்டா?" என்று வியந்தார்கள். ஊரை விட்டு, உற்றாரை விட்டு, சொந்த நாடு, நகரத்தை விட்டுத் தூர தேசம் வந்திருக்கும் அந்தக் கலைச் செல்வியிடம் அவர்களுக்கு அன்பும் ஆதரவும் பச்சாத்தாபமும் ஏற்பட்டன.

அவர்களில் பலர் சிவகாமியுடன் வார்த்தையாட விரும்பினார்கள். தங்கள் வியப்பையும் மதிப்பையும் அன்பையும் அபிமானத்தையும் வெளியிட விரும்பினார்கள். அவள் வசித்த மாளிகைக்குப் போய் அவளுடன் சிநேகம் செய்து கொள்ள விரும்பினார்கள். தத்தம் வீட்டுக்கு அவளை அழைத்து உபசரிக்கவும் ஆசைப்பட்டார்கள்.

ஆனால், வாதாபி ஜனங்களின் சிநேகமனப்பான்மை சிவகாமியின் உள்ளத்தில் எவ்வித எதிரொலியையும் உண்டாக்கவில்லை. நடனம் ஆடும் போது ஏற்பட்ட கிளர்ச்சிக்குப் பின்னர் இயற்கையாகத் தோன்றும் சோர்வும் ஏற்கெனவே குடிகொண்டிருந்த மனக்கசப்பும் சேர்ந்து சிவகாமியை அவர்களுடன் முகங்கொடுத்துப் பேச முடியாமற் செய்து வந்தன.




நாளாக ஆக, “அந்தத் தமிழகத்து நடனப் பெண் ரொம்ப கர்வக்காரி!” என்ற செய்தி நகரமெங்கும் பரவிற்று. ஆரம்பத்தில் ஏற்பட்டிருந்த அபிமானம், அனுதாபம் எல்லாம் வெறுப்பும் பரிகாசமுமாக மாறலாயின. சிவகாமி வரும்போதும் போகும்போதும், ஜனங்கள் அவளைப் பற்றிப் பரிகாசமாகப் பேசுவதும் கேலி செய்து சிரிப்பதும் அதிகமாகி வந்தன.

ஆரம்பத்தில் சிவகாமியின் நடனத்தை “அற்புதம்“ என்றும் “தெய்வீகக் கலை” என்றும் சொல்லி வந்த அதே ஜனங்கள் கொஞ்ச நாளைக்கெல்லாம் அதைப் “பைத்தியக்காரியின் கூத்து” என்று சொல்லத் தொடங்கினார்கள்!

சிவகாமி சிவிகையில் போகும் போது சிறுவரும் சிறுமிகளும் ஊளையிட்டுக் கொண்டு பின்னால் ஓடினார்கள். சில சமயம் மண்ணையும் அவள் மீது






வீசி எறிந்தார்கள். இதையெல்லாம் சிவகாமி சிறிதும் பொருட்படுத்தவில்லை. அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்திருந்தது. அசைக்க முடியாத ஓர் உறுதி அவள் மனத்தில் ஏற்பட்டிருந்தது. புகழையும் இகழையும் பாராட்டையும் நிந்தனையையும் ஒன்றாகக் கருதும் மனோநிலையைச் சிவகாமி அடைந்திருந்தாள். கடவுளின் அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டு இந்தப் பூவுலகத்தில் தாமரை இலைத் தண்ணீர் போல் வாழும் முற்றும் உணர்ந்த ஞானியை அவள் ஒத்திருந்தாள்.

சிவகாமி வாதாபி வீதிகளில் நடனம் ஆட ஆரம்பித்து ஏறக்குறைய ஒன்றரை மாத காலம் ஆயிற்று. ஒருநாள் வழக்கம் போல் சிவகாமி நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். சூரியாஸ்தமன பேரிகை முழக்கம் கேட்டது. சிவகாமி ஆட்டத்தை நிறுத்தினாள். சற்று மூச்சு வாங்குவதற்காக நின்றுவிட்டுப் பல்லக்கை நோக்கிச் செல்லத் திரும்பினாள்.

அவள் திரும்பிய திக்கில் தோன்றிய ஒரு தோற்றம் அவளைச் சிறிது நேரம் மனம் குழம்பித் திகைத்து நிற்கும்படிச் செய்து விட்டது. அந்தத் தோற்றம் நாகநந்தியடிகளின் உருவந்தான்.

வியப்பினால் விரிந்த கண்களில் கோபாக்னியின் பொறி பறக்க, இமையா நாட்டத்துடன் நாகநந்தி தன்னை வெறித்துப் பார்த்துக் கொண்டிருப்பதைச் சிவகாமி பார்த்தாள். நாகநந்தியின் முகபாவம் கணநேரத்தில் மாறியது. கண்களில் கோபாக்னி நிறைந்து பரிதாபம் தோன்றியது. அவளுடைய கண்களின் பார்வையும் முகத்தின் பாவமும் “மன்னித்து விடு” என்று கெஞ்சுவது போன்ற உணர்ச்சியை ஊட்டின.

இதனால் மேலும் திகைப்படைந்த சிவகாமி,



மெதுவாகச் சுயப்பிரக்ஞை அடைந்து குழப்பத்தைச் சமாளித்துக் கொண்டு தலை குனிந்த வண்ணம் நடந்து சென்று பல்லக்கில் ஏறிக் கொண்டாள்.

பல்லக்கு வழக்கம் போல் மாளிகையை நோக்கிச் சென்றது. ஆனால், சிவகாமியின் உள்ளம், ஜனக் கூட்டத்தின் நடுவே நின்ற நாகநந்தியடிகளிடம் இருந்தது.

“இந்த புத்த பிக்ஷு யார்? வேடம் பூண்ட வாதாபிச் சக்கரவர்த்திதானா? உருவம் அப்படியே இருக்கிறது, ஆனால் கண்களின் தோற்றத்திலும் முகபாவத்திலும் எவ்வளவு வித்தியாசம்? உணர்ச்சி என்பதே இல்லாத கல்நெஞ்சைப் பிரதிபலிக்கும் புலிகேசியின் முகத்துக்கும் கனிவும் இரக்கமும் கலைப் பரவசமும் ததும்பிய பிக்ஷுவின் முகத்துக்கும், எவ்வளவு வித்தியாசம்...?”

பிக்ஷுவின் தோற்றம் சிவகாமிக்குப் பல்லவ நாட்டையும் அரண்ய வீட்டையும் நினைவூட்டியது. அந்தக் காலத்து வாழ்வெல்லாம் ஞாபகம் வந்தது. உண்மையில் ஒரு வருஷத்துக்கு மேல் ஆகவில்லை. ஆனால், எத்தனை யுகம் ஆகிவிட்ட மாதிரி தோன்றுகிறது!

மாளிகையை அடைந்த பிறகும் சிவகாமியின் உள்ளம் வழக்கமான அமைதியை அடையவில்லை. ஏதோ ஓர் ஆவல், அர்த்தமில்லாத பரபரப்பு, அவள் மனத்தில் குடிகொண்டிருந்தது. அவளுடைய உள்ளம் அப்படி யாரை எதிர்பார்த்தது? அவளுடைய கண்கள் யாரை எதிர்பார்த்து அவ்விதம் அடிக்கடி வாசற்பக்கம் நோக்கின? நாகநந்தி பிக்ஷுவையா?

இரவு ஒரு ஜாமம் முடியும் தறுவாயில் நாகநந்தி அந்த மாளிகைக்குள் நுழைந்த போது, சிவகாமியின் கண்களில் தோன்றிய ஒளியும் அவளுடைய முகபாவமும் அவள் புத்த பிக்ஷுவைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் என்பதை உணர்த்தின.

நாகநந்தியும் சிவகாமியும் ஒருவர் முகத்தை ஒருவர் ஏறிட்டுப் பார்த்தார்கள். அவர்களுடைய கண்களின் தீக்ஷண்யம், ஒருவருடைய இருதய அந்தரங்கத்தை இன்னொருவர் ஊடுருவிப் பார்க்க முயன்றதாகத் தெரியப்படுத்தியது.

சற்று நேரம் அந்த மாளிகையில் மௌனம் குடிகொண்டிருந்தது. மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பிக்ஷுவின் தழு தழுத்த குரல், “சிவகாமி! என்னை மன்னித்துவிடு!” என்று கூறியது.

(சபதம் தொடரும்)




# ஞாயிறு

## நிழலின் அருமையும் வெயிலின் பெருமையும் !

மின்சாரம் வந்த பிறகு, பௌர்ணமி நிலவின் அழகும் அமாவாசை இருளின் செறிவும் அறியப்படாது போயின. சுழலும் மின் விசிறிகள் வந்த பிறகு, தென்னை, பனை ஓலை விசிறிகள் காணாமல் போய்விட்டன. கதிரொளி படாத சுனையின் குளிர் நீரை, பிரிட்ஜ் பெட்டிகள் தருகின்றன. குளிரக் குளிரக் காற்று தரும் ஏ.சி. கருவிகள் மலிந்துவிட்டன.

கொளுத்தும் கோடை வெயிலில், வியர்வை அருவியாய் ஊற்றெடுத்து, உடலெங்கும் நனைத்து ஓடும் ஆறாக நீளும்போது நிழல் தேடி ஏங்கும் மனது, 'நிழலின் அருமை வெயிலில் தெரியும்' என்ற பழமொழியை உருவாக்கியது. இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க — வெப்பத்தின் திட்பத்தைச் செருப்பு முதலான காலணிகள் இல்லாதுபோக்கிவிட்டன. அருமையும் கொடுமையும் அளவைப் பொருத்தே அமைகின்றன. காலம் அதற்குக் காரணமாகிறது. உண்மையில் நம்மைவிடவும் வெயிலை அனுபவிப்பவை, தாவரங்களே. வெயிலை உணவாக்கும் வித்தையைக் கற்றவை, தாவரங்களேயாம். அதனால்தான், மணிவாசகப் பெருமான், இவ்வுலகத்தைத் 'தாவர சங்கமம்' என்று பாடுகிறார்.




மகாகவி பாரதியாரின் வசனகவிதையில், 'ஜகத் சித்திரம்' என்றொரு கவிதை நாடகம் இருக்கும். அதில், பசுமாடு சொல்கிறது: 'வெயிலைப் போல் அழகான பதார்த்தம் வேறில்லை'. வெயிலைச் சுடச் சுடச் சுவைத்து உண்பவை மாடுகள். கொளுத்தும் வெயிலில் பச்சைப் புல்லை மேயும் பசுக்கள் அதன் சூடு குறையாமல், சுவை கூட்டிக் கறக்கும் பாலில் இறக்கி வைக்கின்றன.

'வைட்டமின் டி' தரும் சூரிய ஒளி, தானும் உணவாகி, கீரை, காய், கனி, தானிய மணிகள் எனத் தரும் தாவரங்களை விளைவித்து மேலும் உணவு தரும் தாயாகிச் சிறக்கிறது. வெயில் வருமுன் திட்டமிட்டு, உணவுப் பொருள்களையும், தானியமணிகளையும் வெளியில் பரத்தி உலர்த்தி விடுவதும், நிழல் வருமுன் அவற்றைத் தொகுத்து அள்ளி வைப்பதும் வேளாண் மக்களின் வேலையாக இருந்தது.

கதிரடித்து 'ராசி' என்னும் அரிசி இல்லாத




# போற்றுதும்

கிருங்கை சேதுபதி

பதர்களை நீக்கி, அரைகுறையாய் விளைந்த ‘கருக்காய்’ நெல்களை ஒதுக்கி, முழுமையாய் விளைந்த நெல்மணிகளைப் பாதுகாக்க, வெயிலின் பயன்பாடு மிகவும் தேவை. அதற்கு மட்டுமல்ல, அடித்துத் துகைக்கப்பட்ட தோகைகளை வைக்கோல் ஆக்குவதற்கும் கதிரவனே கதி. அதனால்தான், தை முதல் நாள் அக்கதிரவனுக்கு நன்றி சொல்லி வைக்கப்படுகிறது, பொங்கல்.

வேடிக்கை விளையாட்டில் சில ரகசியங்களைச் சொல்லி, ‘யாரிடமும் சொல்லாதே’ என்று பாடுவதுண்டு. அதில் ஒன்று, ‘நெல்லுக்குள்ளே அரிசியிருக்கு, ரகசியம், யாரிடமும் சொல்லாதே’ என்று வரும். நெல்லில் இருந்து அரிசியைக் கண்டு கொண்டுவரவும் இந்த வெயில்தான் உற்ற துணை. மச்சுகளில் இருக்கும் நெல்லை அள்ளிக் காய வைத்து வெயில் காலத்தில் குற்றுவார்கள். இக்காலத்தில், அரிசி ஆலைகளில் அரைத்து உமியைத் தவிடுபொடியாக்கி அகற்றுகிறார்கள். அது பச்சரிசி ஆகிவிடுகிறது. அதேநெல்லை, ஊறவைத்து, விடிவதற்குள் அவித்து மணம் வந்தவுடன் வடித்துக் கொட்டி, வெயிலில் காய வைத்தால், அது புழுங்கல். நெல்லைப் புழுக்குவதால் அது புழுங்கல். வெயில் காய்ச்சல், நிழல் காய்ச்சல் என்று பக்குவமாகக் காய வைக்க வேண்டும். காய்ந்ததை அறிய உள்ளங்கையில் அள்ளி வைத்துத் தேய்த்து உமி நீக்கிப் பார்ப்பார்கள். கொஞ்சம் கூடுதலாக, காய்ந்துவிட்டால், ‘நெல் முருகிவிட்டது’ என்று பதறுவார்கள். அதனால் அரிசி இடிந்துபோகும்.

உளுந்து முதலான பயறுகளை, பருப்புகளை அறுவடைக் காலத்தில் குறைந்த விலைக்கு



வாங்கி, உடைத்தும் திரித்தும் வகைப்படுத்தி உரிய மரப்பெட்டிகளில் சேமிக்கும் முன்னோர்கள், அவை உளுத்துப்போகாமல் இருக்க, இந்தக் கோடைக்காலத்தைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு. வற்றல், வடகம், அப்பளம், ஊறுகாய், உப்புக் கண்டம், இவற்றோடு, ஈசல் முதலான உணவுப் பொருள்களை வெயிலில் காய வைத்துச் சுவை கூட்டுவதோடு, பாதுகாப்பதும் நடைமுறை. அது தனிக்கதை.


கலவை சரியாக இருக்கிறதா என்று கைப்பக்குவம் பார்த்து, துணைப்பொருள்கள் சேர்த்து, குமிழ்




குமிழாக அள்ளி வைத்தும், பிழிந்து வைத்தும், இளவெயிலில் இடம் பார்த்துச் செய்து வைத்த வடகங்களை, காய்களாய் வாங்கி நறுக்கிப் பதமாய் வேகவைத்த வற்றல்களைப் பார்க்கிறபோதே நாக்கில் நீர் ஊறும். காக்கை குருவிகள் கவர்ந்து செல்லாமல் செயற்கையாய் நிழல் அமைத்துக் காவல் காக்கும் பொழுதுகளில் வெயிலில் பாதி வெந்த நிலையில் அவற்றின் சில துண்டுகளை எடுத்துப் பதம் பார்ப்பதும், சுவை பார்ப்பதும் விலைக்கு வாங்கும்போது கிடைக்கப்பெறாத அனுபவங்கள்.

சாம்பார்ப் பொடி, மிளகாய்ப்பொடி முதலானவற்றுக்கான மிளகாய் வற்றல், மஞ்சள், உள்ளிட்ட மசாலாப் பொருள்களைத் தனித்தனியே காய வைக்கும்போது தெரியும் வண்ணங்களில் உச்சி வெயில் ஊடுருவிச் சூடும் சுவையும் கூட்டுகிற பாங்கைப் பெரியவர்கள் அனுபவித்த அளவுக்கு இப்போதைய தலைமுறை அறிய வழியில்லை. புறநானூற்றில், ஓர் இனிய காட்சி. முன்னையும் முசுண்டையும் பின்னிப் பிணைந்த பலாமரநிழலில், யானை வேட்டுவன் பகலில் உறங்கிக் கொண்டிருக்கிறான். அந்நிழலின் மற்றொரு புறத்தில், உயிருடன் மான்பிடிக்க உதவும் பெண்மான் (பார்வை மான்) அதனைத் தழுவும் ஆண் மான். கொளுத்தும் கோடை வெயிலில், வெளிமுற்றத்தில் பரத்தி விரித்த மான்தோலில், தினை அரிசி காயவைக்கப்பட்டிருக்கிறது. அரிதின் முயன்று விளைவித்துப் பக்குவப்படுத்திய தினைஅரிசியைக் காட்டுக் கோழி, காடை, கௌதாரி போன்ற பறவைகள் கவர்ந்து தின்று கொண்டிருக்கின்றன. ஓசையிட்டு அவற்றை விரட்டினால், தூங்கும் கணவனுக்கும், இணையொடு கூடி இன்பம் பெறும் மானுக்கும் இடையூறாகுமே எனப் பார்த்துக் கொண்டிருக்கிறாள், அவன் மனைவி' என்று பாடுகிறார் வீரைவெளியனார். (புறநானூறு — 320). தன்னுயிரோடு பிற இன்னுயிர்க்கும் துன்பம் கொடுக்கக்கூடாதென நினைக்கும் பண்பாட்டுப் பாங்கினை இப்பாடல் புலப்படுத்துகிற அழகில், வெயில் பின்புலமாகிறது.

மற்றொரு காட்சி, காவிரிப்பூம்பட்டினத்தில் கடற்கரை சார்ந்த பாக்கங்களில் வாழ்கிற பெண்கள், தங்கள் வீட்டின் முற்றத்தில் உலர்த்துவதற்காக நெல்லைப் பரப்பி வைத்திருக்கிறார்கள். அப்போது அவற்றைக் கொத்தித் தின்ன வந்த கோழியைக் கல்லெறிந்து விரட்டாமல், செல்வக் குடும்பப்பெண் ஒருத்தி, பொன்னால் செய்யப்பட்ட கனமான தன் காதணியைக் கழற்றி அதை எறிந்து விரட்டினாளாம். ஆனால், அக்காதணியானது கோழியின் மேல் படாது, கடற்கரை மணலில் சென்று விழுந்து, அவ்வழியே சிறுவர்கள் ஓட்டிச் சென்ற சிறுதேரினை மேலே செல்ல விடாமல் தடுத்ததாம். இதனை, பட்டினப்பாலையில் *(20—25)* கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகிறார். தங்கத்தை விடவும் தானிய மணிகள் சிறந்தவை என்பதை உணர்த்தும் இச்செய்தி, வெயிலின் அருமையைக் கூடுதல் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. பல நாட்கள் வீட்டுக்குள்ளேயே வைத்துப் புழுக்கம் ஏறிய பழம்பொருட்களைப் பாதுகாக்கக் கோடை வெயிலில் உலர்த்திப்




பேணுவது உண்டு. பருத்தி ஆடையைத் துவைத்து உலர்த்தும்போது படியும் சூரியக் கதிர் வெப்பம், தீய கிருமிகளை விரட்டுவதோடு, தோலுக்குத் தேவையான வைட்டமின்களையும் தருகிறது.

மின்சாரம் வந்த பிறகு, பௌர்ணமி நிலவின் அழகும் அமாவாசை இருளின் செறிவும் அறியப்படாது போயின. சுழலும் மின் விசிறிகள் வந்த பிறகு, தென்னை, பனை ஓலை விசிறிகள் காணாமல் போய்விட்டன. கதிரொளி படாத சுனையின் குளிர் நீரை, பிரிட்ஜ் பெட்டிகள் தருகின்றன. குளிரக் குளிரக் காற்று தரும் ஏ.சி. கருவிகள் மலிந்துவிட்டன. குளிர்சாதன வசதிகள் மிகுதியும் பெருகிவிட்டன. ஊரே ஏ.சி. போட்டதுபோல், குளிர்தரு நிழல் மரங்கள் நிறைந்து சுகம் தந்த நிலை மாறிவிட்டது. வீட்டுக்கு வீடு. ஏ.சி. விடுக்கும் வெப்பக்காற்றில் வீதிகள் கனல்கின்றன. கானல்நீர் ஓடும் கருந்தார்ச் சாலைகள் உருகிக் கனல்கின்றன. அனலும் புனலும் தருகிற மின்னாற்றல், அளவுக்கு அதிகமாய்ச் சூரிய வெப்பத்தில் கிடைக்கும் என்கிறார்கள். பற்பல இடங்களில் சூரிய மின் உற்பத்திக் கருவிகள் பயன்பாட்டுக்கு வந்திருக்கின்றன.

நிழலே இல்லாத வெளிகளில் முளைக்கும் கான்கிரீட் காடுகள் மின்சாரத்தால் மட்டுமே உயிர்வாழ்கின்றன. சில மணி நேரங்கள் மின்சாரம் நின்றால் தெரியும், அதன் சீரிய உதவி.

பற்றாக்குறையில் தவிக்கும் நம்மைவிடவும் தகிக்கும் வெயிலில் இருந்து புவியைக் காப்பாற்றும் தாவரங்களை யாரே நினைக்க வல்லார்?

ஓடும் தேரை வாடும் முல்லைக்குத் தந்து நடந்து வந்த வள்ளல் பாரியை, 'நிழல் இல் நீள் இடைத் தனிமரம்' என்று கபிலர் புகழ்ந்து பாடினார். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய மனநிலையைப் பாடி உணர்த்தினார் வள்ளலார். சொர்க்கத்துக்குச் செல்லும் வழி சொல்லும் காரியாசானின் அதற்காக ஆற்ற வேண்டிய கடமைகள் ஐந்து என்கிறார். குளம் தோண்டுதல், மரம் நடுதல், முள், புதர்களை அகற்றி வழிப்பாதை ஆக்குதல், தரிசு நிலங்களை உழுநிலங்களாக்குவதோடு, கிணறுகள் அமைக்கவும் வேண்டும் என்கிறது அவர்தம் பாடல்.

ஆங்கில மருத்துவம், தண்ணீரைக் கொதித்து ஆறவைத்துக் குடிக்கச் சொல்கிறது. ஊர் கூடிப் பருகும் நீர் தரும் ஊருணி நீரைச் சூரியனே பகலெல்லாம் காய்ச்சி, இரவெல்லாம் குளிர வைத்துக் காலையில் அனைவரும் பருகக் கொடுக்கிறான். இன்றைக்கு ஊருணி முதலான நீர்நிலைகள் பயன்பாடின்றி அழிந்து வருகின்றன. 'தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே' என்ற தமிழர்கள் தண்ணீர்ப் பந்தல் அமைத்து உதவினார்கள். நிழல்தரு மரங்கள் நட்டார்கள். அறச்சாலைகள் நிறுவினார்கள்.

இன்றைக்கு? அப்பழம் பெரும் புண்ணியங்களை மறந்ததோடு, போதிய அளவுக்கும் கூடுதலான ஆற்றலை வாரிச் சொரியும் சூரிய வெயிலின் அருமையும் உணரப்படவில்லை என்பதற்குச் சான்று, 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்கிற சொலவடை. பருவம் அறிந்து பக்குவமாக நடந்துகொள்ளச் சொல்லும் நிழலின் அருமையையும், வெயிலின் பெருமையையும் அறிந்து பயன்கொள்வோம்.




## தூக்கம் ஏன் மிகவும் முக்கியமானது?


தூங்குவது என்பது சாதாரண செயல் போல தோன்றினாலும், அது ஒவ்வொரு மனிதனுக்கும் மிகவும் அத்தியாவசியமான ஒன்றாகும். அதனால் தான் தூக்கப்பிரச்சனை உள்ளவர்களைக் கருத்தில் கொண்டு உலக தூக்க தினம் அனுசரிக்கப்பட்டு அவர்களுக்கு உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இன்றைக்கு இளைஞர்கள் இரவு வெகு நேரம் கழித்துத் தூங்குவதை வழக்கமாக கொண்டிருக்கிறார்கள். மனிதர்கள் தினமும் குறைந்தது 7 மணி நேரம் தூங்குவது மிகவும் அவசியம். இது உடல் மற்றும் மன ஆரோக்கியத்தைப் பேணுவதற்கு உதவுகிறது. குழந்தைகள் எட்டு மணி நேரம் தூங்க வேண்டும். சிறு குழந்தைகள் மற்றும் புதிதாய் பிறந்த குழந்தைகளின் தூக்க அட்டவணை மாறுபடும். அவர்கள் ஒரு நாளில் பெரும்பான்மையான நேரத்தை தூக்கத்தில் கழிப்பார்கள்.

மின்சார சாதனங்களான ஃபேன், மிக்ஸி, கிரைண்டர், டிவி போன்றவற்றை சிறிது நேரம் உபயோகித்தாலே அவை சூடாகிவிடும். அது போல மனித உடல் நாள் முழுவதும் உழைத்துக் களைத்து ஓய்வுக்காக ஏங்கும்போது அதைத் தருவது மிகவும் அவசியம். ஒரு நாளின் முடிவில் உடல் முழுவதுமாக களைத்துப் போகும்போது மனதும் சோர்வடைந்து விடும். அந்த நேரத்தில் தூக்கத்தை தழுவுவது உடலுக்கும் மனதிற்கும் நாம் செய்யும் மிகப்பெரிய நன்மையாகும்.

உடல் ஆரோக்கியம்:

போதுமான தூக்கம் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தை சீராக வைத்திருக்கும். பகல் முழுவதும் உட்கார்ந்தும், நின்றும், பயணித்தும் மேலும் பல உடல் ரீதியான செயல்பாடுகளில் ஈடுபடுகிறோம். இரவில் 7 மணி நேரம் உடலின் அத்தனை புலன்களுக்கும் ஓய்வு தருவது முக்கியம். மறுநாள் செய்ய வேண்டிய வேலைகளுக்கு உடல் தன்னை தயார்படுத்திக் கொள்ள நல்ல ஆழமான தூக்கம் அவசியம். கிரெலின் மற்றும் லெப்டின் போன்ற ஹார்மோன்களை தூக்கம் சமநிலைப்படுத்துகிறது. இதனால் ஒருவருடைய எடை அதிகரிக்காமல் இருக்க உதவுகிறது. நீரிழிவு மற்றும் இதய நோய் போன்ற நாள்பட்ட நோய்களின் அபாயத்தையும் தூக்கம் குறைக்கிறது. தினமும் இரவில் ஏழு மணி நேரம் தொடர்ந்து உறங்குபவர்கள் நீண்ட ஆயுளுடன் இருப்பார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அவர்களது நோய் எதிர்ப்பு அமைப்பு சீராக செயல்பட்டு உடலும் ஆரோக்கியமாக இருக்கும். நோய் தொற்று ஏற்படுவதும் குறையும்.

ஒருவர் நல்ல மனநிலையை பேணுவதற்கும் மன






பாறப்புறத் ராதாகிருஷ்ணன்

அழுத்த நிலைகளை நிர்வகிப்பதற்கும் தூக்கம் மிக முக்கியமானது. இரவில் நன்றாக தூங்காத மனிதர்கள் எப்போதும் எரிச்சல், சோர்வு, கவலை, படபடப்பு, பிறர் மேல் தேவையில்லாமல் கோபப்படுதல் போன்ற செயல்களை செய்வார்கள்.

அறிவாற்றல் அதிகரித்தல்;

மனிதர்களின் அறிவாற்றல் செயல்திறன், படைப்பாற்றல், ஒட்டுமொத்த மன ரீதியான செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கு குறைந்த பட்சம் 7 மணி நேர தூக்கம் அவசியம். இது ஒருவருடைய நினைவாற்றலை நன்றாக செயல்பட வைக்கிறது. மேலும் உணர்ச்சி ஒழுங்கு முறையையும் ஆதரிக்கிறது.

சரியாகத் தூங்காமல் இருந்தால் எழும் சிக்கல்கள்;

நீண்ட நாட்களாக சரியாக தூங்காதவர்களுடைய உடல் மற்றும் மன ஆரோக்கியம் கெட்டுப் போகும். இதய நோய், பக்கவாதம் போன்ற அபாயத்தை அதிகரிக்கும். உடல் எடை கூடுதல், நீரிழிவு நோயின் அபாயத்தை அதிகரித்தல், தன்னுடல் தாக்கக் கோளாறுகளின் அபாயம், புற்றுநோய் ஆபத்து, இளம் வயதிலேயே வயதானது போன்ற தோற்றம், மனநிலைக் கோளாறுகள், அறிவாற்றல் சரிவு போன்றவை ஏற்படும். மேலும் இரவில் சரியாக தூங்காத நபர்கள் பகலில் வண்டி ஓட்டிச் செல்லும்போது விபத்துகளை ஏற்படுத்தும் அபாயங்களும் உள்ளன. இரவில் சரியாக தூங்காத குழந்தைகளின் கல்வி கற்றல் திறனும் பாதிக்கப்படும்.

மேலும் அவர்கள் எப்போதும் எரிச்சலுடன் பிற குழந்தைகளுடன் சண்டையிட்டுக் கொண்டிருப்பார்கள். சரியாக தூங்காத பெண்களுக்கு ஹார்மோன் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகி சீரற்ற மாதவிலக்கு சுழற்சி, கருவுறுதலில் பிரச்சனை போன்றவை ஏற்படும்.

ஒருவரின் இயல்பான உடல்நலத்துக்கும்,



மனநலத்துக்கும் சரியான தூக்கம் மிகவும் அவசியம். தூக்கத்தின்போது, உடல் தசைகள், நரம்பு மண்டலம், மூளை ஆகியவை ஓய்வெடுக்கும். இதனால், நினைவுத்திறன் மேம்படும், நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். உடல்வலி, வீக்கம், உள்ளிட்டவையும் குறையும். உடல் வெப்பம் தணிந்து, உடல் புத்துணர்ச்சி பெறும். தூக்கத்தின்போது சுவாசம் மற்றும் எண்ணவோட்டங்கள் சீராவதுடன், அடுத்தநாள் அன்றாடப் பணிகளைச் செய்ய உடல் ஆயத்தமாகும். உணவு மற்றும் உடற்பயிற்சியைப் போலவே தூக்கமும் உடல்நலத்துக்கு இன்றியமையாதது. ஆரோக்கியமான ஒருவர் குறைந்தது ஏழு முதல் எட்டு மணி நேரம் வரை தூங்க வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப மாற்றங்கள், நாடுகளிடையே நேர மாற்றங்கள், வணிகப் பொருளாதார மாற்றங்கள், வேலைவாய்ப்புகளில் ஏற்படும் மாற்றங்கள், காலநிலை மாற்றங்கள் ஆகியவை தூங்கும் நேரங்களிலும் மாற்றங்களைக் கொண்டுவந்துவிட்டன. இதனால், பலர் தூக்கத்தை இழந்து துன்பப்படுகிறார்கள்.

வாழ்க்கை என்பது நேரத்திலானாது. பணியாற்றுவதற்கு ஒரு நேரம், உண்பதற்கு ஒரு நேரம், ஓய்வெடுப்பதற்கு ஒரு நேரம், பொழுது போக்குவதற்கு ஒரு நேரம் என்பது நாடுகளின் தட்பவெப்ப நிலைகளுக்கேற்ப இயற்கையால் விதிக்கப்பட்ட ஒன்று. இது நாடுகளுக்கு நாடு வேறுபடும். இதை நாம் பின்பற்றாதபோதுதான் உடலின் இயக்கத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டு, நோய்களுக்குப் பாதை இட்டுக் கொடுக்கின்றன.




தூக்கம் வராமல் தவிப்பதாகக் கூறிய 14,952 பேர்களில் 72 சதவீதம் பேர், கழிவறை செல்ல எழுந்திருப்பதே தூக்கம் தடைபடக் காரணம் என்று கூறியுள்ளனர். நேரம் தவறி உண்பது, தூங்குவது, இரவு தூக்கம் தடைபடக் காரணம் என 25 சதவீத பேரும், வெளிப்புறச் சத்தங்கள் மற்றும் கொசுக்கள் காரணமாக தூக்கம் கெடுகிறது என 22 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர். 9 சதவீதம் பேர் ‘ஸ்லீப் அப்னீயா’ எனப்படும் மூச்சுத் திணறல், குறட்டைவிடுதல் போன்ற மருத்துவ பிரச்னைகளால் தூக்கம் வரவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இரவுப் பணிகளில் ஈடுபடுவதால், இயற்கையான தூக்க சுழற்சி பாதிக்கப்படுவதாக 37 சதவீதம் பேர் கூறியுள்ளனர். 9 சதவீதம் பேர் இரவில் தூங்குவதற்கு குழந்தைகள் இடையூறுகளை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர். 6 சதவீதம் பேர் கைப்பேசி அழைப்புகள் தூக்கம் தடைபடுவதற்கு காரணம் எனத் தெரிவித்துள்ளனர். இரவு நேர தூக்கத்தின் போதான இடையூறுகளே நிம்மதியான தூக்கத்தை தடைசெய்கிறது என்று இந்த ஆய்வு பொதுவாக சுட்டிக்காட்டியுள்ளது.

மனித மூளை தனக்குள்ளேயே ஒரு ‘சர்க்காடியன் ரிதம்’ அதாவது, ‘தோராயமாக ஒரு நாள்’ என்று பொருள்படும் கடிகாரத்தை வைத்து இயங்கிக் கொண்டிருக்கிறது. இது மூளையின் ஒரு பகுதியான ‘சுப்ராச்சியாஸ்மாடிக் நியூக்ளியஸ்’ மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. அது 24 மணி நேரத்துக்கு




ஏற்றவாறு தனது செயல்களைத் திட்டமிட்டுச் செய்து கொண்டிருக்கிறது. அத்துடன், உணவு, ஹார்மோன்கள், உடலின் வெப்பநிலை, ரத்த அழுத்தம், இதயம் துடிப்பது, எழுப்புதல் போன்ற பல உடல் செயல்முறைகளையும் ஒழுங்குபடுத்துகிறது.

உடல் நலனைக் கருத்தில் கொள்ளாமல் பகல், இரவு என மாறி, மாறி பணியாற்றுபவர்களுக்கு, போதுமான தூக்கம் இல்லாமல், இதய நோய்கள், உயர் ரத்த அழுத்தம், பக்கவாதம், உடல் பருமன் மற்றும் சர்க்கரை எனப் பல்வேறு உடல்நலப் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என இந்த ஆய்வு எச்சரிக்கிறது.

மேலும் தூங்கச் செல்லும்முன் அதிக அளவில் தண்ணீர் அருந்தாமல் இருப்பதும், தொலைக்காட்சி, கணினி மற்றும் கைப்பேசி பயன்பாட்டைத் தவிர்ப்பதும், குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே உணவு உண்ணுவதும், மன ஒருமைப்பாடும் தூக்கத்தின் தரத்தை மேம்படுத்த உதவும் என்றும் இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

தூக்கம் என்பது மனித வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு அங்கம். தூக்கமில்லாதவன் துக்கத்துடன் தான் இருக்க வேண்டும். தூங்கும் போது தான் உடலும், மனமும் முழு ஓய்வை எடுக்க முடியும். ஒவ்வொரு நாளும் குறைந்த நேரம் தூங்குவதும் நல்லதற்கு தான் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ஒரு காபி இருந்தால் போதும், தூக்கத்தை நான் வென்று விடுவேன் என்று நினைக்கிறீர்களா? அல்லது நீங்கள் கற்பனை செய்திருப்பதை விட மிகவும் அசாதாரணமான வகையில் தூங்குவதற்காக போராடிக் கொண்டிருக்கிறீர்களா?

படுக்கையில் உடலைக் கிடத்துவதற்கு முன்னரே தூக்கம் கண்களைச் சுழற்றிக் கொண்டு வருவதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள், ஆனால் தூக்கம் உங்களுக்கு கண்டிப்பாகத் தேவைப்படுகிறதா என்பதை நீங்கள் உணர்ந்திருக்க முடியாது.

நாம் காலையில் விழித்தெழும்போதுதான், மீண்டும் பிறக்கிறோம் என்தை உணர்ந்து அன்றாடப் பணிகளுக்குத் திட்டமிடுகிறோம். அதே சமயத்தில், அதிகம் உண்டு, உழைப்பின்றி சோம்பேறியாகி அதிக நேரம் தூங்குபவருக்கு உடல் பருமன், மன அழுத்தம், இதய நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால், தேவையான அளவு தூங்கி, சுறுசுறுப்பாக உழைப்பவருக்கு வெற்றி நிச்சயம், ஆயுளும் கூடும் என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது. வெற்றிகரமான தொழிலதிபர்கள் மற்றும் உலகத் தலைவர்கள் இரவில் நான்கு மணி நேரம் மட்டுமே தூங்கினர் என்ற பெருமையான கதைகளை நீங்கள் கேட்டிருப்பீர்கள். ஆனால், பெரும்பாலான மக்களுக்கு அது சாத்தியமில்லை.

சில மணி நேரத்தில் தூக்கம் கலைந்து தெளிவாகிவிட்டாலும், சிறிது நேரம் தான் தூங்கினோம் என்ற தொடர் எண்ணம், உங்களுக்கு உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை பாதிப்பதாக அமைந்துவிடும். ஐந்து மணி நேரத்துக்கும் குறைவாகத்தான் தூங்குவது என்ற பழக்கம் தொடருமானால், மாரடைப்பு, பக்கவாதம் அல்லது புற்றுநோய் வருவதற்கான ஆபத்தை அதிகரித்துக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம். தூக்கக் குறைபாடு உங்கள் ஆயுளைக் குறைக்கும் என்று மருத்துவப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

வழக்கமான தூக்க நேர அட்டவணையைப் பின்பற்றுவதன் மூலம், பரிந்துரைக்கப்பட்டவாறு தினமும் இரவில் ஏழு முதல் எட்டு மணி நேரம் வரை தூங்குவதை உறுதி செய்து கொள்ளுங்கள். அதாவது தினமும் படுக்கைக்கு செல்லும் நேரமும், காலையில் எழும் நேரமும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் — வார இறுதி நாட்களிலும்.

இனியாவது சீக்கிரம் தூங்குங்களேன்....!!!



# வேர்

## தாய் மரத்தைத் தாங்கும் விழுதுகள் !

இயற்கை என்னும் பேராற்றலின் படைப்பில், பிரபஞ்சத்தில் பல வகையான உயிரினங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவை புல், பூண்டு, செடிகொடிகள், மரங்கள், ஊர்வன, பறப்பன, விலங்குகள், நீர்வாழ் உயிரினங்கள் என்ற வரிசையில் கடைசியாகத் தோன்றிய உயிரினமே மனிதன் எனப்பட்டவன். அவை ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு என்று வகைப்படுத்தப்படும். இந்த வரிசையில், மனிதன் மட்டுமே ஆறறிவு படைத்த உயிரினம். அந்த ஆறாவது அறிவுக்கு பகுத்தறிவு என்று பெயர். பகுத்தறிவு என்றால், பகுத்து அறிதல் என்னும் தன்மையைக் குறிப்பதாகும்.

மனிதனைப் போலவே மற்ற உயிரிகளுக்கும் சில அடிப்படை அம்சங்கள் பொதுவானவையே. பசி, தாகம், பயம், கோபம், போட்டி, சண்டை, ஆசை போன்றவை அதில் அடங்கும். ஆனால், தேவைகளைப் பொருத்து, மனிதனைப் போன்றே மற்ற உயிரினங்களிலும் இந்த தன்மைகள் வெளிப்படும். அவற்றுக்கு நல்லது எது, தீயது எது என பகுத்துப்பார்த்து செயல்படும் அறிவாற்றல் கிடையாது.

ஆனால், நல்லது எது, தீயது எது என்று பிரித்துப் பார்க்கக் கூடிய ஆறாம் அறிவை மனிதன் பயன்படுத்தும்போது, அதே ஆறாம் அறிவு அந்த செயல்களினால் ஏற்படும் பின்விளைவுகளையும், பிரித்துப் பார்த்து செயல்பட அவனுக்கு உதவுகிறது. அந்த ஆறாம் அறிவு சரியான வழியில் செயல்படுத்தப்படும்போது அதனால் விளைவது நன்மை என்றும், தவறான வழியில் பயன்படுத்தப்படும்போது அதனால் விளைவது தீமை என்றும் உறுதியாகிறது.

ஆரம்பநிலை உயிர்களில், இடப்பெயர்ச்சிக்கு உள்ளான உயிரினத்தின் ஜீவகாந்தமே திணிவு கொண்ட ரசாயனமாக மாற்றம் பெற்று, அவற்றுக்கு ஏற்பட்ட ஆற்றல் குறைவை ஈடு செய்துகொள்ள உதவியது. இத்தகைய சிறப்புப் பெற்ற இனம் தாவரம் ஆகும். சில தொடர்நிலை உயிர்கள், தாவரங்களைச் சார்ந்து, அவற்றை உண்டு வாழும் நிலை ஏற்பட்டபோது பாக்டீரியாக்கள் என்ற விலங்கினம் உருவானது. இவை போன்ற ஓரறிவு உயிரினங்கள் ஒன்றையொன்று விழுங்கி வாழும் நிலை உருவானபோது அவை 'அமீபா' என்று அழைக்கப்பட்ட "உண்ணி" இனமாக உருவானது.

இப்படியாக, தொடர்ந்த பரிணாம வளர்ச்சியில் "வாய்" என்ற சுவை உணர்கருவியை அடைந்தவை ஈரறிவு உயிர்கள் என்றும், மூக்கு"என்ற வாசனை உணர்கருவியை அடைந்தவை மூவறிவு உயிர்கள் என்றும், கண்கள்"என்ற ஒளியுணர் கருவிகளை அடைந்தவை நான்கறிவு உயிர்கள் என்றும், காதுகள்" என்னும் ஒலியுணர் கருவியை அடைந்தவை "ஐயறிவு உயிர்கள் என்றும், இறுதியாக பகுத்தறிவு என்ற சிறப்போடு தோன்றியவன் மனிதன் என்னும் உயிரினமாகும்.

தன் நிலை உணர்ந்து, இறுதியாக முழுமைப்பேறு என்னும் உச்ச நிலையை அடைவதற்கு தகுதி பெற்றவன் மனிதன் மட்டுமே. முழுமையை நோக்கிய பயணத்தில் இறைநிலை தனது இயல்பான



# தாங்கும் விழுது



மா.கல்யாண மோகன்


நிலையிலிருந்து ஊக்கம் பெற்று, நடத்தும் தன்மாற்றச் செயலே "இயல்பூக்கம்"என்பதாகும். உயிரினத்தின் மாற்றத்தில் நடைபெற்ற இயல்பூக்கச் செயல்களே, அடுத்தடுத்த இயல்புகள் கொண்ட உயிர்கள் உருவானதற்கு மூல காரணமாகும். இதைத்தான் இயற்கை என்னும் நந்தவனத்தில் இறுதியாகப் பூத்த மலர் மனிதன் என்று வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகிறார்.

பிறப்பால் மனிதரில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்ற பேதமில்லை. பொருளாதார ரீதியில் பின்தங்கியும், வாழ்வாதாரத்தில் குறைவு பெற்றும் உள்ளவர்கள் ஏழைகள் என்றும் பொருளாதாரத்தில் உயர்நிலை அடைந்தும், வாழ்வாதாரங்களில் நிறை நிலையில் உள்ளோர் செல்வந்தர் எனப்படுவதும் அவரவர் சமுதாயநிலை நோக்கில் குறிப்பிடுவதாகும்.

ஆனால், உண்மையில் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்தும், மனதளவில் நிம்மதியாகவும் நோய்களற்ற பூரண ஆரோக்கியத்துடனும் வாழ்பவர்கள் பணக்காரர் என்றும், பொருளாதாரத்தில் ஒங்கிய நிலையில் இருந்தும், நிம்மதியிழந்தும் பற்பல உடற்பிணிகளுடன் போராடி வாழ்பவர்களை ஏழைகள் என்றும் நமது முன்னோர் குறிப்பிடுகின்றனர். அறிவிற் சிறந்தோர் உயர்ந்தோர், அறிவிற் குறைந்தோர் தாழ்ந்தோர் என்று வள்ளுவப் பெருமானும், மேதினியில் இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர் என்று ஔவையாரும் குறிப்பிடுகின்றனர்.

இப்படி ஏதாவது ஒரு வழியில் குழந்தையாகப் பிறந்த மனிதன், வளர்ந்து, படித்து, பணியில் சேர்ந்து, திருமணம் முடித்து குழந்தைகளை ஈன்று மீண்டும் தாம் ஈன்றெடுத்த பிள்ளைகளை வாழ்வில் உயர்த்துவதிலேயே தங்கள் ஆற்றலையும் உழைப்பையும் செலவழித்து முதுமையை எய்துகிறான். இது எல்லா பெற்றோரும் செய்யக்கூடிய நியாயமான கடமைதான்.

ஆனால், தாங்கள் பட்ட கஷ்டம் தங்கள் பிள்ளைகள் படக்கூடாது என்ற நோக்கில் பின்னாளில் வளர்ந்து அபரிதமாக பொருள் ஈட்ட






வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு அவர்கள் படிப்பில் முதன்மையாக வரவேண்டும் என்று அவர்களைஓர் இயந்திரமாக மாற்றி, குறிப்பாக, அவர்கள் மருத்துவர், பொறியாளர், வழக்குரைஞர் போன்ற தொழில்களுக்கு மட்டுமே தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டுமென்றும், கண்டிப்பாக அவர்கள் வெளிநாடு சென்று வேலை பார்த்து பெரும் பொருள் ஈட்டவேண்டும் என்று அவர்களது மனதில் ஆசைத் தீயை பெற்றோர்களே வளர்த்து விடுகிறார்கள்.

அவர்களும் பெற்றோர் விரும்பியபடி படித்து வெளிநாடு சென்று பெரும் பொருள் ஈட்டி முகம் தெரியாத வெளிநாட்டார் மத்தியில் வாழ்க்கையை நடத்துகிறார்கள். கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் தங்கள் தாய் தந்தையரையும், தனக்கு கல்வி கொடுத்து ஆளாக்கிய தாய் நாட்டையும், தன் சமுதாயத்தையும் துச்சமாக மதிக்கின்ற நிலைக்கு வந்துவிடுகிறார்கள்.

இந்த நிலையில் இந்த பிள்ளைகளுடைய வெளிநாட்டு வாழ்க்கையைப் பெருமையாக நினைத்துக் கொண்டு, மகனின் பெற்றோரும், மருமகளின் பெற்றோரும் ஆறாறு மாதம் ‘ஷிப்ட்’ முறையில் பேரக் குழந்தைகளை வளர்ப்பதற்காக வெளிநாடு சென்று வருகிறார்கள். இவர்கள் முதுமை முற்றிய நிலையில் இயலாமை வந்தவுடன் வெளிநாடு செல்ல முடியாமல் சொந்த மண்ணில் அநாதைகளாய் வாழ்கிறார்கள். பேரக் குழந்தைகள் வளர்ந்தவுடன் மகனும் மருமகளும் இவர்களை முழுமையாக நிராகரிக்கும் நிலை வந்து விடுகிறது. இப்போது இந்த ஏமாந்த பெற்றோருக்கு மிஞ்சுவதெல்லாம் விரக்தி ஒன்றுதான்.

இனி, எல்லாவற்றுக்கும் வேலைக்காரர்களை நம்பி வாழ வேண்டிய நிலை. இவர்கள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனால்கூட பிள்ளைகள் வருவதில்லை. அவர்கள் உறவினர்களை அழைத்து எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று நியமனதாரர்கள் மூலம் ஈமச்சடங்குகளை முடித்து விடும் அவலம் அரங்கேறுகிறது.

ஆனால், பெற்றோரை நிராகரிக்கும் வெளிநாடுவாழ் பிள்ளைகள் இதே பெற்றோர் சுயமாக உழைத்து பெருக்கி வைத்த சொத்துகளை மட்டும் நிராகரிப்பதில்லை. சில நாள்களுக்குப் பிறகு சொந்த நாட்டுக்கு வந்து தன்னோடு பிறந்த மற்ற உடன் பிறப்புகளுடன் சமரசம் செய்து கிடைத்த சொத்தை எடுத்துக் கொள்கிறார்கள்.


சொந்த மண்ணில் பிறந்து அந்த மண்ணின் சமுதாயம் உற்பத்தி செய்து கொடுத்த உணவை உண்டு, காற்றை சுவாசித்து, நீரைப் பருகி, இந்த சமுதாயத்தின் உழைப்பில் பட்டம் பெற்று, பின்






மரபணுக்கள் மூலம் பெற்ற அறிவையும், ஆற்றலையும் வேர்களாகக் கொண்டு வளர்பவன் மனிதன். அவனுடைய முதுமைக் காலத்தில், ஆலமரத்தின் விழுதுகள் மரத்தைத் தாங்கிப் பிடிப்பதுபோல், அவனுடைய பிள்ளைகள் அவனைத் தாங்கிப் பிடிக்க வேண்டும்.

ஓரறிவு இனமான ஆலமரம், தன் சொந்த மண்ணை மறந்து, வெளிநாடு சென்று வேலை செய்து, பொருளீட்டி, வெளிநாட்டில் வேலை எப்போது இல்லாமல் போகுமோ என்று பயந்து பயந்து வாழ்வதில் என்ன பெருமை இருக்கிறது?




நம் மண்ணை ஆங்கிலேயர் ஆக்கிரமித்து அவர்கள் நம்மை ஆட்சி செய்வதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், போராடி அவர்களை விரட்டிய நாம், பின் எதற்காக அவர்கள் மண்ணில் வாழ ஆசைப்படவேண்டும்? ஏன் இந்த முரண்பாடு? அடுத்தவரை அண்டிப் பிழைக்கும்போது, நாம் நம் தன்னம்பிக்கையை இழக்கிறோம் என்பதே எதார்த்தம்.

சில ஆண்டுகளுக்கு முன் தகவல் தொழில்நுட்பத் துறையில் "சுணக்க நிலை ஏற்பட்டபோது வெளிநாடுகளில் அந்தத் துறையில் பணிபுரிந்த பலர், வசதியான வாழ்க்கை ஒரே இரவில் பறி போனதை தாங்கிக் கொள்ள முடியாமல், குடும்பத்துடன் தற்கொலை செய்துகொண்டதை நாம் நினைவில் கொள்ளவேண்டும்.

பெற்றோர் அல்லது மூதாதையர்களின் இறுதி நாள்களில் தன்னைத் தாங்கிப் பிடிக்கும் என்ற நம்பிக்கையில்தான், ஆரோக்கியமாக இருக்கும்போதே விழுதுகளை ஈன்று கொள்கிறது. அந்த விழுதுகள் தரை நோக்கி வளர்ந்து, மண்ணுக்குள் சென்று வேர்பிடித்து தன் தாய் மரத்தை தாங்கிக் கொள்கின்றன. இன்றைய விதை நாளைய விருட்சமாகும் என்பதும், இன்றைய விருட்சம் நாளை பட்டுப் போகும் என்பதும், படைப்புத் தத்துவத்தின் மாற்ற முடியாத விதி.

விருட்சங்களே விழித்துக் கொள்ளுங்கள். வான் நோக்கி வளர்ந்து நிற்கும் தாய்மரத்தை, நிலம் நோக்கி தங்களையே புதைத்துக் கொண்டு தாய் மரத்தை தாங்கும் விழுதுகளாய் இன்றைய இளைய சமுதாயம் வாழ்ந்து காட்டட்டும்.

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

2025

## JANUARY




## FEBRUARY





## MARCH




## APRIL




## MAY




## JUNE




## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | | |


## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |


## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email:
editor@ithamil.com


VARSHA™
IDLI/DOSA BATTER
Let's eat the Best!